வரலாறு

ஆண்டு 11

ஆக்கம்

கலாகுணராசா, B. A. (Cey)

மீள்பார்வை:

க. குணராசா, B. A. Hons. (Cey), M. A., S. L. A. S.

விற்பனையாளர்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை

யாழ்ப்பாணம்

விலை ரூபா 25/-

yearly
XHC
XHC

வரலாறு

(புதிய பாடத்திட்டம்)

ஆண்டு: 11

ஆக்கம்

கமலா குணராசா. B. A. (Cey)

(வரலாற்றாசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.)

மீள்பார்வை;

க. குணராசா B.A. Hons. (Cey) M. A. S. L. A. S.

கமலம் பதிப்பகம்,
82, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வரலாறு

பாடத்திட்டம்

ஆண்டு 11

(33 பாடவேளைகள்)

1, இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி

(13 பாடவேளை)

1. 1. பின்னணி
1. 2. கி. பி. 1796 தொடக்கம் 1818 வரை.
1. 3. கி. பி. 1818 தொடக்கம் 1931 வரை.
1. 4 கி பி 1932 தொடக்கம் 1948 வரை.
1. 5. பிரித்தானியர் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி
1. 6. உணவுப் பயிர்ச் செய்கை.
1. 7. போக்கு வரத்தும் தொடர்பாடலும்.
1 8. இலங்கையில் அரசியல் சமயமறுமலர்ச்சி
1. 9. 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதாரசமூக மாற்றங்கள்

2, மனித உரிமைகளை வென்றெடுத்தல்

(08 பாடவேளை)

2. 1. ஆங்கிலேயப் புரட்சி.
2. 2. அமெரிக்க சுதந்திரப்போர்.
2. 3. பிரான்சியப் புரட்சி.
2. 4. இரசியப் புரட்சி.

3, கைத்தொழிற் புரட்சி

(04 பாடவேளை)

4, குடியேற்றவாதத்தின் ஆரம்பம் வளர்ச்சி வீழ்ச்சி

(08 பாடவேளை)

அத்தியாயம்: 1

1. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி

1. 1. பின்னணி.

1. 11 பிரித்தானியர் இந்தியாவுக்கு வருதல்: இலங்கையில் 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பியரின் ஆட்சி நிலவியது. இந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியபின்னர் 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வியாபார ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி, 17 ஆம் நூற்றாண்டில் பண்டகசாலைகளும் கோட்டையிருப்புகளும் அமைத்தனர் 18 ஆம் நூற்றாண்டில் இந்திய அரசுகளை அடிமைப்படுத்தத் தொடங்கினர்.

மொகலாயப் போரரசின் வீழ்ச்சி இந்தியாவில் பிரித்தானிய ஆட்சி வலுப்பெற ஏதுவான காரணமாக அமைந்தது. மொகலாய மன்னர்கள் இழந்திக்காலத்தில் தமது உண்ணாட்டு எதிரிகளைச் சமாளிக்க பிரித்தானியரின் உதவியை நாடினர். பிரித்தானியர் படை உதவிக்கு ஈடாக முதலில் வியாபார உரிமையையும் பின்னர் படிப்படியாக ஆதிக்கத்தையும் வலுப்படுத்திக் கொண்டனர்.

1. 12 இந்தியாவில் பிரான்சிய-பிரித்தானியப் போட்டி: பிரித்தானிய கிழக்கிந்தியக்கம்பனி 17 ஆம்நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவாகிப் படிப்படியாக ஆங்கில அரசாங்கத்திடமிருந்து போர்ப்பிரகடனம். சமாதானம்நாணயம் வடித்தல், தரை, கடற்படைகள் வைத்திருக்கவும் உரிமைகள் பெற்றிருந்தது. 18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனி சென்னை, கல்கத்தா போன்ற முக்கிய துறைமுகங்கள் நகரங்களில் மட்டுமன்றி இந்தியாவில் பல பகுதிகளிலும் ஆதிக்கம் பெற்றது இதேவேளையில் பிரான்சியக் கம்பனி பாண்டிச்சேரியிலும் ஒரு சில இடங்களில் ஆதிக்கமும் குறைவான வியாபாரமும் கொண்டிருந்தது மட்டுமன்றி கடற்படை வலிமையற்றதாகவுமிருந்தது.

கி. பி. 1744 ஆம் ஆண்டு ஆஸ்திரிய வாரிசுரிமைப் போருக்காக இங்கிலாந்துக்கும் பிரான்சிற்குமிடையே ஐரோப்பாவில் மூண்ட போர் இந்தியாவிலும் பரவியது தொடர்ந்து நடந்தபோரில் பிரித்தானியரின் ஆதிக்கம் மேலும் மேலும் வலுவடைந்தது. கி. பி. 1756 ஆம் ஆண்டிலிருந்து ஏழாண்டுப் போர் இரு நாடுகளுக்குமிடையில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் நடைபெற்றது. முடிவில் ஏற்பட்ட பாரீஸ் சமாதான உடன்படிக்கையின்படி இந்தியாவில்பிரித்தானியரின் ஆதிக்கம் வலுப்பெற்றது. இந்தியாவில் பிரித்தானியர் பிரான்சை வெற்றி கொண்டது அவர்கள் பொருளாதார பலத்தாலும் கடற்படைப் பலத்தினாலுமேயாகும், இவ்வாறு ஆதிக்கம் பெற்ற கம்பனியும் பின்னர் பிரித்தானிய அரசர்களும் இந்தியா முழுவதையும் தமது ஆதிக்கத்திற் குட்படுத்தி கி. பி. 1947 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர்.

1.13 திருகோணமலைத் துறைமுகத்தின் முக்கியத்துவம்: 18 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் பிரான்சியரும் பிரித்தானியரும் தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக இடையறாது போரிட்டனர். கி பி. 1759 வரையில் இலங்கையின் கறுவா வியாபாரத்தின் முக்கியத்துவதினை அறிந்திருந்தனர். அக்காலத்தில் கிழைத்தேசங்களைக் கைப்பற்றுதற்கான சண்டைகள் வங்களா விரிகுடாவில் நடைபெற்றன. கிழைத்தேசங்களில் கடற்படை வைத்திருக்கக் கூடிய தகுந்த துறைமுகம் இல்லாமையினால் சண்டையின் போது பழுதுபட்ட கப்பல்களைத் திருத்துவதற்காக பம்பாய்த் துறைமுகத்திற்கு கொண்டு சென்றனர். வடகிழக்குப் பருவக் காற்றுக் காலத்தில் உண்டாகும் புயலின் போது கப்பல்கள் மேற்குப் பக்கத்திற்கு அடித்துச் செல்லப் பட்டன. அக்கப்பல்கள் அப்பருவக் காற்று முடியும் வரை பம்பாய்த் துறைமுகத்திலேயே தங்கிநிற்க நேர்ந்தது இத்தருணங்களில் பிரான்சியப்படை சென்னையைத் தாக்கும் போதெல்லாம் பிரித்தானியரால் கடற்படையை அனுப்ப முடியவில்லை. எனவே மேற்கூறிய காரணங்களுக்காக வங்களா விரிகுடாவில் ஒரு துறைமுகம் ஆங்கிலேயருக்குத் தேவைப் பட்டது. அக்காலத்தில் ஒல்

லாந்தர் வசமிருந்த திருகோணமலையே சிறந்த இயற்கை துறைமுகமாக விளங்கியது அவ்வேளை இலங்கையின் கண்டி அரசனை கீர்த்தி ஸ்ரீராசசிங்கன் ஒல்லாந்தரை இந்த நாட்டிலிருந்து துரத்த ஆங்கிலேயரின் உதவியை நாடினன்.

1. 14 இ பி 1796 இல் பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றுதல்: கி. பி 1794 இல் பிரான்சிய புரட்சிக்காரர் ஒல்லாந்திக்கு படையெடுத்துச் சென்று பற்றேவியாக் குடியரசை ஸ்தாபித்தமையால் ஒல்லாந்து தேச அரசன் பிரித்தானியாவிற்குச் சென்று சரணடைந்தான். இச் சந்தர்ப்பத்தைப் பிரித்தானியர் பயன்படுத்தி திருகோணமலையைத் தாக்கி அதைக் கைப்பற்றியதுடன் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கற்பிட்டி, நீர்கொழும்பு முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். பின்னர் 1796 ஆம் ஆண்டு பெப்ரவரி 16 ஆம் திகதி கொழும்புக் கோட்டை சரணடைந்தது. சலுத்துறை, காலி, மாத்தறை என்பனவும் ஆங்கிலேயர் வசமானது ஒல்லாந்தர் வசமிருந்த கரையோரப் பகுதிகளெல்லாம் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனிக்குச் சொந்தமாயின.

1 .2. கி. பி. 1798 தொடக்கம் 1818 வரை.

1. 21 கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்தல்: பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனி இலங்கையின் கரையோரப் பகுதிகளைச் சென்னை அரசாங்கத்தின் பணிப்புரையின் கீழ் நிர்வகித்தது 1798 ஆம் ஆண்டுவரையுமே இவ்வாறு கம்பனி கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்தது. கரையோரப் பகுதிகளில் பெருமளவு சிங்கள ஆட்சி முறை சிறிதளவு மாற்றத்துடன் ஒல்லாந்தரால் நிருவகிக்கப்பட்டிருந்தது திசாவைகளாக ஒல்லாந்தரும் முதலியார்களாக சிங்களவரும் பணிபுரிந்தனர் இம் முறையை மாற்றி வரி அறவிடுவதற்கு ஆங்கில இராணுவ அதிகாரிகள் நியமிக்கப் பட்டதால், அதிக வருமானம் பெறும்

பொருட்டு தென்னை வரி, தலைவரி, ஆயப்பணம், உப்பு, மீன் கள், சாராயம் என்பவற்றின்மீது கூடுதலான வரிபதவிட் டார்கள். முதலியார் என்ற பதவியுள்ளவர்களின் அதிகாரம் குறைக்கப்பட்டது இவர்கள் தமக்குச் சொந்தமாகவிருந்த நிந்தகம் என்ற காணிகளையும் இழந்தனர் முதலியார் மா ருக்குப் பதிலாக தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட் ட 'ஒமில்தார்' என்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். வரி கொடுக்கமுடியாத சுதேசிகளுக்குப் பாரதூரமான தண் டனைகள் வழங்கப்பட்டன இதனல் கம்பனியின் நிர்வாகத் தை சிங்களப் பிரதானிகளும் சுதேசிகளும் வெறுத்து கிளர்ந் தெழுந்தனர்.

1. 22 வர்த்தகக் கம்பனி ஆட்சிக் கெதிராக எழுந்தகலகம்: பிரித்தானிய கிழக்கிந்திய கம்பனியின் கவறுன நிர்வா கத்தில் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்து 1797 ல் கலகம் செய்தனர். இக் காலத்திற்கு முக்கிய காரணம் தென்னை வரியாகும். மரம் காய்த்தாலென்ன காய்க்காது விட்டாலென்னவரிப் பணமாகக் கொடுக்க வேண்டியிருந்தது. தற்காலி கமாக முதலில் இவ்வரி நீக்கப்பட்டது. ஆனல் ரொபட் அன்ரூஸ் மீண்டும் இவ் வரியை அறவிடத் தொடங்கியதும் இக் கலகம் திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களி லெல்லாம் தீவிரமாக நடைபெற்றது எனவே இது பற்றி விசாரிக்க பிரித்தானிய அரசாங்கம் விசார ணைக் குழுவை அனுப்பியது மட்டுமன்றி, கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி யின் பொறுப்பில் வர்த்தக வரி வசூலித்தல் என்பனவும். பிரித் தானிய அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட தேசாதிபதியின் பொறுப்பில் நீதி நிர்வாகமும் இராணுவ அதிகாரமும் விடப் பட்டன. இவ்வாறு முதன் முதலாக நியமிக்கப் பட்டதே சாதி பிரெடறிக்நோத் 1798 இல் பதவியேற்றார்.

1. 23 இரட்டை ஆட்சி: 1798 முதல் 1802 ஆம் ஆண்டு வரை இலங்கையில் நிலவிய ஆட்சிமுறை இரட்டை ஆட்சி யாகும். 1797 இல் இலங்கையில் வர்த்தகக்கம்பனியின் ஆட்சிக்கெதிராக எழுந்த கலகத்தின் விளைவாக இந்த ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. இரட்டை ஆட்சி முறையின் இரு பிரதான அம்சங்கள் வருமாறு:

1. குடியேற்றங்களை நிர்வகிப்பது பிரித்தானிய அரசாங்கத்தின் பொறுப்பாக இருந்தது.
2. வரிகளைச் சேகரிப்பது பிரித்தானிய கிழக்கு இந்தியக் கம்பனியின் பொறுப்பாக இருந்தது.

எனவே இலங்கையில் ஏதோ ஒவ்வொரு வகையில் பிரித்தானிய அரசாங்கமும் பிரித்தானிய கிழக்கு இந்தியக் கம்பனியும் ஆட்சி செலுத்தின.

1. 24 பிரடறிக் நோத் ஆளுநரின் ஆட்சிக்காலம்: இரட்டை ஆட்சி முறையின் முதல் ஆளுநர் பிரடெறிக் நோத் ஆவார். இவர் பிரித்தானிய மன்னரால் 1798 இல் நியமிக்கப்பட்டாலும், வங்காள ஆள்பதிநாயகத்தினதும் கிழக்கிந்தியக் கம்பனியினதும் அதிகாரத்துக்குட்பட்டவராகச் சேவை செய்தார். இந்த ஆட்சி முறை தொடக்கத்திலேயே தோல்வியில் முடிந்தது. காரணம் கிழக்கிந்திய வர்த்தகச்சங்கத்தின் உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மிடையில் ஒற்றுமை நிலவவில்லை. கிழக்கிந்தியக் கம்பனி நோத்தின் சீர்திருத்தங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை.

நோத்திற்கு உதவியாக கியூகிளேகன் பிரதம செயலாளர் என்னும் பதவிக்கு நியமிக்கப்பட்டார். ஒமில்தார் என்ற சென்னை உத்தியோகத்தர்களை நீக்கி முதலியார், முகாந்திரம் என்பவர்களைச் சுதேசிகளிலிருந்து நியமித்தார். அரசிறை மேற்பார்வையாளர் பதவியை ஒழித்தார். கரையோர மாகாணங்களை நான்கு மாவட்டங்களாகப் பிரித்தார். ஒவ்வொரு மாவட்டமும் கோறளையாகப் பிரிக்கப்பட்டு முதலியாரின் பொறுப்பில் விடப்பட்டது. கோறளை பற்றுக்களாகவும் பற்றுக்கள் கிராமமாகவும் பிரிக்கப்பட்டு முறையே ஆராய்ச்சி வித்தானை என்பவர்களால் நிருவகிக்கப்பட்டது. தமிழ்ப் பகுதியில் மணியகாரரும் வன்னியில் வன்னியரும் நியமிக்கப்பட்டனர். இவர்களின் கீழ் உடையார், வித்தானைமார் கடமையாற்றினர்.

நோத் நீதிபரிபாலனத்தை இலங்கையில் சீர் திருத்தினார். 1799 ல் கிறிமினல் நீதிமன்று, 1800 இல் பிஸ்கால் நீதிமன்று 1801 இல் உச்சமன்று என்பன நிறுவப்பட்டு நீதிபரிபாலனம் புனரமைக்கப்பட்டது. இராஜகாரிய முறையை நீக்கினார்.

1802 இல் இரட்டைஆட்சி முறை நீக்கப்பட்டதும் ஆளுநரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டது. இவருக்குதவி யாக ஒரு ஆலோசனைச் சபையையும், அரைச் சுதந்திர நிதி துறையையும் ஸ்தாபித்தார்கள். இவர் கல்வியைச் சீர்திருத்து வதற்காக நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளார். நிலவளவைப் பகுதி. காணிப்பதிவு, வைத்தியப்பகுதி, தபால்கல்வி, கணக் குப் பரிசோதனை ஆகிய பகுதிகளை ஏற்படுத்தினர். 1802 இல் அம்மைப்பால் கட்டும் முறையை ஏற்படுத்தினர். எனினும் பொதுவாகக்கூறின் நோத் ஆளுநரின் பரிபாலனம் தோல் வியில் முடிந்ததென்பர் 1802 இல் கண்டிமீது எடுத்தபடை யெடுப்பும் தோல்வியில் முடிந்தது. இவரைப் பிரித்தானிய அரசாங்கம் தாய் நாட்டிற்கு திருப்பியழைத்தது.

1.25 தோமஸ் மெயிட்லாந்தின் ஆட்சிக்காலம்:- 1805 ஆம் ஆண்டு, யூலை 18 ம் திகதி இலங்கையின் ஆளுநராக தோ மஸ் மெயிட்லாந் பதவியேற்றார் இலங்கையின் சீர் குலைந்த பரிபாலனத்தை சீர்திருத்துவதிலேயே இவரின் கவனம் சென் றது. இராஜ காரிய முறையை மீண்டும் ஏற்படுத்தினர் மாகாணக் கோடுகள், யூரித்தீர்ப்பு முறையை இலங்கையில் நடைமுறைப்படுத்தினர்.

முஸ்லீம் சட்டக் கோவை இவரால் தொகுப்பிக்கப்பட் டது. ஐரோப்பியர் காணிகளைச் சொந்தமாக வைத்திருக் கும் உரிமையளித்தார். முதலியார்மார் செய்த நீதிச்சேவை நீக்கப்பட்டு நீதி பரிபாலனத் துறையிடம் விடப்பட்டது. சிவில்சேவை புணரமைக்கப்பட்டு சுதேசிகளுக்கும் இடமளிக் கப்பட்டது. கல்வித் துறையிலும் சிறந்த தொண்டாற்றி யமையால். இவர் சிறந்த நிர்வாகியாகக் கருதப்படுகிறார். நோத் தேசாதிபதி காலத்தில் அரசிறை வருமானம் மிகக் குறைவாகக் காணப்பட்டது. இதனை இவர் சீர்திருத்தி வரு வாயை அதிகரிக்கச் செய்தார். கடற் தொழிலாளர் பற்றாக் குறையை நீக்க இந்தியாவிலிருந்து தொழிலாளரை வரவ ழைத்தார். விவசாயத்துறையும் விருத்தி செய்யப்பட்டது 1811 ஆம் ஆண்டு யூலை 8 ஆம் திகதி உடல் நலக்குறை வால் பிரித்தானியாவிற்குத் திரும்பிச் சென்றார்.

1. 26. உடுரேபட்டு பிறவுண்றிக்கும் கண்டி இராச்சியமும் : பிறவுண்றிக் ஆளுநராக 1812 ஆம் ஆண்டு பதவியேற்றார். பிறவுண்றிக் ஆளுநராக இங்கு அனுப்பப்படும் போது கண்டியரசனுடன் நட்புறவை வளர்த்து வர்த்தகத்தை மேலும் பெருக்க வேண்டுமென அறிவுறுத்தப் பட்டிருந்தார். எனவே கண்டியரசனுடன் பிறவுண்றிக் உடன்படிக்கை செய்ய முயன்றபோது அரசன் மறுத்து விட்டார்

கரையோர மாகாணங்களில் அமைதியை நிலைநாட்டுவதற்கு கண்டி இராச்சியத்தோடு சினேகமாக நடந்துகொள்ள முயன்று பலமுறை தூதுவர்களை அனுப்பினர். ஆயினும் பயனளிக்கவில்லை. கண்டி இராச்சியத்தில் காணப்பட்ட குழப்பநிலையைப் பயன்படுத்தி போருக்கு பிறவுண்றிக் ஆயத்தமானார்.

1. 27. கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியும் 1815 ஒப்பந்தமும்: ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற விரும்பியமைக்கான காரணம் யாதெனில் அங்கு விளைந்த கறுவா மிளகு, பாக்கு என்பன போன்ற வாசனைத் திரவியங்களின் ஏக போக உரிமைக்காகவேயாகும். ஆயினும் வேறுசில காரணங்களும் இருந்தன அவை: கண்டி இராச்சியத்தின் எல்லைப் புறங்களிலிருந்த தீர்வை வரிகளை நீக்கி வியாபாரத்தில் கூடிய இலாபம் பெறுதல்; சுதேச அதிகார், குருமார்களின் அதிகாரத்தைக் குறைத்தல்; கண்டி இராச்சிய எல்லைப் புறங்களில் படைகளை நிறுத்தும் செலவைக் குறைக்கவும் கரையோரப் பிரதேசங்களுக்கு கண்டியூடாகத் தொடர்பை ஏற்படுத்துதற் காகவுமாகும்.

அக்காலத்தில் கண்டி, நாயக்கவம்ச மன்னரான் ஸ்ரீவிக்கிரம ராசசிங்கனால் ஆட்சி செய்யப்பட்டது. நாயக்கவம்ச மன்னராட்சியை ஒழித்து மீண்டும் சிங்கள மரபை தோற்றுவிக்க கண்டி அதிகார் பிலிமத்தலாவை சூழ்ச்சி செய்தான். தனக்குதவியாகப் பிரித்தானியரின் நட்பை நாடினான்.

பிலிமத்தலாவை பிரித்தானியர் பக்கம் சார்வதை அறிந்த ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் எகலப் பொலபை முதல் அதிகாராக நியமித்ததுடன் பிலிமத்தலாவையைச் சிரச்சேதம்

செய்வித்தான்: பிரதானிகள், பிக்குகள், சுதேசிகள் ஆகியோர் அரசனது கொடுங் கோன்மையை எதிர்த்த போது அவர்களில் பொரும்பாலோரைக் கொலை செய்தான். இதனால் பிரித்தானிகள் அரசனைப் பதவியிலிருந்து நீக்கி விட பிரித்தானியருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்ததுடன் மக்களையும் அரசனுக்கெதிராகத் தூண்டிவிட்டனர்: எகிலப் பொலவும் தனக்கெதிராகப் பிரித்தானியருடன் சதி செய்வதை அறிந்த அரசன் எகிலப் பொலவை நீக்கி மொலிய கொடையை முதல் அதிகாராக நியமித்தான். எகிலப் பொல பிரித்தானியரிடம் சரணடைந்தான். மொலியகொடையும் ஏனைய பிரிதானிகளும் பிரித்தானியருக்குதவ முன்வந்த சந்தர்ப்பத்தில் பிரித்தானிய வர்த்தகர்கள் கண்டியரசனால் கொலை செய்யப்பட்டதைச் சாக்காகக் கொண்டு பிறவுண்றிக் ஆளுநர் கண்டிமீது படையெடுத்தான்.

கொழும்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து ஒரே சமயத்தில் படைகள் கண்டி நோக்கிச் சென்றன. இப்படையெடுப்பு கண்டி மக்களை அரசனின் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவதற் காகவும் பிரித்தானியரின் தன் மானத்தைக் காப்பாற்றுவதற்காகவுமென ஆளுநர் மக்களுக்கு அறிவித்தமையால் பிரதானிகள் மட்டுமன்றி சுதேச வீரர்களும் மக்களும், படைகள் கண்டி மீது முன்னேறிச் செல்ல உதவினர்.

எனவே அரசன் ஓடி ஒளித்தான். ஆயினும் அவன் ஒளித்த இடம் எகிலப் பொலவால் காட்டிக் கொடுக்கப்பட்டு இறுதி நாயக்க வம்ச அரசன் சிறை செய்யப்பட்டு வேலூருக்கு அனுப்பப்பட்டு அங்கு 1832 இல் இறந்தான். 1948 வரை கண்டி பிரித்தானியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

1815 ஆம் ஆண்டு பிறவுண்றிக் ஆளுநர் ஓர் சமாதான உடன்படிக்கையை கண்டியின் மன்றத்தில் வாசித்துக் காட்டினர். அவையாவன: நாயக்கவம்ச அரசுரிமை முற்றுமாக நீக்கப்பட்டது; கண்டி இராச்சியம் பிரித்தானியரின் நேரடி நிருவாத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது: கண்டிப் பிரதானிகளும் தலைமைக்காரரும் தொடர்ந்து பதவிவகிப்பர்; கண்

டிச் சட்டமும், தேசவழமைச் சட்டமும் தொடர்ந்து வழக்கத்திலிருக்கும்: பெளத்தம், வழிபாட்டிடம் பேணப்படும்: ஆளுநர் மட்டும் மரண தண்டனை விதிக்கலாம் என்பனவாம் கண்டியின் நிர்வாகத்தைக் கவனிக்க பிரித்தானியஸ்தானிகரும் அவருக்குதவியாக ஒரு சபையும் நிறுவப்பட்டது மொலியகொடை மீண்டும் முதல் அதிகாரியாக நியமிக்கப்பட்டான்.

1.28. 1818 இல் விடுதலைப் பேராட்டமும் மத்தியமலை நாட்டில் பிரித்தானியர் ஆட்சி உறுதியானதும்: 1815 இன் உடன் படிக்கைமூலம் அதிகார்கள், பிரதானிகளின் அதிகாரங்களைத் குறைத்ததுடன். பிரித்தானிய அதிகாரிகளுக்குக் கட்டுப்பட வேண்டிய நிலைக்குள்ளானதால் அவர்கள் அதிருப்தியுற்றனர். எகிலப் பொலை அரசபதவி கிடைக்காமையால் பிரித்தானியருக் கெதிராக கலகங்களைத் தூண்டுவதில் கவனம் செலுத்தினான். சிலர் மரபுமன்ற ஆட்சிமுறையை விரும்பவில்லை சிலர் அரசனை பதவியிலிருந்து நீக்கியதை விரும்பவில்லை எல்லோருக்கும் சமமான ஆட்சியை பிரதானிகள் விரும்பவில்லை. கிறிஸ்தவ ஆட்சியை குருமாரும் பௌத்த சங்கமும் வெறுத்தது. சாதி முறைமைஒழிக்கப் பட்டதைக் கண்டமக்கள் வெறுத்தனர்.

. வெல்லசு பகுதியில் வாழ்ந்த முஸ்லீம்கள் தொகையில் குறைந்தவர்களாக விருந்து சிங்கள திசாவையை நீக்கி முஸ்லீம் அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி பிரித்தானியரைக் கேட்டபோது மரைக்காயர் என்பவர் முகாந்திரமாக நியமிக்கப்பட்டார். இதை வேளை புத்தபிக்கு ஒருவன் அரசுரிமை கோரிக் கலகம் செய்தான். இவனைப் பிரதானிகளும் மக்களும் ஆதரித்து பிரித்தானியக் கெதிராகக் கலகம் செய்தனர். ஊவாப்பகுதியின் திசாவை கெப்பிற் பொலை கலகத்தையடக்க பிரித்தானியரால் அனுப்பப்பட்டான். அவனும் கலகக் காரருடன் சேர்ந்து கொண்டான். பொலிய கொடையின் உதவியாலும் பிரதானிகளின் உதவியாலும் பிரித்தானியர் கலகத்தை அடக்கினர். கெப்பிற்றிப் பொல சிரச்சேதம் செய்யப்பட்டான். எகிலப் பொல மொறிஷியஸ்சிற்கு நாடு கடத்தப் பட்டான்.

புதிய பிரகடனம் ஒன்று 1818 இல் வெளியிடப்பட்டது அதன்படி கண்டி பிரித்தானிய மன்னனுக்குரியது: பிரதானியருக்கு வேதனமாகப் பணம் கொடுக்கப்பட்டது; பிரதானிகளின் அதிகாரம் வரையறுக்கப் பட்டது; கண்டியில் ஏனைய மதங்களைப் பரப்பும் உரிமை வலியுறுத்தப்பட்டது; கண்டி ஆளுநரின் நேரடி நிருவாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு பிரித்தானியரின் நேரடிநிர்வாகம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கும் ஏனைய அபிவிருத்திகளுக்கும் வழி வகுத்ததெனலாம்

1. 3. இ. பி. 1818 தொடக்கம் 1931 வரை

(அரசியல் திட்டவளர்ச்சி)

1- 31. கோல்புறூக் ஆணைக்குழு இலங்கைக்கு வருதலும் சமர்ப்பித்த விதந்துரைப்பும்: இலங்கையின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் வரவிலும் செலவு கூடியதாகக் காணப்பட்டது. இச் செலவை பிரித்தானியாவே கொடுத்து வந்தது இவ்வாறு பணம் செலவிடுவதை பிரித்தானியர் கண்டித்தனர் அத்துடன் வர்த்தக நிலையையும் மந்தமாக இருந்தது. மக்கள் இராஜகாரிய முறைமூலம் துன்பப் பட்டனர். அரசாங்கம் அநீதியாகவும் பாரபட்சமாகவும், தமது இஷ்டம் போல் ஆள்வதாகவும் குறை கூறப்பட்டதால், 1829 இல் கோல்புறூக் என்பவர் தலைமையில் ஒரு குழு அனுப்பப்பட்டது.

அரசாங்கத்தின் நிருவாகம். ஆளுநரின் சிவில் இராணுவ அதிகாரங்கள். உத்தியோகத்தரின் சம்பளம், வர்த்தகம், நிதி வரி, நிலமானியமுறை, விவசாயம், இராஜகாரியமுறை என்பன பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கோல்புறூக் என்பவரும், 1830 இல் நீதிபரிபாலனம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க கமறன் என்பவரும் அனுப்பிவைக்கப் பட்டார்கள்.

கரையோரம், கண்டி என்பன தனித்தனியாக அரசியல் பரிபாலனம் செய்யப்பட்டன. தமிழ் பகுதிகளில் பிறிதொரு பரிபாலனமுறை காணப்பட்டது, கரையோர நிருவாகத்திற் குதவியாக இருந்த அரசியற் சபையைக் கலந்தாலோசிபாது

தேசாதிபதி கடமையாற்றினர். ஆளுநர் அதிகாரம் மிக்க சர்வாதிகாரியாக விளங்கினர். இதனால் மக்கள் அறியாத முறையில் நடாத்தப்பட்டார்கள் இராஜகாரிய முறைமூலம் மக்களை அரசாங்கம் கூடியளவு வேலை வாங்கி விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தடுத்தது. வியாபாரத்தில் ஏக போக உரிமையை அரசாங்கம் கொண்டிருந்தமையால் மக்கள் இதனை வெறுத்தனர் இக் குறைபாடுகளை நேரில் சென்று விசாரித்தறிந்த கோல்புறூக்குழுவினர் 1832 ல் தமது அறிக்கையை சமர்ப்பித்தனர்.

இவர்களது அறிக்கையின்படி இலங்கையின் அரசியல் அமைப்பு 1833 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது இலங்கை முழுவதும் ஒரே ஆட்சிமுறையின் கீழ் கொண்டு வரப்பட்டது. இலங்கை வடமாகாணம், மத்தியமாகாணம், கீழ்மாகாணம், மேல்மாகாணம், தென்மாகாணம் என ஐந்தாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் அரச அதிபரின்கீழ் நிருவகிக்கப்பட்டது அவருக்குதவியாக சிவில்சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டார்கள் சிவில்சேவையில் இலங்கையர் சேர்க்கப்பட்டார்கள் எல்லாச்சட்டங்களும் ஆள்பதியினதும் சட்டக்கழகத்தினதும் பெயரில் இயற்றப்படல் வேண்டும் ஆங்கில மொழி ஆட்சி மொழியாக்கப்பட்டது. ஆங்கில மொழிப்பாடசாலைகள் பல அமைக்கப்பட்டன. கல்விக்குச் செலவிடப்பட்ட தொகை அதிகரித்து புதிய பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. கல்விக்குப் பொறுப்பாக கல்விச்சபை நிறுவப்பட்டது ஆளுநரின் அதிகாரக்கீழ் கட்டுப்படுத்தப்பட்டன. ஆளுநருக்குதவியாக 15 அங்கத்தவர்கள் கொண்ட சட்டவாக்கக் கழகமும் சட்டநிருவாகக் கழகமும் அமைக்கப்பட்டன. சட்டநிர்வாகக் கழகத்தில் ஆளுநருக்குதவியாக 5 அதிகாரிகள் கடமையாற்றினர். இராஜகாரிய முறை நீக்கப்பட்டது. அரசாங்கத்தின் ஏகபோக வியாபார உரிமை நீக்கப்பட்டு ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டது. நீதித்துறை ஐரோப்பியர் இலங்கையர் என்ற பேதமின்றி எல்லோருக்கும் ஒரேமுறையான நீதி, ஒரேவிதமான நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. உச்சமன்று, பிரதம நீதி அரசரதும் வேறு இரு நீதியரசரதும் பொறுப்பில் இயங்கியது.

ஒரே தன்மையான பரிபாலனம் இலங்கை முழுவதும் நடை பெற்றமையால் இலங்கையர் என்ற தேசிய உணர்வு ஏற்பட்ட கல்வி வசதியாலும் நிருவாகத்தில் சுதேசிகள் பங்கு பற்றிய தாலும் மத்தியதரவகுப்பினர் தோற்றம் பெற்று அரசியல் சீர்திருத்தங்களை வேண்டிக் கலகம் செய்தனர். உத்தியோகப் பற்றுள்ளவரும் ஆளுநரால் நியமிக்கப் பட்டதால் இவர்களில் பெரும் பாலோர் ஐரோப்பியராக இருந்தனர். அவ்வாறன்றி நியமனப் பெற்ற சுதேசிகரும் பிரித்தானியரை ஆதரிப் போராகக் காணப்பட்டனர். கோல்புறூக் அரசியல் யாப்பில் சில குறைகள் இருந்த போதும் இன்றைய ஜனநாயக ஆட்சி முறைக்கு வித்திட்ட அரசியல் அமைப்பென இதனைக் கருத இடமுண்டு.

1. 32. 1848 இன் கலகம்: 1825 இல் பாண்ஸ் ஆளுநரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப் பயிர்ச் செய்கையில் பின்னர் உத்தியோகப் பற்றற்ற ஐரோப்பியரும் இராணுவ அதிகாரி, சிவில் சேவை உத்தியோகத்தர் மட்டுமல்லாது ஆளுநரும் (மக்கன்சி) ஈடுபட்டமையால் சுதேசிகளது நலன்கள் அரச அதிகாரிகளால் புறக்கணிக்கப்பட்டன. அத்துடன் இலங் கையர் தமது விவசாய நிலங்கள், சேனைப்பயிர் நிலங்கள் என்பனவற்றை இழந்தது மட்டுமன்றி, 1841 இன் முடிக் குரிய நிலக் கட்டளைச் சட்டப்படி உறுதிப்படுத்தப்படாத சாணிகளெல்லாம் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டதால் நிலமற்றோர் தொகை மேலும் அதிகரித்தது. 5 மாகாணங் களாகப் பிரிக்கப்பட்டதால் நிர்வாகிகள் தலைநகருக்குத் தூரத்தே இருந்த மக்களின் நலன்களைப் புறக்கணித்தனர். விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் நிர்வகிக்கும் கன்ச பாக்கள் தொடர்ந்து இவற்றை கவனியாது விட்டமையால் விவசாயம் வீழ்ச்சியடைந்து மக்கள் வறுமையில் வாடினர். ஆனால் அரசாங்கமோ மக்கள் மீது மேலும் மேலும் வரிகளை விதித்தது.

1846 - 1853 வரை கோப்பிப் பயிர்ச் செய்கை மந்த நிலையடைந்ததும் கோப்பியின் ஏற்றுமதி வரி நீக்கப்பட்டமை யால் ஏற்பட்ட வருமான இழப்பை ஈடு செய்வதற்காக முத்திரை வரி கூட்டப்பட்டது. நாய்வரி, விருத்தைவரி,

துவக்குவரி, வீதிவரி, ஆயகாசு என்பன அறவிடப்பட்டன. தலதா மாளிகைக்குக் கொடுக்கும் 300 பவுன் நன்கொடை நிறுத்தப்பட்டு நிலம் மானியமாக வழங்கப்பட்டது. இவற்றால் மக்கள் வறுமையில் வாடினர். அரசாங்கத்தின்மீது வெறுப்புற்றனர். இதேவேளை பொருளாதாரம் குடித்தொகை பற்றிய மதிப்பீடொன்றை அரசாங்கம் மேற்கொண்டதை தவறான பிரசாரத்தினால் வரி விதிப்பதற்கான விபரத்திரட்டென மக்கள் தவறாகப் புரிந்து கொண்டனர். இதனால் 1848 யூலை மாதம் நாடெங்கும் கூட்டங்கள் நடாத்திய மக்கள், கச்சேரி முன்பாகச் சென்று துவக்கு வரியை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். குடியேற்றச் செயலாளர் சேர் எமர்சன் ரெனன்ட் மக்களைச் சமாதானப் படுத்தி அனுப்பினர்.

சில நாட்களின்பின் ஆயிரக்கணக்கான மக்கள் ஆளுநரிடம் மனு ஒன்றைக் கையளிக்கச் சென்றனர். 'கொழும்பு ஒப்சேவர்' பத்திரிகையின் ஆசிரியர் கிறிஸ்தோபர் எலியட் இம்முறையும் சமாதானம் செய்து திருப்பியனுப்பினர். ஆனால் நாடெங்கிலும் வரிகளை எதிர்த்துக் கலகங்கள் தோன்றின. மாத்தளைக் கலகக்காரர் வீடுகளை எரித்தும் உடைத்தும் கலகத்தை பெரிதுபடுத்தியதுடன் புரங்அப்பு என்பவனைக் கண்டியின் அரசனைப் பிரகடனம் செய்தனர். தம்புளைக் கலகக்காரர் கொங்கல பண்டாராவை அரசனை நியமித்தனர். இதனை ஆளுநர் ரொறிங்ரன் அரசாங்கத்திற்கெதிராகச் செய்த புரட்சியெனக் கருதி கண்டி, மாத்தளை, தம்புளை, குருநாகல் ஆகிய பகுதிகளில் படையியற் சட்டத்தைப் (மார்ஷல்லோ) பிரகடனம் செய்தார். இவரால் அனுப்பப்பட்ட படை வாரியப்பொலையில் கலகக்காரரைச் சந்தித்து 40 பேரைச் சுட்டதுடன், மாத்தளையில் பல கிராமங்களைத் தீக்கிரையாக்கியது. பொருட்கள் சூறையாடப் பட்டதுடன் பெருந்தொகையினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். புரங்அப்புவும், கொங்கலகொட பண்டாராவும் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனைப் பிரித்தானிய உத்தியோகத்தரும் இலங்கையரும் வன்மையாகக் கண்டித்து குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விசாரணை செய்யுமாறு விண்ணப்பித்த தன் பயனாய் டொறிங்டன் பிரபு திருப்பியழைக்கப்பட்டு

அண்டர்சன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். கலகத்தின்பின் இலங்கை விவசாயிகளின் நலன்களில் அக்கறை காட்டப் பட்டு பிற்காலத்தில் நீர்பாசனங்கள் புணரமைக்கப்பட்டு விவசாயம் விருத்தி செய்யப்பட்டது

1. 33ஆம் சட்ட வாக்கத்தில் சுதேசிகளின் பிரதி நிதித்துவம் அதி கரித்துச் சென்றவிதம்: 1833 ஆம் ஆண்டில் கோல்புறூக் யாப்பின்படி சட்டவாக்கக் கழகமும், சட்டநிருவாகக் கழ கமும் அமைக்கப்பட்டன. சட்டவாக்கக் கழகத்தில் 15 அங் கத்தவர் இடம் பெற்றனர் இவர்களில் 6 பேர் உத்தியோ கப் பற்றற்றவர். 96 பர் உத்தியோகப் பற்றுள்ளவர்க ளாவர். 6 உத்தியோகப் பற்றற்றவரில் 3 பேர் பறங்கியர், ஏனைய மூவர் சிங்களவர், தமிழர், பறங்கியர் ஆகியோரின் பிரதிநிதிகளாவர். எனவே இவர்களும் அரசாங்கத்திற்கு சார்பானவர்கள். ஆளுநரால் நியமிக்கப்பட்டமையால் மக்க ளைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.

இந்தயாப்பு 1910 ஆம் ஆண்டு மக்கலம் ஆளுநராக இருந்தபோது மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி சட்ட வாக்கக் கழக அங்கத்தவர் எண்ணிக்கை 21 ஆக்கப்பட்ட துடன் 11 பேர் உத்தியோகப் பற்றுள்ளவரும் 10 பேர் உத்தி யோகப் பற்றற்றவருமாவர். 10 பேரில் நான்கு பேரை கல்வி கற்ற மத்திய வகுப்பினர் தேர்ந்தெடுத்தனர். சேர் பொன் னம்பலம் இராமநாதன் 1912 இன் சட்டவாக்கக் கழகத்தின் கல்வியறிவுள்ள இலங்கையராகத் தெரிவு செய்யப்பட்டார். 1915 இல் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் ஏற் பட்ட கலகத்தின் போது படையிபற் சட்டத்தின் பிரகாரம் (மார்ஷல்லோ) பிரபலமான வர்கள் மீது இராசத்துரோகக் குற்றச் சாட்டு கொண்டு வரப்பட்டது சேர் பொன் இரா மநாதன் உடனே இங்கிலாந்து சென்று குடியேற்ற நாட்டுச் செயலாளரைக் நேரில் கண்டு தண்டனையை நிறுத்தியதுடன், விசாரணைக் குழுவை வரவழைத்து நீதியை நிலைநாட்டினர் இச் செயல் மூலம் இலங்கை அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பு இலங்கை மக்களிடமே விடப்படல் வேண்டுமென மக்கள் கோரியது மட்டுமன்றி ஜேம்ஸ்பீர்ஸ், பெரேரா போன் றோரின் முயற்சியால் இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிறுவப்

பட்டது. சட்டவாக்கக் கழக உறுப்பினர் தொகை கூட்டப் படல் வேண்டுமெனச் செய்த கிளர்ச்சியின் பயனாக 1924 இல் புதியயாப்பு நடைமுறைக்கு வந்தது. கொண்டுவரப் பட்ட யாப்பு மனிங் சீர்திருத்தமென அழைக்கப்பட்டது: சட்டவாக்கக்கழகஉறுப்பினர் தொகை 49 ஆக அதிகரிக் கப்பட்டது: 12 உத்தியோகப் பற்றுள்ளோர் 37 உத்தி யோகப்பற்றற்றவர். இவர்களில் 23 பேர் பிரதேசவாரி யாகத் தெரிவு செய்யப்பட்டனர். 8 பேர் ஆளுநரால் நிய மிக்கப் பட்டனர். 6 பேர் இனவாரியாகத் தெரிவு செய்யப் பட்டனர். இச் சபையில் இலங்கையர் பலர் பிரதிநிதித்துவம் வகித்தமையால் மீண்டும் கிளர்ச்சி ஏற்பட்டதன் பயனாக 1931 இல் மீண்டும் அரசியல் யாப்பு சீர்திருத்தியமைக்கப் பட்டது. சட்டவாக்க கழக வளர்ச்சியை நோக்கும் போது படிப்படியாக இலங்கையர் சுயாட்சி உரிமையைப் பெற்று ஈற்றில் சுதந்திரமடைவதற்கு இந்த அரசியல் யாப்புக்களை ஏணிப்படிகளாக அமைந்தன எனலாம்.

1,4 கி பி 1931 தொடக்கம் 1948 வரை (சுதந்திரத்தை நோக்கிச் செல்லல்)

1 - 41. கி.பி 1931 இல் டொனமூர் ஆணைக்குழு கவனத்தி லெடுத்த விதப்புரைகள்: கி . பி 1927 ஆம் ஆண்டு டொன மூர் பிரபு தலைமையில் ஒரு குழு அனுப்பப்பட்டது. இதில் சேர் மத்தியூநேதன், சேர் ஜியோபிரி பற்லர், இறம்மண்ட் சில்ஸ் ஆகியோரும் இடம்பெற்றனர். இவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டவை யாதெனில், பிரித்தானியரின் கொள்கையான படிப்படியான பொறுப்பாட்சியை இலங்கை யருக்கு வழங்குதல் என்பதை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கையில் அப்போது நடைமுறையிலிருந்த அரசியல் இங்கிலாந்தின் பாராளுமன்ற ஆட்சியுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தனர்

இவர்களின் விதப்புரையின்படி சட்டவாக்கக் கழகத்தி லிருந்த பெருந்தொகை அங்கத்தவர்கள் நிதி விஷயத்தில் அதிகாரமற்ற நிருவாகக் கழகத்துடன் ஒத்துழைக்காது

போனமையால் இரு சபைகளின் ஒற்றுமை யின்மை சட்டங் களை நிறைவேற்றுவதில் காலதாமதம் மட்டுமன்றி சட்ட வாக்கக்கழகம் நிறைவேற்றிய சட்டங்களை நிதி வசதிபோதா மையால் சட்ட நிருவாகக்கழகத்தால் செயல் படுத்த முடி யாதுள்ளமையையும் கண்டறிந்து பிரித்தானியாவிலுள்ளது போன்ற அரசாங்ககட்சி, எதிர்க்கட்சி முறையை ஏற்படுத்த விரும்பியதுடன் அதிகாரமும் நிருவாகப் பொறுப்புமுள்ள ஒரு சபையை ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத் தினர்.

அரசாங்கத்தை நடத்தும் முழுப் பொறுப்பையும் ஏற்கு மளவிற்கு இலங்கையர் தகுதியற்றவர் என்பதை உணர்ந்து, இலங்கையர் இடம் பெறும் அரசாங்க சபையை அமைப் பதாயின் சர்வசனவாக்குரிமையளிக்கப்படல் வேண்டும்; இன வடிப்படையின் அங்கத்துவமில்லாமல் போய்விடுமென்பதால் நியமன அங்கத்துவமுறையும் சிறுபான்மையினர் நலன் பேண நடைமுறையிலிருக்கவேண்டும்: தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவாகும் போது சகல இலங்கையரையும் பிரதிநிதித்துவப் படுத்த வேண்டும்: என அபிப்பிராயப் பட்டனர்.

அரசாங்கசேவையிலுள்ள உத்தியோகத்தர் நியமனம், உயர்வு ஆகியன பற்றி ஆளுநருக்கு ஆலோசனை வழங்க பொது சன சேவையாளர் ஆணைக்குழு நிறுவப்படல் வேண்டுமென விதந்துரைத்தனர். அதிகாரமும் பொறுப்புமுள்ள அரசாங்க சபைக்கு 50 அங்கத்தவர் பிரதேசவாரியாக தெரிவு செய் யப்படல் வேண்டும்; 8 நியமன அங்கத்துவர் 3 அரச உத்தி யோகத்தர்கள் நியமிக்கப் படல் வேண்டும்: 7 நிர்வாக சபைகள் தெரிவுசெய்யப் பட்டு விவசாயம், கல்வி, சுகா தாரக் கல்வி, தொழிலும் வர்த்தகமும், போக்கு வரவு என் நபகுதிகள் விடப்படல் வேண்டும்; இச்சபைகளின் தலைவர் கள் 7 பேரும் 3 அரச உத்தியோகத்தர்களும் (நிதி, நீதி அரச) மந்திரி சபையாக அமையவேண்டும்

ஆளுநர் அரசாங்கத்தின் மேற்பார்வையாளர். அரசாங்க சபையின் சட்டங்கள் இவரால் அங்கீகரிக்கப் படல் வேண் டும்: 2/3 பங்கினரின் அங்கீகாரத்துடன் சட்டங்கள் நிறை வேற்றப் படல் வேண்டும்: பிரித்தானிய அரசாங்கம் நிறை

வேற்றிய சட்டங்களை நிராகரித்தும் விடலாம். பிரித்தானிய பாராளுமன்றமும் இலங்கைக்குத் தேவையான நேரத்தில் சட்டங்களை இயற்றலாம் ஆளுநருக்கு அரசாங்கசபையின் சட்டங்களை நிராகரிக்கும் அதிகாரமில்லை. நிதிகாரியதரியும் பிரதமகாரிய தரியும் குடியோற்ற நாட்டுக் காரியதரிசிக்குக் கட்டுப்பட்டவர்கள். எனவே பிரித்தானியா இலங்கையின் நிருவாகத்தை இந்த உத்தியோகத்தர் மூலம் கட்டுப்படுத்த எண்ணியது.

1. 42 டொனமூர் அரசியல் அமைப்பு: இந்த அரசியல் அமைப்பு 1931 - 1947 ஆண்டு வரை நடைமுறையிலிருந்தது இதன் மூலம் இலங்கைக்கு சர்வசனவாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம். அரசாங்கசபை, நிருவாகக் குழுமுறை இலங்கை வாழ் 21வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலருக்கு சர்வசன வாக்குரிமை என்பன அளிக்கப்பட்டன.

இன அடிப்படையில் பிரதிநிதித்துவம் பெறுது பிரதேச அடிப்படையில் தேர்தல் மூலம் 50 பிரதிநிதிகள் தெரிவு செய்யப் பட்டார்கள். இம்முறை புகுத்தியதன் நோக்கம் இனங்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காக வாகும். சட்டவாக்கக் கழகம், அரசுக்கழகம் எனப் பட்டது. இதில் 61 அங்கத்தவர் இடம் பெற்றனர். பிரதேசவாரியாகத் தெரிவுசெய்யப் பட்ட 50 பேரும் இனவாரியாக ஆளுநரால் நியமிக்கப்பட்ட 8 பேருடன் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டச்செயலாளர் ஆகியோர் அங்கம் வகித்தனர். இக் கழகம் சட்டங்களையும், கட்டளைகளையும் ஆக்கியது. ஆளுல் ஆளுநரின் அங்கீகாரத்துடன் தான் சட்டமாகச் செயல் படலாம். நிதிச் செயலாளரும் சட்ட மூலங்களுக்கு வேண்டிய ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்த வேண்டும் அப்போது தான் சட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் எனவே அரசுக்கழகத்திற்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென்றே கூறவேண்டும்.

இந்தயாப்பின் படி நிருவாக அலுவல்கள் நிருவாகக் குழுவினுல் நடைமுறைப் படுத்தப் பட்டது. 58 அங்கத்தவரும் 7 குழுக்களாகப் பிரிந்து ஒரு தலைவரைச் தெரிவு செய்

வர். இவர்களுடன் 3 அரச உத்தியோகத்தரும் சேர்ந்து இக் குழுவில் அங்கம் வகித்தனர். 7 குழுக்களின் பொறுப்பில் உள்நாட்டு விவகாரம், விவசாயமும் காணியும், உள்ளூராட்சி சுகாதாரம், தொழில் கைத்தொழில், வர்த்தகம், கல்வி போக்குவரத்து, பொதுக்கட்டு வேலை ஆகிய அலுவல் கள் விடப்பட்டன. அரசுக்சழகத்தில் முதன்மையானவர் சபை முதல்வர் என அழைக்கப்பட்டார். உள்நாட்டு நிர் வாகப் பொறுப்பு மட்டும் இலங்கையருக்குக் கொடுத்த அரைகுறைப் பொறுப்பாட்சியென இதனைக் கூறுவர். ஏனெ னில் கட்சி முறை வளர வாய்ப்பில்லை. கூட்டுப் பொறுப் புள்ள அமைச்சரவை இல்லை. ஆளுநருக்கே திரும்பவும் கூடிய அதிகாரம் வழங்கப்பட்டது. எனவே இது இலங்கையரைத் திருப்திப் படுத்தவில்லை. திரும்பவும் 1947 இல் மாற்றம் ஏற் பட்டது டொனமூர் அரசியலமைப்பு 1931 - 1947 வரையும் இலங்கையில் நடைமுறையிலிருந்தது பிற்காலப் பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு வித்திட்ட அரசியல் யாப்பு இதுவெனலாம் அரசுக் சழகத்தில் 15 வருடங்கள் சபாநாயகராக இருந்த வர் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமியாவார்.

1. 43. சீர் திருந்தக் கோரிக்கை வலுப் பெற்றமையும் 1944 இல் சோல்பரி ஆணைக்குழுவினர் வாகையும்: சோல்புறூக் அரசியல் சீர் திருத்தங்களின் பின் இலங்கையின் பொருளாதார, சமுதாய நிலை வளர்ச்சியும் முன்னேற்றமுமடைந்தன. ஆங் கிலக் கல்வியால் மத்திய வகுப்பினர் தோற்றம் பெற்று அரசியலிலும், அரசாங்கத்திலும் ஈடுபட்டமையால் தேசிய உணர்வு வளரத் தொடங்கியது. டொனமூர் அரசியலமைப் பில் வாக்குரிமை வழங்கப்பட்டதும் மக்கள் அரசியல் விஷ யங்களில் மேலும் அக்கறை காட்டினர். இதனால் டொனமூர் அரசியலமைப்பை குறைகூறத் தொடங்கினர். ஒரு சாரார் இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமையால் சிறு பான்மையினர் ஒதுக்கப்பட்டனர் என்றும், ஒரு பகுதியினர் அரசாங்கத்தை நடத்தும் முழுப் பொறுப்பும் தமக்களிக்கப் படவில்லையென்று கூறினர். ஈ. டி. பெரேரா 7 தீர்மானங் களைக் கொண்டு வந்தார். இதில் தேசாதிபதியின் மிகை அதி காரம், மந்திரிமார், 3 அரச உத்தியோகத்தர்கள் பற்றிய

கண்டனங்களாகும். இதனால் அரசியல் சீர்திருத்த இயக்கம் ஆரம்பித்தது. அரச உத்தியோகத்தருக்குப் பதிலாக மந்திரி மார் நியமிக்கப்படல் வேண்டும், மந்திரிமாரின் அதிகாரங்கள் கூட்டப்படல் வேண்டும் பொதுசனசேவைக் கொமிஷன் திருத்தியமைக்கப்படல் வேண்டும் ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்படல் வேண்டும் என இந்த இயக்கம் கோரியது. இதனைச் சிங்களவர் ஆதரித்தனர். சிறுபான்மையினர் எதிர்த்தனர் மந்திரிமார் சபை ஏகமனதாகக் கேட்டுக் கொண்டால் மட்டுமே அரசியல் மாற்றம் செய்ய முடியுமென குடியேற்ற நாடுகளின் செயலாளர் அறிவித்தார்.

1935 ஆம் ஆண்டு அரசுக் கழகம் கலைக்கப்பட்டு நடைபெற்ற தேர்தலின் பின் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் 7 பேரும் சிங்களவரே இடம் பெற்றமையால் சிறுபான்மையினரின் ஆதரவின்றி அரசியல் சீர்திருத்தம் செய்ய முடியாதென குடியேற்ற நாடுகளின் செயலாளர் அறிவித்தார். 1937 இல் ஆளுநராக நியமிக்கப்பட்ட அன்ரூ கோல்டிக் கொற் சிறுபான்மையினரின் 50 வித இடங்களைக் கொடுக்கக் கூடாதென்றும், கூடியளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டுமென்றும் ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்படலாகாது என்றும், மந்திரிமாரும் அரச உத்தியோகத்தரும் ஒற்றுமையாக நடந்து கொள்ளவில்லை யென்றும் அரசாங்க நிர்வாகத்திற்கு பொறுப்பான ஒருவர் இல்லையென்றும், குடியேற்ற நாடுகளின் செயலாளர்க்கு எடுத்துக் கூறினர். 1939 இல் 2 ஆம் உலக யுத்தம் நடைபெற்றமையால் சீர்திருத்தங்கள் செய்யமுடிய விலலை. 1943 ஆம் ஆண்டும் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதன்படி உள்நாட்டு விஷயங்களில் முழுப் பொறுப்பு அளிக்கப்படுமென்றும் அரசியற் சீர்திருத்தம் ஆராயப்படுமென்றும் பாடையினதும் வெளிநாட்டு அலுவல்கள் பிரித்தானியர் பொறுப்பிலிருக்குமெனவும் அதிற் கூறப்பட்டது.

1944 ஆம் ஆண்டு சோல்பரிப்பிரபுவின் தலைமையில் சேர் பரோஸ், சேர்-ரீஸ் ஆகியோர் இலங்கை வந்தனர்.

1 44 சோல்பரிக் குழுவின் விதப்புரைகள்: இக்குழு இலங்கை மக்களது அபிப்பிராயங்களை பலவாறு கேட்டறிந்தபின் அரசியல் துறைகளை ஆராய்ந்து, பின் உள்நாட்டு விஷயங்

களில் பூரண பொறுப்புள்ள அரசாங்கம் நிறுவப்பட வேண்டுமென அபிப்பிராயம் கூறியது. 1945 ஆம் ஆண்டு ஆடி 11 ஆம் திகதி அறிக்கையை வெளியிட்டனர்.

பெரும்பான்மையினர் வாழும் பிரதேசங்களில் சனத் தொகை (75000) அடிப்படையிலும் சிறுபான்மையினர் வாழும் பிரதேசங்களில் 1000 சதுரமைலுக்கு ஒரு பிரதி நிதியும் தெரிவுசெய்யப்படல் வேண்டும்: 101 அங்கத்தவர் பிரதிநிதிகள் சபையில் இடம்பெறுவர், 95 பேர் தேர்தல் மூலமும் 6 பேர் ஆளுநரால் நியமிக்கப்படல் வேண்டும் எனவும், இதன் ஆயுட்காலம் 5 ஒருடங்கள் எனவும், மேற் சபை என்றொரு சபை அமையும் என்றும் சிபார்சு செய்தனர். அதில் 15 பேர் ஆளுநரால் நியமிக்கப்படல் வேண்டும். ஏனைய 15 பேர், பிரதிநிதிகள் சபையால் தெரிவு செய்யப்படல் வேண்டும். இச்சபை 'கபினெட்' என அழைக்கப்படும் இது நிருவாகத்திற்குப் பொறுப்பாகும் எனவும் சிபார்சு செய்தது.

இது பற்றிக் கலந்தாலோசிக்க அரசுக் கழகத் தலைவர் டி. எஸ். சேனநாயக்கா இங்கிலாந்துக்கு வரவழைக்கப்பட்டார். 1945 ல் இந்தியாவிற்கு டொமீனியன் அந்தஸ்து வழங்கப்பட்டது ஆனால் இலங்கைக்கு வழங்கப்படவில்லை. இதுபற்றி இவர் அங்கு வாதாடினார். 1945 ஐப்பசி 31 ஆம் திகதி வெள்ளை அறிக்கையின்படி டொமீனியன் அந்தஸ்து வழங்குவதாக கூறப்பட்டது. 1946 வைகாசி 15 இல் இலங்கையின் அரசியலமைப்பு பற்றிய பிரகடனம் பிரித்தானிய மன்னனால் வெளியிடப்பட்டது. சுதந்திரமான அரசாங்கசேவை, நீதிச்சேவை ஆணைக்குழு நிறுவுவதாகவும் ஆளுநருக்கு விசேட அதிகாரங்கள் வழங்குவதாகவும் சோல்பரி வித்துரையில் கூறப்பட்டது.

1.45 1948இல் இலங்கை சுதந்திரமடைதல்: இந்தியாவிற்கு டொமீனியன் அந்தஸ்து வழங்க பிரித்தானிய அரசாங்கம் முடிவு செய்தபோது இங்கிலாந்திற்கு சோல்பரித் திட்டம் பற்றிக் கலந்தாலோசனை செய்யச் சென்றிருந்த டி. எஸ். சேனநாயக்கா இலங்கைக்கும் அளிக்கப்படல் வேண்டுமென

வாதாடியதன் பயனாக இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்து வழங்க பிரித்தானியா சம்மதித்தது. 1945 இல் வெளியிடப்பட்ட வெள்ளைப் பத்திரத்தின்படி, சோல்பரி அரசியல் திட்டம் நடைமுறைப்படுத்திய சில காலத்தின் பின் டொமீனியன் அந்தஸ்து வழங்கப்படுமென உறுதிப்படுத்தப் பட்டது. பின்னர் பிரித்தானியாவிற்கும் இலங்கைக்கும் 1947இல் ஏற்பட்ட சுதந்திரச் சட்டத்தினாலும் ஒப்பந்தங்களின் வீலாவாகவும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் 1947 ஆவணி 15 ஆம் நாள் சுதந்திரமளித்தமையால் சிறிய தீவான இலங்கையை பிரித்தானியாவிலிருந்து நிருவகிப்பதிலுள்ள இடர்ப்பாடுகளைக் கருத்திற் கொண்டு 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

1.5 பிரித்தானியர் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி

1.51 16ம் நூற்றாண்டின் இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியமான அம்சம் பெருந்தோட்ட பொருளாதார முறையாக மாறியமை: 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கை உணவில் தன்னிறைவு பெற்ற நாடாக விளங்கியது. ஐரோப்பியரின் வருகையுடன் இந்நிலை மாறி சுயதேவை விவசாயம் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இலங்கையின் கறுவா வியாபாரத்தில் ஏகபோக உரிமையைப் பெறுவதற்காக வந்த ஐரோப்பியர் இலங்கையில் நடத்திய போர்களாலும் பொருளாதாரக் கொள்கைகளாலும் விவசாயம் வீழ்ச்சியுற்றது. ஒல்லாந்தர் இலங்கையில் பெருமளவு கறுவாவை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டார்கள் அவர்களைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் முதலில் கறுவாவையும் பின்னர் கோப்பி சிங்கோனா தேயிலை, றப்பர் என்பவற்றைப் பயிரிட்டனர். இதனால் சிறிய விவசாயநிலங்கள் பெருந்தோட்டங்களாக மாறின. இதனால் விவசாயம் வீழ்ச்சியடைய உணவுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதே வேளை இலங்கையில் உற்பத்தி செய்த பெருந்தோட்டப் பயிர்வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன இன்றும் இலங்கை ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார நாடாக விளங்குகிறது.

மத்திய மலைநாட்டில் கோப்பி வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கப்பட்டது. 1815 இல் கண்டி பிரித்தானியரால் கைப்பற்றிப் பட்டதும். 1823 இல் கம்பளையில் ஜோர்ஜ் பேட் என்பவர் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தார். இவரைத் தொடர்ந்து ஆளுநர் பாண்ஸ் 1825 ல் கங்கொ றுவ (போரதீனை) கோப்பித் தோட்டத்தைத் திறந்தார். ஆளுநர், இராணுவ அதிகாரிகள், சிவில்சேவை உத்தியோ கத்தர், பிரித்தானிய தனவந்தர்கள் இத் தொழிலில் பெரு மளவு ஈடுபட்டனர், ஏற்றுமதி வரி நீக்கப் பட்டது. இலங் கைக் கோப்பிக்கிருந்த மதிப்பால் இலங்கையில் கோப்பி விரை வில் உற்பத்தி பெருகியது. ஆயினும் கோப்பியின் உற்பத்தி 1853 வரையில் மந்தமடைந்து திரும்பவும் விருத்தியடைந்து 1890 வரை இலங்கையின் ஏற்றுமதியில் முதலிடம் வகித்தது.

1882 இல் கோப்பிச் செடிகளில் ஒரு வகை நோய் பர வியமையால் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தது. கோப் பிக்குப் பதிலாகச் சிங்கோனாவைப் பயிரிட்டனர் அதுவும்சில ஆண்டுகளில் வீழ்ச்சியுற்றது.

1839 ஆம் ஆண்டளவில் சிறிய அளவில் பரீட்சிக்கப் பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கை சில ஆண்டுகளில் பெருமளவு நிலப்பரப்பில் பயிரிடப்பட்டது. 1883 இல் அதி விரைவாக வளர்ச்சியடைந்தது. தேயிலைக்கேற்ற காலநிலையும் தரைத் தோற்றமும் மத்தியமலைநாட்டில் காணப்பட்டமையால் தேயிலைத் தோட்டங்கள் பெருமளவு தொடக்கப்பெற்றன: தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு வேண்டிய தொழிலாளர் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இடையிடையே தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. நமது நாட்டின் இத்தேயிலைத் தோட்டங்களின் வளர்ச்சியால் 1925 இல் தேயிலை ஆராய்ச்சிக்கழகம் நிறுவப்பட்டது பின் னர்தேயிலைப் பிரசாரசபை நிறுவப்பட்டது.

பிரித்தானியர் காலத்தில் ஏற்றுமதியில் இரண்டாவது இடத்தை வகித்த பொருள் இறப்பராகும். 1876 இல் பேராதனையில் முதன்முதல் நாட்டப்பட்டது றப்பர் 1900 ஆண்டில் பெருவிருத்தியுற்றது. 1910 ஆம் ஆண்டு றப்பர் பெருமளவு ஏற்றுமதி செய்யப்பட்டது.

அக்கால மூன்றாவது இடம்பெற்ற ஏற்றுமதிப் பயிர் தென்னையாகும். இது இலங்கையராலேயே உற்பத்தி செய்யப் படுகிறது. இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பயிரிடப் படுகிறது. நாட்டின் சுயதேவைக்குரிய பயிராகவும் விளங் குகிறது.

1. 53. 1897 இல் தரிசு நிலச்சட்டமும் மலைநாட்டு மக்கள், காணிகளை இழத்தலும்: 1887 ஆம் ஆண்டிலிருந்து இலங் கையில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள், குடியான வர்களின் காணியற்ற நிலையைத் தீர்க்கவில்லை, குடியான வர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை, பணம்படைத்தோர் விலைக்கு வாங்கியதால், குடியானவர்கள் மீண்டும் குத்தகை விவசாயிகளாயினர். காணி இழந்த குடியானவர்களும், காணியற்றவர்களும், அரச காணிகளை அடாத்தாகப்பிடிப் பதைத் தவிர்ப்பதற்காக, 1897 இல் தரிசு நிலச்சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டம் மறைமுகமாக உரிமை நிலைநாட்ட முடியாத காணிச் சொந்தக்காரரைப் பாதித் தது. மலைநாடடில் ஏராளமான காணிகள், காணி யுரிமையை நிலைநாட்ட முடியாமையால், அரசகாணி களாயின. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை விருத்தி செய்ய விரும்பிய ஆங்கிலேய அரசிற்கு இச்சட்டம் வாய்ப் பாக அமைந்தது. மலைநாட்டில் பரம்பரையாக நிலஉரிமை கொண்டிருந்த மக்களிடமிருந்து இச்சட்ட மூலம் சுவீகரித்த காணிகளில் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தேயிலைத் தோட்டங்களில் சுதேச விவசாயிகளால் வேலை செய்ய முடியவில்லை. தேயிலைத் தோட்டங்களில் கடின உழைப்பாளிகளால்தான் வேலை செய்ய முடியும். இலங்கையில் அத்தகைய கடின உழைப்பில் ஈடுபடக்கூடிய தொழிலாள வகுப்பினர் இருக்க வில்லை. ஆனால் பாண்ஸ் தேசாதிபதி இந்தியாவிலிருந்து தொழிலாளரை வரவழைத்தார். அவர்களின சந்ததியினரே இன்றும் மலையகப் பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழி லாளராக விளங்கும் தமிழ் மக்களாவர்.

1. 6 உணவுப்பொருள் பயிர்ச் செய்கை

1 61 நெற்செய்கை 19 ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் வர்த்தகப் பொருட்களின் விருத்தியினால் நமது விவசாய

நாடு வர்த்தக நாடாக மாறியது. நிலமானியமுறை ஒழிக்கப்பட்டது, விவசாயிகளுக்கு வேண்டிய நீர்ப்பாசனத்திற்கான குளங்கள் பாழடைந்தன. கன்சபாக்கள் முன்பு இவற்றைக் கவனித்தன. இப்போது அவை அதனைச் செய்யவில்லை. விவசாயிகள் வரிப் பளுவாலும் துன்புற்றனர். கோல்புறூக் விசாரணைக் குழுவினர் விவசாயிகளுக்கு வேண்டிய திருத்தங்களைச் செய்யும்படி வற்புறுத்தி 1845 இன்பின் நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்கியதுடன் கிராமச் சங்கங்களை (கன்சபா) மூன்னிருந்த நிலைக்குக் கொண்டு வந்தார்.

அரசாங்கம் விவசாயிகளின் நிலையைத் திருத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டது. உவாட் தேசாதிபதி கீழ் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் நீர்ப்பாய்ச்சும் வசதிகளை உண்டாக்கியமையால் விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். பதுளை, கண்டி, மாத்தளைப் பகுதியிலுள்ள குளங்களை மக்கள் திருத்திப் பயிரிட்டனர்.

கிறகறி, கோடன் ஆகியோர் ஆளுநராக இருந்த காலத்தில் அநுராதபுரம், ஊவா, சப்பிரகமுவாப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் அரசாங்கத்தின் உதவியுடன் விவசாயம் செய்தனர். உலர் வலயங்களிலும் விவசாய விருத்தி செய்யப்பட்டது. கிராமச் சங்கங்கள் செயல்படத் தொடங்கியதும் விவசாயம் எழுச்சியுற்றது. வைத்தியசாலை நிறுவப்பட்டதுடன் மக்கலம் ஆளுநர் காலத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடன் எடுக்க வசதி அளிக்கப்பட்டது.

1848 ஆம் ஆண்டுக் கலகத்தின்பின் இலங்கையரின் நலனில் பிரித்தானியர் பெருமளவு அக்கறை கொண்டனர். சேர் ஹென்றி உவாட் ஆள்பதி கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, இரக்காமம் குளங்களையும், தென் மாகாணத்தில் கிரமா ஊருபொக்கை குளங்களையும் திருத்தி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தினர். இதனால் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் விவசாயம் விருத்தியுற்றது. சேர் ஹோர்க்குலிஸ் ரொபின்சன் காலத்

தில் குளங்கள், கால்வாய்கள் திருத்தியமைக்க ஒரு விசாரணைச்சபை 1866 இல் நியமிக்கப்பட்டது சேர் உவில்லியம் கிரேகறி, திசமாறகம குளத்தைத் திருத்துவித்தார் நுகரகலாவாவி, தமன்கடுவை என்பவற்றைத் திருத்தி வடமேல் மாகாணத்திற்கு நீர் வசதியளிக்கச் செய்தார். யோத எலக் கால்வாயின் ஒரு பகுதியைத் திருத்தியமைத்தார் இக்கால்வாய் வழி காலவீவாவிலிருந்து அநுராதபுரிக்கு நீர் கொண்டு வரப்பட்டது.

ஆதர்கோடன் காலத்தில் 42 குளங்கள் 164 வாய்க்கால்கள் புணரமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கால வீவா குளம் முக்கியமானது. மாகாணங்களில் உள்ளூர் நீர்ப் பாய்ச்சற் சபையும் கொழும்பில் 1884 இல் மத்திய நீர்ப் பாய்ச்சற் சபையும் அமைக்கப்பட்டது.

சேர் றிட்வே 1900 இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தை அமைத்தார். கிழக்கு மாகாணத்திலும் திசமகாரூம, வலவ கங்கைப் பகுதியில் பெருமளவு நிலத்தில் பயிர்ச் செய்கை நடைபெற்றது. சேர் ஹென்றி பிளேக் தெகுறு ஓயாத் திட்டத்தையும், சேர் ஹென்றி மக்கலம் அல்லைத் திட்டம், மினிப்பே திட்டங்களை ஆரம்பித்தனர். இக்காலகட்டத்தில் நாட்டின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு விவசாய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன.

1.7 போக்குவரத்தும் தொடர்பாடலும்

1815 இல் கண்டி கைப்பற்றப்பட்டதும், பிரித்தானியர் கோப்பிச் செய்கையில் ஈடுபடத் தொடங்கினர். அத்துடன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோட்டைகளையும் போர் வீரர்களையும் பராமரிப்பதற்கு இலங்கையின் கரையோரப் பகுதிக்கும் மத்திய மலைநாட்டிற்குமிடையில் நிர்வாகத் தேவைகளுக்கும் போக்குவரத்து வசதிகள் தேவைப்பட்டன. இதன் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஆளுநர் பான்ஸ் என்பவராவர். இவருக்குதவியவர் ஸ்கின்னர் என்பவராவர்.

இவர் கொழும்பு - கண்டி வீதியை 1820 இல் அமைப்பித்தார். இது மட்டுமன்றி கரையோரங்களெல்லாம்

கொழும்பு - கண்டி வீதியுடன் இணைக்கப்பட்டன. பாலங்கள், ஏறக்குறைய 1220 கிலோ மீற்றர் நீளமுள்ள தெருக்கள் என்பன அமைக்கப்பட்டன. இதனால் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள மக்கள் வண்டிகள் மூலம் நகரப் புறங்களுக்குப் பிரயாணஞ் செய்யத் தொடங்கினர்.

முத்துக் குளிக்கும் துறைமுகங்களையும் தோட்டப்பகுதிகளையும் இணைப்பதற்கான வீதிகள் போடப்பட்டதுடன் கண்டி எல்லாப் பகுதிகளுடனும் இணைக்கப்பட்டது. சிவில் எந்திரிவியற் பகுதி கோல்புறூக் சிபார்சுபடி நிறுவப்பட்டு வீதிகள் அமைக்கப்பட்டன. பின்னர் இது பொது வேலைப் பகுதியாக மாறியது. 1867 இல் அமைக்கப்பட்டிருந்த வீதியின் நீளம் 4800 கிலோ மீற்றராகும். வீதிகள் அமைக்கப்பட்டதும் 1832 இல் தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் குதிரை வண்டிகள் மூலம் தபால் விநியோகம் நடைபெற்றது.

இங்கிலாந்தில் புகையிரதப் பாதை 1825 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் 1863 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1867 இல் கொழும்பு - கண்டிப் புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்பட்டது. கரையோரங்கள், மத்திய மலைநாடு என்பன கொழும்புடன் இணைக்கப்பட்டன. கொழும்பு - யாழ்ப்பாணப் பாதை 1905 இல் ஆளுநர் றிஜ்வே காலத்தில் போடப்பட்டது. இதனால் போக்குவரத்து மட்டுமன்றி தபால், தந்திச் சேவைகளும் துரிதமாக முன்னேற்றமடைந்தன.

ஆசியாக் கண்டத்தில் புகையிரதம் மூலம் தபால் சேவை முதன் முதல் இலங்கையிலேதான் ஆரம்பிக்கப்பட்டது. 1858 இல் கொழும்பிலிருந்து காலிக்கு மின்சக்தி மூலம் தந்தியனுப்பும் முறை ஏற்படுத்தப்பட்டது.

வானொலி மத்திய நிலையமொன்று 1927 இல் கொழும்பில் திறக்கப்பட்டது. அது உள்ளூர், உலகச் செய்திகளை ஒலிபரப்பியது.

இலங்கையில் மலிவான பொதுசனத் தொடர்புச் சாதனமான பத்திரிகை பிரித்தானியராலேயே ஆரம்பிக்கப்

பட்டது. ஆளுநர் ஹோட்டன் 'இலங்கை வர்த்தமானி' (கொழும்பு ஜேனல்) என்ற செய்தித் தாளை 1832இல் ஆரம்பித்தார். இதுவே இலங்கையின் முதலாவது செய்தித் தாள். இது கைவிடப்பட்டு 1834 இல் பிரித்தானிய வர்த்தகர் சிலர் 'கொழும்பு ஒப்சேவர்' என்ற பத்திரிகையை வெளியிட்டனர். இது அரசாங்கத்தைக் கண்டித்தமையால் அரச ஆதரவுடன் 'சிலோன் குரோனிக்கல்' என்ற பத்திரிகை 1837 இல் வெளியிடப்பட்டது இது நிறுத்தப்பட்டு, 1838 இல் சிலோன் ஹெரால்ட்' வெளிவந்தது. இது பின்னர் 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' எனப் பெயரிடப்பட்டது. 1947 இல் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு தொடர்பாடல் சாதனங்களான, போக்குவரத்து, தபால், தந்தி, வானொலி, பத்திரிகைச் சேவைகளை இலங்கையில் ஏற்படுத்திய பெருமை பிரித்தானியருக்குரியது.

1.8 இலங்கையில் அரசியல் சமய மறுமலர்ச்சி

1.81 மிஷனரிக் கல்வியும் அதன் விளைவுகளும்; போர்த்துக்கேய மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட கல்வி முறை ஒல்லாந்தராலும் வளர்ச்சியடைந்தது. நோர்த் ஆளுநர் காலத்தில் மீண்டும் கல்வியில் ஊக்கம் காட்டப்பட்டது பாடசாலைகளை நிருவகிக்கவும் ஆசிரியருக்கு சம்பளம் வழங்கவும் போதிய பணம் இல்லாததாலும் கல்விப் பொறுப்பு மிஷனரிகளிடம் விடப்பட்டது. முதலில் 1812 ஆம் ஆண்டு பப்டிஸ்ற் மிஷன் இலங்கைக்கு வந்தது இது 16 பாடசாலைகளை இலங்கையில் நிறுவியது. அதில் 2 பாடசாலைகள் கொழும்பிலிருந்தன. அதில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகள் கற்பிக்கப்பட்டன. ஏனையவை சிங்களப் பாடசாலைகளாகும்.

1814 ஆம் ஆண்டு வெஸ்லியன், மிஷன் பாடசாலைகளை ஆரம்பித்தது. இது தென்பகுதியில் சிங்களமொழிப் பாடசாலைகளையும் வடபகுதியில் தமிழ்மொழிப் பாடசாலைகளையும் நிறுவியது. குறிப்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய இடங்

களில் 90 பாடசாலைகளை நிறுவியது. தலைமையகம் கொழும்பிலிருந்தது. இவர்கள் இலங்கையில் இலவச பாடசாலைகள், ஆங்கிலப் பாடசாலைகள், அகடமி என்பவற்றை நிறுவினர். மதம் மாற்றம் இப்பாடசாலையமைத்தமையின் பின்னணி நோக்கம் ஆகும். சுதேசிகளுக்கு (சபிதார், சிங்களவர், முஸ்லீம்கள்) வேண்டிய மொழிக் கல்வியை மட்டுமன்றி ஆங்கிலம், புவியியல், விஞ்ஞானம் என்பன கற்பிக்கப்பட்டன. இங்கிலாந்தின் கல்வி முறையையொத்த கல்வியைப் பரப்பிய பெருமை இவர்களுக்குரியது இவர்கள் மத மாற்றத்தைச் செய்யக் கல்வியைக் கருவியாகக் கொண்டாலும் இலங்கைச் சுதேசிகளுக்கு எழுதப் படிக்க கற்பித்ததுடன் ஆங்கிலமும் கற்பித்தனர், சில பாடசாலைகளில் ஆங்கிலம் கட்டாயக் கல்வியாகக் கற்பிக்கப்பட்டது. பெண் பிள்ளைகளுக்கு தாய்மொழியை எழுதப்படிக்க கற்பித்தனர். ஆங்கிலப் பாடசாலைகளில் எண்கணிதம், ஆங்கிலம், ஆங்கில இலக்கியம் என்பன கற்பிக்கப்பட்டன. உயர்கல்விபை கொழும்பிலுள்ள அகடமியில் வழங்கினர். இந்த அகடமி 1825 இல் நிறுவப்பட்டது. 1829 இல் மூடப்பட்டது.

அடுத்தது 1816 ஆம் ஆண்டு இலங்கை வந்த அமெரிக்க மிஷனரியினர் யாழ்ப்பாணத்தைத் தமது நிரந்தரமான இடமாக்கினர். இவர்கள் இந்தியாவிற்கென வந்தவர்கள். அங்கு அவர்களைச் செயல்பட விடவில்லை. இதன் தலைமையகம் அமெரிக்காவில் பொஸ்தன் நகரமாகும் இவர்கள் கிராமப் பாடசாலை, மத்திய பாடசாலை, இலவசப் பாடசாலை என்பவற்றை நிறுவினர். வட்டுக்கோட்டையில் 18 பாடசாலைகள் தெல்லிப்பளையில் 19 பாடசாலைகள், உடுவிலில் 19 பாடசாலைகள், பண்டத்தரிப்பில் 12 பாடசாலைகள், மானிப்பாயில் 10 பாடசாலைகள் என எல்லாமாக 78 பாடசாலைகள் நிறுவப்பட்டன, இப்பாடசாலைகளின் நோக்கம் மதத்தைப் பரப்புவதன் மூலம் கல்வியையும் பரப்புவதாகும் வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில் ஆகிய இடங்களில் நிறுவிய பாடசாலைகளின் ஆசிரியர் பதவிக்கு வேண்டிய கல்வியளிக்கப்பட்டது. தெல்லிப்பளையில் ஆண்களுக்கான இலவச விடுதிப் பாடசாலையும் உடுவிலில் பெண்களுக்கான இலவச விடுதிப் பாடசாலையும்

நிறுவப்பட்டன வட்டுக்கோட்டை செமினறி, உயர் கல்விக் கென 1833 இல் நிறுவப்பட்டது. தமிழ், ஆங்கிலம், புவியியல், வரலாறு, எண்கணிதம், அட்சரகணிதம், கேத்திர கணிதம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

அடுத்து ஆங்கிலத் திருச்சபையும் 1817 இல் இங்கு வந்து பாடசாலைகளை நிறுவியது, காலி, யாழ்ப்பாணம், வத்தேகம, கண்டி ஆகிய இடங்களில் கிராமப்பள்ளி, மத்தியபள்ளி, விடுதிப்பள்ளி ஆகிய பாட்சாலைகளை நிறுவினர். 1834 இல் 53 கிராமப் பாடசாலைகளை நிறுவினர். தாய் மொழிமூலம் எழுதப்படிக்கவும், அத்துடன் ஆங்கிலக் கல்வியும் போதிக்கப்பட்டது. இப்பாடசாலைகள் கூடியளவு சமயச் சார்பானவை.

கோல்புறூக் குழுவினரின் விதப்புரைகளின்படி கொழும்பில் 1834 இல் ஒரு பாடசாலை சபையும், மாகாணங்களில் காரிய சபைகளும் நிறுவப்பட்டு ஆங்கிலக் கல்வி கட்டாயமாக்கப்பட்டது. கொழும்பு, கண்டி, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியது. 1836 இல் நிறுவப்பட்ட கொழும்பு அகடமி இன்றைய ரோயல் கல்லூரியாகும். அரசாங்க பாடசாலைகள் பெயரளவில் அங்கிலிக்கன் பாடசாலைகளாக இயங்கின. 1841 இல் பாடசாலைச் சபைக்குப் பதிலாக மத்திய பாடசாலைச்சபை நிறுவப்பட்டது.

1859 இல் கல்கத்தாப் பல்கலைக்கழகம் இலங்கையில் பிரவேசப் பரீட்சையை நடத்தத் தொடங்கியதால் 'கொழும்பு அக்கடமியல் குயின்ஸ் கல்லூரி' நிறுவப்பட்டு, பின்னர் மூடப்பட்டது. 1870 இல் பிரித்தானிய பல்கலைக்கழக உபகாரநிதி பெற்று ஜே. காசிச்செட்டி இங்கிலாந்து சென்றார். மோர்கன் அறிக்கையின்படி (1867)படி 'கல்வித் திணைக்களம் நிறுவப்பட்டது. பாடசாலைகளுக்கு உதவி நன்கொடைப்' பணம் வழங்கப்பட்டது 1870 இல் உதவி நன்கொடை பெற்ற பாடசாலையாக விளங்கிய வண்ணார் பண்ணை சைவப் பாடசாலை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் நிறுவப்பட்டது. இன்று நாவலர் மகா வித்தியாலயம் என்ற பெயரில் இயங்குகிறது.

இலங்கையில் ஐரோப்பிய மிஷனரிமாரும் அமெரிக்க மிஷனரிமாரும் பாடசாலைகளை நிறுவி நிருவகித்தமையால் எமது பாடசாலைகளில் நிலவிய கல்விமுறை அக்கால இங்கிலாந்தின் கல்வி முறையை ஒத்ததாகவிருந்தது. 1870 இல் வைத்தியக் கல்லூரி தாபிக்கப்பட்டது. 1880 ஆம் ஆண்டு தொடக்கம் கேம்பிறிஜ், சிரேஷ்ட, கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சைகள் இலங்கையில் நடாத்தப்பட்டன. 1873 இல் சட்டக் கல்விச் சபையும், 1893 இல் சுயமொழி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியும் 1903 இல் ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கல்லூரியும் தாபிக்கப்பட்டன. பின்னர் 1921 ல் கொழும்பில் பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1942 இல் முன்னிருந்த வைத்தியக் கல்லூரியையும் இணைத்து பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

இலங்கையின் கல்விநிலை, ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் உயர் நிலையில் விளங்கியது இதற்குக் காரணம் மிஷனரிமாரின் கீழ் நிருவகிக்கப்பட்டு அரசாங்க உதவியுடன் இயங்கியமையும் காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட மாற்றங்களும் ஆகும்.

பௌத்தப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்கு முயற்சித்த தலைவர்கள்:

19ம் நூற்றாண்டின் இறுதியில் பௌத்த சமயப் புத்துணர்ச்சியேற்பட்டது. பிரித்தானியர் கிறீஸ்தவ மதக் கல்விக்கே முக்கியத்துவ மளித்தனர். பௌத்த குருமார் கலாசாலைகளையும், பாடசாலைகளையும் ஸ்தாபித்தனர். சமயவாதங்கள், பிரச்சாரங்கள் மேற்கொண்டு மீண்டும் பௌத்தமதக் கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப முயன்றனர். 1839 இல் வண. வலானே சித்தார்த்ததேரோ பரமதம்ம தேசிய பிரிவேனுவை இரத்மலானையில் ஸ்தாபித்தார். 1873 ல் மாளிகாகந்த என்ற இடத்தில் வித்தியோதய பிரிவேனு ஸ்தாபிக்கப்பட்டது. 1876 ல் ஸ்ரீ தர்மலோக தேரோ, பெலியகொடையில் வித்தியாலயங்கார பிரிவேனுவை நிறுவினர். பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் சமயச்சார்பான தர்க்கங்கள் ஏற்பட்டன. 1871 இல் கம்பளையிலும் 1873 இல் பாணந்துறையிலும் நடைபெற்றது. பாணந்துறையில் நடைபெற்ற தர்க்கத்திற்கு தலைமை வகித்தவர் மிகெத்துவத்தை குணனந்த

தேரோவாவர். ஹிக்கடுவை சுறீ சுமங்கல தேரோவின் தலைமையில் திரிபீடக நூலின் மீளாய்வைக் பிக்குமார் மேற்கொண்டனர். பாணந்துறை விவாதம் பற்றியறிந்த ஒல்கொட் பிளவற்ஸ்கி அம்மையாரும் இலங்கை வந்து பிரம ஞான சங்கத்தில் சேர்ந்து பௌத்தமத, கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டுகள் புரிந்தனர். 1875 இல் நிறுவப் பட்ட பிரமஞான சங்கம் இலங்கையின் பல பகுதிகளில் பாடசாலைகளை நிறுவியது கொழும்பு ஆனந்தாக் கல்லூரி 1886 இல் இவர்களால் நிறுவப்பட்டதாகும். இப்பாடசாலை களில் பௌத்த சமயம், சிங்களம், பாலி சங்கதம், ஆங்கி லம், விஞ்ஞானம், கணக்கு என்பன கற்பிக்கப்பட்டது.

ஒல்கொட் அவர்களின் முயற்சியால் பௌத்தர்களுக்கு ஒரு கொடி ஆக்கிக் கொடுக்கப்பட்டது. வைகாசிப் பௌர் ணமியை விடுமுறைத் தினமாக ஆக்கினார். 1891 இல் மகாபோதி சங்கத்தை அநகாரிக தர்மபால அவர்கள் நிறுவி பௌத்த சமயத்திற்கும் கல்விக்கும் அளப்பரிய சேவை செய்தார். 1898 ஆம் ஆண்டு பௌத்த வாலிபர் சங்கம் தாபிக்கப்பட்டது. இலங்கையில் பௌத்த மக்களின் தலைவர்களாக விளங்கியவர்கள் அநகாரிக தர்மபால, வலிசிங்க ஹரிச்சந்திரா, டீ. பி. ஜயதிலக, ஆனர், வீ. டயஸ், அமதோரிஸ் மெண்டிஸ், ஆர். ஏ. மிரரண்டா, ஹேவவிதா ரண சகோதரர்கள் ஆகியோராவர். அநகாரிக தர்மபால பௌத்தர்களின் பண்பாட்டை அபிவிருத்தி செய்தது மட்டு மன்றி சமூகக் கேடுகளைக் கண்டித்துத் திருத்தியும், அன்னிய நாட்டுப் பழக்கங்களை பௌத்தர் கடைப்பிடிப் பதை தடுப்பதிலும் வெற்றி கண்டவராவார்.

இந்துசமயப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்கள்:

கல்வித்திணைக்களம் உருவாக்கப்பட்டு, அரசாங்கம் பாடசாலைகளைக் கட்டுப்படுத்தப் தொடங்கியது. மிசனரிமாரின் ஆகிரமிப்பு தொடர்ந்திருந்த போது இந்துப் பாரம்பரியங்களை மறுமலர்ச்சி செய்வதில் சிலர்

முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். யாணந்துறை மிகைட்டு வத்தே குணைந்த கேரோவைப்போல வடக்கில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இந்து சமயக் கல்வியினதும், தமிழ் உரை நடையினதும் வளர்ச்சிக்குத் தந்தையாக விளங்கினர். மெதடிஸ்ற் மதத் தலைவர் போர்சிவில் பாதிரியாருக்குத் தமிழாசிரியராக இருந்த பெருமைக்குரியவர் மிஷனரிமாரின் மதமாற்றப் போக்கினை நன்கறிந்து அவர்களை கண்டித்த வரும் இவரேயாவார். மேனாட்டுக் கல்விமுறை இந்துசமயப் பாரம்பரியத்திற்கு முரணானதென அதனை எதிர்த்து வாதாடினர்.

இந்து மாணவர்களுக்கென பாலபாட நூல்களையும், சைவ விளுவிடைகளையும் எழுதி அச்சிட்டு வெளியிட்ட துடன், சைவசமயத்தைப் பற்றி பிரசங்கங்கள் செய்தும் சைவத்தை நிந்தித்து வெளியிடப்பட்ட பிரசுரங்களுக்கு மறுப்புக்கள் எழுதியும் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் அச்சகக்கூடங்களை நிறுவி தாம் எழுதிய வசன நூல்களை யும், கிறிஸ்தவ மத கண்டனப் புத்தகங்களையும் அச்சிட்டுப் பரப்பினர். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையா டற்புராணம், திருக்குறள் பரிமேழலகர்உரை, நன்னூற் காண்டிகை, விருத்தியுரை, சைவசமய நெறியுரை, திருவா சகம் முதலிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். செய்யுள் நடையை மாற்றி இலகு வசனநடையை ஆங்கிலக் குறியீடு களைப் பயன்படுத்தி எழுதிய பெரும் புகழுக்குரியவர் நாவலராவார். இவரின் பணிகளை 1888 இல் தாபிக்கப் பட்ட சைவபரிபாலன சபை பொறுப்பேற்றது.

இவரின் அரும்பணி இந்துப் பாடசாலைகளை அமைத்த மையாகும் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியா சாலையை நிறுவினர். அது இன்று நாவலர் வித்தியாசாலை என்ற பெயரில் விளங்குகிறது. இணுவில், கோப்பாய் ஆகிய இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினர் இவரைத் தொடர்ந்து சைவபரிபாலன சபையினரால் நிறுவப்பட்ட பட்டின உயர்நிலைப் பாடசாலை இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகும்.

இவர் பின் வாழ்ந்த சேர். பொன். இராமநாதன் சிங்களவராலும் தமிழராலும் ஒருசேர மதிக்கப்பட்டவர்.

இவர் இந்து மாணவர்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரியையும் பெண்களுக்கு இராமநாதன் கல்லூரியையும் அமைத்துப் பெருமை பெற்றவர். பரமேஸ்வராக் கல்லூரி, இந்து மாணவரின் கல்வியையும், ஒழுக்கத்தையும், இறைபக்தியையும் வளர்க்கும் நிலையமாக அமைவதுடன் தமிழ் மக்களின் தேசிய இசை, நாடகம், விளையாட்டு ஆகிய துறைகளும் வளர்க்க வேண்டுமெனக் கூறியுள்ளார்

இஸ்லாமிய கலாச்சார மறுமலர்ச்சி:

ஐரோப்பியராட்சிக் காலத்தில் இஸ்லாமியர் தங்கள் பிள்ளைகளை ஐரோப்பியர் மதமாற்றம் செய்து விடுவாரெனப் பயந்து மிஷனறிப் பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை. பள்ளிவாசல்களுடன் அமைந்திருந்த குர்ஆன் பள்ளிக் கூடங்கள் (மக்தப்) முதனிலைப் பாடசாலைகளாக விளங்கின. திண்ணைப் பள்ளிக்கூடங்களில் லெப்பை என்பவரால் கற்பிக்கப்பட்டது. இவர் மாணவரின் தொழுகைக்கும் ஏனைய சமயக் கிரியைகளுக்கும் வேண்டியவற்றை திருக்குர்ஆனிலிருந்து கற்பித்தார். இதற்கு அறபு மொழி தேவைப்பட்டது. அறபுத் தமிழ் போதனை மொழியாகத் திகழ்ந்தது. எனவே இவ்வாறான கல்வி திருக்குர்ஆனின் சில பகுதியை மனனம் செய்வதாகவே அமைந்தது.

இஸ்லாமிய கலாசாரத்தையும் கல்வியையும் வளர்க்கும் பணியில் அருந்தொண்டாற்றியவர் ஜனாப் எம். சீ சித்திலெப்பை ஆவர் இவரின் விடாமுயற்சியால் 1891 இல் முஸ்லிம் கல்விச் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1892 கொழும்பு சாஹிராக் கல்லூரியையும் (இன்றைய) கப்பலோயில் ஒரு சாஹிராப் பாடசாலையையும் அமைத்தது. இதனைத் தொடர்ந்து பின்னர் முகமதிய உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும், முகமதிய அரசாங்க பாடசாலைகளும் நிறுவப்பட்டது 1903 இல் எல்லாமாக 10 பாடசாலைகள் இலங்கையில் இவ்வாறு தாபிக்கப்பட்டன. இவை இலங்கையில் இஸ்லாமிய கலாசாரம் தனித்துவமாகப் பேணப்பட்டுவர உதவியுள்ளன.

மத விலக்கு: இலங்கையில் கல்வி, சமய மறுமலர்ச்சி யுடன் மதவிலக்கு இயக்கமும் ஆரம்பமானது. மத அருந் ததல் சமயத்திற்கு புறம்பான செயலாதலால் நாடெங்கும் தவறுகள் அமைப்பதை மதத் தலைவர்கள் கண்டித்தனர். இவ்வாறு அமைக்கப்படும் தவறுகளை சட்டப் பிரமாணங் களை அமைத்துத் தடுக்கும் நோக்குடன் பௌத்தத் தலைவர் கள் முயன்றனர். இவர்களுள் எம்.பி. ஆர். சேனநாயக்க, டி. எஸ் சேனநாயக்க, எட்மண்ட் ஹேவிதாரண, சேர், டீ பி. ஜயதிலக, டபிள்யு ஏ. சில்வா ஆகியோர் பெரும் பங்கார்றியவர்களாவர். இவர்கள் மதவிலக்குப் பிரசாரக் கூட்டங்களில் அரசாங்கத்தின் கொள்கைகளைக் கண்டித்த னர். ஆனை மக்களது அரசியல் உரிமைக்கான பிரசாரக் கூட்டங்களாகவும் அமைந்தன. இதனால் இவ்வியக்கம் ஓரளவு அரசியல் பிரச்சார இயக்கமாகவே செயல்பட்டது.

1.83. 1915 இன் இனக்கலவரம்: 1915 இன் இனக்கலவரம் சிங்களவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் நடைபெற் றது. கப்பலைப் பௌத்தக் கோயிலின் பெரகரா விழாவின் போது செல்லும் ஊர்வலம், முஸ்லீம்களின் பள்ளிவாசலைக் கடந்து செல்லும்போது வாத்தியங்கள் முழங்கக்கூடாதென முஸ்லீம்கள் சிலர் அறிவித்தனர். ஆனால் பௌத்தர்கள் அதனைப் பின்பற்றவில்லை. நீதிமன்றத்தில் முறையீடு செய் யப்பட்டது. பௌத்தர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப் பட்டதால், பிரிவுக் சவுன்சிலுக்கு மனுச் செய்தனர். இவ் வேளை வைகாசி விசாகத்தினம் நடைபெற்ற பெரெகரா ஊர்வலத்தில் வாத்தியங்கள் பள்ளிவாசல்முன் நிறுத்தாது சென்றமையால் இனக் கலகம் தோன்றியது. இக்கலகத்தில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர். பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இக்கலகம் மேல்மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய பிரதேசங்களிலெல்லாம் பரவியது. ஆளுநர் பிரபட் சாமர்ஸ் கலகத்தையடக்க படையியற் சட்டத்தைப் பிர கடனம் செய்தார் (மார்ஷல்லோ) இக்கலகத்தின்போது எப். ஆர். சேனநாயக்கா, டி. எஸ். சேனநாயக்கா, சி. பத்துடாவை ஹேவவிதாரண, டீ. பி. ஜயதிலக்க, ஏ. ஈ.

குணசிங்க, டபின்யு. சில்வா ஆகியோர்மீது இராசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு தண்டனை நிறைவேற்றுவதற்கு நாள் குறிக்கப்பட்டது. இக் குற்றச் சாட்டு அநீதியானதென சேர். பொன் இராமநாதன், ஜேப்ஸ் பீரிஸ், டெரோரா, ஜயத்திலகா போல்றோர் குடியேற்ற நாடுகளின் காரியதரிசிக்கு முறையிட்டபோது அது புறக்கணிக்கப்பட்டது. உடனே சேர் பொன் இராமநாதன் தானே நேரில் இங்கிலாந்து சென்று அதிகாரிகளுக்கு இலங்கையின் உண்மை நிலையை எடுத்துக் கூறியதால் விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. தண்டனைபெற இருந்தோர் விடுதலையாகினர்.

சேர் பொன் அருணாசலம், ஜேப்ஸ் பீரிஸ் ஆகியோர் தலைமையில் மக்கள் நிர்வாகத்தில் பங்கெடுக்க வேண்டுமென மக்கள் வாதாடத் தொடங்கினர். முடிவில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற கட்சி நிறுவப்பட்டது. இதுவே இலங்கையில் நிறுவப்பட்ட அரசியல் கட்சியாகும்.

இக்கட்சி பின்னர் மக்களது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பிரித்தானியருடன் வாதாடியது. இலங்கைத் தேசியக் காங்கிரஸ் இன்றைய கட்சிமுறைக்கு வித்திட்டதெனலாம்.

1.84 இலங்கைத் தேசியக் கழகம்: இக்கழகத்தின் அடிப்படை இலட்சியம் அரசியல் சீர்திருத்தத்திற்கான போராட்டம் நடத்துவதாகும். தேசியக் கழக அங்கத்தவர்களில் பெரும்பான்மையோர் மத்திய வகுப்பினராவர். சேர் பொன் அருணாசலம் இக்கழகம் இனப் பிரிவினையின்றி இயங்குவதற்கு பெரிதும் முயன்றவர். ஆயினும் அவரது முயற்சி வீணாகி விட்டது. தேசிய இயக்கத்தில் பிணக்குகள் எழுந்தது. ஒ. ஈ. குணசிங்கா போன்ற சிலர் முன்னேற்றக் கருத்துக்களை விரும்பாமையினால் இலங்கை இளைஞர் மகாசனபையை உருவாக்கினர். பின்னர் தொழிலாளரின் நலன் பேணுவதற்காக அவர்களின் ஆதரவைப் பெற்று இலங்கை சமசமாஜக் கட்சி 1935 இல் அமைக்கப்பட்டது. இவ்வாறு கழக ரீதியாக அரசியல் சீர்திருத்தம் கோரிப் போராட்

டங்கள் தடாத்தினர். அதன் பலனாக இலங்கையருக்கு அரசியல் சீர்திருத்தங்கள் மட்டுமன்றி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கவும் இவை வழிவகுத்தன.

இலங்கையில் முதன்முதல் ஆட்சியை அமைத்த கட்சி டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியாகும். இவரே இலங்கையின் முதல் பிரதமராவர். இதனுடன் சமசமாஜக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, மக்கள் முன்னணிக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தோன்றின. 1947 - 1956வரை ஐக்கிய தேசியக் கட்சியும், 1956 இல் எஸ். டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆட்சியை நடத்திய கட்சிகளாகும்

1. 9. 1931 இன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள்:

டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் பயனாக சர்வசன வாக்குரிமை இலங்கையருக்கு கிடைத்தது. இதனால் மக்கள் அரசியலில் கவனம் செலுத்த முற்பட்டனர். அரசியல் தலைவர்கள் நிருவாக விஷயங்களில் கலந்து கொண்டமையால் சுதந்திர உணர்ச்சி தோன்றியது. ஐக்கிய நாணயச் சங்கங்கள். இலங்கை வங்கி என்பன தாபிக்கப்பட்டன. சைத் தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டன. விவசாயத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. கல்வி நாடெங்கும் வளர்ச்சியடையத் தொடங்கியது. 1945 இல் சி. டபிள்யு கன்னங்கராவின் முயற்சியால் இலவசக் கல்வியளிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தொழிலாளர் வேலை நேரம் நஷ்டஈடு என்பன பற்றிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வைத்தியசாலைகள் திறக்கப்பட்டு தொழிலாளர் நலன் பேணப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் உணவுற்பத்திக்காக மின்னேரியா, மினிப்பே, கல்லோயாத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. கைத்தொழில்துறை முன்னேற்றமடைந்தது. காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை திறக்கப்பட்டது. மலேரியாத் தடுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

சுதந்திர இலங்கையின் முதல் ஆளுநர் சோல்பரிப் பிரபுவாவார். அவர் பின்னர், சிறிது காலம் சி. நாகலிங்கம் என்பவரும் பின்னர் ஒலிவர் குணத்திலகாவும் தேசாதிபதிகளாகக் கடமையாற்றினர். 1956 இல் எஸ் டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இலங்கையின் இன ஒற்றுமையைச் சீர்குலைத்தது. அதுமட்டுமன்றி கலாசார அமைச்சு ஒன்று அமைக்கப்பட்டது. இது பௌத்த சமயத்தையும், சிங்கள மொழியையும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டது. தனியார் பஸ் சேவை இவரது ஆட்சியின்போது தேசியமயமாக்கப் பட்டது. இவ்வாறு இலங்கையின் சமூக பொருளாதார வளர்ச்சி இலங்கை அரசாங்கங்களால் காலத்திற்குக்காலம் எடுத்த நடவடிக்கைகளால் பிற்காலத்தில் மேலும் மேலும் வளர்ச்சியடைந்தது.

அத்தியாயம்: 2

மனித உரிமைகள் வென்றெடுத்தல்

2.1. மனித உரிமைகளை வென்றெடுத்த வரலாறு

இன்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன் மக்கள் உரிமையற்றவராக அடிமைகளாக வாழ்ந்தனர். அம்மக்கள் சமுதாயத்தினர் காலத்திற்குக் காலம் நடாத்திய போராட்டங்களால் தமது உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இன்று உலக மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் யாவும் முன்னர் வாழ்ந்த மக்களால் பெற்றுக் கொண்டவையாகும். இன்றும் ஆபிரிக்கா, கிழக்காசியா, மத்தியகிழக்கு, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளிற் பலவகைப்பட்ட போராட்டங்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. நம் மூதாதையர் மனித உரிமைகளைப் பெற்ற வரலாற்றை ஆராய்வோம். பிரித்தானியா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சில சட்டங்களில் எவ்வாறு மனித உரிமை வளர்ச்சி அடைந்துள்ளது என்பதுபற்றி அறிய வேண்டும். முதலில் 1216-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட மக்னா கார்ட்டா (*Magna Carta*) என்ற சட்டமூலம் பற்றி அறிவோம்.

மக்னா கார்ட்டா (1215 - உரிமை மனு); றிச்சர்ட் மன்னன் இறந்ததும் அவனது தம்பியான ஜோன் அரசனுக்கினர். ஜோன் மன்னனது ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து ஐரோப்பாவில் தனக்கு உரிமையாக இருந்த நாடுகளை இழந்தது. இவனது ஆட்சிக் காலத்திலிருந்த பிரபுக்கள் சிற்றரசர்கள்போல படைப்பலம், கோட்டை முதலான வசதிகளுடையவர்களாகவும், சக்தி வாய்ந்தவர்களாகவும் இருந்தார்கள். ஜோன் மன்னன் தான் நினைத்தவாறு தனது இஷ்டத்திற்கு வரிவிதிப்பதை இப்பிரபுக்கள் வெறுத்தனர். இதனால் மன்னனுக்கு பிரபுக்களின் ஆதரவிற்குப் பதில் எதிர்ப்பே கிடைத்தது. அரசனுக்குப் பிரெஞ்சு அரசனுடனும் போப்பாண்டவருடனும் நீராப்பகை எழுந்தது. அரசன் சமயத்திலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியமையால் திருச்சபையுடனும் பகைமை உண்டாயிற்று இவ்வித நடவடிக்கையால் மக்களும் இவனை வெறுத்தனர். எனவே 1215 -ம் ஆண்டு ரன்னிமீட் என்னும் (Runnymede) இடத்தில் 87 பிரிவுகளைக் கொண்ட மக்னா கார்ட்டா என்னும் சாசனத்தில் கையெழுத்து இடும்படி மக்கள் அரசனை வற்புறுத்தினர். இச்சாசனம் மன்னனால் கையெழுத்திட்டு மக்களுக்கு அளிக்கப்பட்டது. இச்சாசனத்தால் மக்களுக்குக் கிடைத்த மனித உரிமைகள் பின்வருமாறு:

(1) அரசன் மக்களைத் தக்க காரணமின்றிச் சிறையில் அடைக்கக்கூடாது.

(2) மகாசபையின் (Great Council) அங்கீகாரத்தைப் பெறுமல் வரிவிதிக்கக் கூடாது.

(3) அரசன் திருச்சபையின் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது.

(4) அரச உத்தியோகஸ்தர்கள் மக்களின் வருமானத்தை பலாத்காரமாக, அரசனுக்கு மானியம் செலுத்தாமைக் காகப் பறித்தல் கூடாது.

(5) குற்றவாளிகள் கைது செய்யப்படும்போது அன்றில் தண்டிக்கப்படும்போதோ நாட்டுச் சட்டத்திற்கமைய செயலாற்ற வேண்டும் என்பனவாம்.

இச்சாசனம் மூலம் பெற்ற மனிதஉரிமை யாதெனில் சமயச் சுதந்திரம், சொத்துரிமை, சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்பனவாம்.

1688 - ஆம் ஆண்டின் ஆங்கிலேயப் புரட்சி: 1625 - ஆம் ஆண்டு உரிமை மனு ஒன்று நிறைவேற்றப்பட்டு மனித உரிமைகள் பேணப்பட்டன. பின்னர் 1688 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. 1688 - ஆம் ஆண்டுப் புரட்சிக்கு வழிவகுத்தவர் ஆங்கிலேய நூலாசிரியர் ஜோன் லொக் என்பவராவர். 1685 - ஆம் ஆண்டு இரண்டாம் சார்ள்ஸ் இறந்ததும் யார்க் கோமகன் இரண்டாம் ஜேம்ஸ் பட்டத்திற்கு வந்தான். 1685 இல் மான்மத் கோமகன், பட்டத்திற்கு தானே வாரிசு என்று புரட்சிசெய்து உயிரிழந்தான்; இதற்கிணங்க 1688 இல் வில்லியம் டச்சுப் படையுடன் வந்திறங்கவே மக்கள் வெறுத்த மன்னன், பட்டத்தைத் துறந்து ஓடிவிட்டான். பராளுமன்றம் ஜேம்ஸின் மகள் மேரியையும் அவள் கணவன் வில்லியத்தையும் (ஆரஞ்சு இளவரசன்) கூட்டாக ஆளும்படி நியமித்தது. இவர்களது ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றம் உரிமை மசோதாவை நிறைவேற்றி அரசனது உரிமையைக் கட்டுப்படுத்தியது. பண்டைய உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் வலியுறுத்துவதாக அமைந்த அம்மசோதாவில் கோரப்பட்ட உரிமைகள் வருமாறு;

(1) நடைமுறையிலிருக்கும் சட்டங்களைத் தள்ளி வைப்பதோ அன்றி பாராளுமன்றத்தின் சம்மதமின்றி, அரச அதிகாரத்தைக் கொண்டு சட்டதிட்டங்களைச் செயன்முறைப்படுத்தலோ சட்டவிரோதமான செயல்.

(2) நடைமுறையிலிருக்கும் சட்டங்களை நீக்குதலோ அல்லது அரசனின் அதிகாரத்தைக் கொண்டு சட்டத்தை பயன்படுத்துவதோ சட்டவிரோதம்;

(3) சமய வழக்குகளுக்கென உயர்ஆணை மன்றத்தை நிறுவுவதற்கு ஆணையீடுவதும், அதேமாதிரியான பிற ஆணைக் குழுக்களும் சட்ட விரோதமானவை.

(4) நீண்ட காலத்திற்குப்பின் பாராளுமன்றத்தின் சம்மதமின்றி அரசனின் சிறப்பதிகாரத்தைக் கொண்டு அரசாங்கத்திற்காக அதனுடைய உபயோகத்திற்காகப் பணம் திரட்டுவதும் மக்கள் விரும்பாத வழிகளில் நிதி திரட்டுவதும் சட்டவிரோதமாகும்.

(5) அரசனிடம் விண்ணப்பித்தல் குடிமகனுடைய உரிமையாகும். அவ்வாறு விண்ணப்பம் அனுப்பியதற்காக குடிமகன் குற்றஞ் சாட்டப்படுவதும், சிறையிலிடப்படுவதும் சட்டவிரோதம்.

(6) பாராளுமன்றத்தின் சம்மதமின்றி அமைதிக் காலத்தில் நாட்டின் எல்லைக்குள் படைநிரட்டுதலோ அன்றி நிலையான படைவைத்திருப்பதோ சட்டத்திற்கு மாறுனது.

(7) சட்டம் அனுமதித்தபடி தங்களுடைய நிலைமைக்கேற்ப தமது தற்காப்பிற்காக புரட்டஸ்தாந்து குடிகளும் படைக்கலம் தாங்கலாம்.

(8) பாராளுமன்ற உறுப்பினர்களுடைய தேர்தல்கள் கட்டுப்பாடற்றவையாக இருக்கவேண்டும்.

(9) பாராளுமன்றத்தின் பேச்சுரிமையும் விவாதங்களும், செயல்முறைகளும் பாராளுமன்றத்திற்கு வெளியிலோ அல்லது நீதிமன்றத்திலோ குற்றச்சாட்டிற்கோ அல்லது விசாரணைக்கோ உள்ளாகக் கூடாது.

(10) அளவுக்கு மீறிய ஈட்டுப்பணம் அறவிடப்படுவதும் அளவுக்கு மீறிய தண்டப்பணம் விதித்தலும் வழக்கத்திலில்லாத கொடூரமான தண்டனைகள் வழங்குதலுங் கூடாதுக்

(11) ஜூரர்சளை முறையாக வழக்கு விசாரணையின்போது அழைக்க வேண்டும் அரசத்துரோகக் குற்றம் சுமத்தப் பெற்

றவருக்கு தீர்ப்பளிக்கும் போது குடியுரிமைபெற்று ஜூரர்கள் இருத்தல்வேண்டும்.

(12) குற்றம் சாட்டப்பெற்ற தண்டிக்கும் முன்னரே உதவித் தொகை அளிப்பதும், தண்டம், பறிமுதல் ஆகியவற்றிற்கான உறுதிமொழி அளிக்கப்படுவதும் முறையற்ற செயல்கள் ஆவதுடன் செல்லுபடியாகாதவையுமாகும்.

(13) நாட்டிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும், சட்டங்களைத் திருத்தியமைக்கவும், அவற்றைத் திட்டப்படுத்தவும், காக்கவும் பாராளுமன்றங்கள் அடிக்கடி கூடவேண்டும்.

இக்கோரிக்கைகள் மூலம் ஜனநாயக நாட்டுமக்களதும் பாராளுமன்றத்தினதும் உரிமைகள் அளிக்கப்பட்டது. அத்தோடு ஜனநாயக நாட்டில் நிலவ வேண்டிய அமைதியும், நீதிச் சுதந்திரம், மதச் சுதந்திரம், பேச்சுரிமை, தனிமனித உரிமை என்பனவும் கிடைப்பதற்கு வழிவகுக்கப்பட்டது.

2. 2 அமெரிக்க சுதந்திரப் போர் - 1783

ஐரோப்பாவில் 17 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மதப் பிரச்சினைகளாலும் வர்த்தக நோக்கிற்காகவும் ஐரோப்பியாவிற்கு வெளியே சென்று மக்கள் குடியேறத் தொடங்கினர். இங்கிலாந்திலிருந்து வெளியேறி வேற்று நாடுகளில் குடியேறினர். வர்த்தகர் கொம்பனிகள் மக்களை வேறு நாடுகளுக்குக் கொண்டு சென்று குடியேற்றின. 1607 ஆம் ஆண்டு இலண்டன் கொம்பனி 3 சிறு கப்பல்களில் மக்களை வேர்ஜினியா (ஐக்கிய அமெரிக்கா) விற்குக் கொண்டு சென்று குடியேற்றியது. அம் மக்கள் தாம் குடியேறிய இடத்திற்கு ஜேப்ஸ்டவுண் என்ற பெயர் சூட்டினர் இது தான் ஆங்கிலேயர் முதல் குடியேறிய இடமாகும். 1620 இல் யாத்திரைப் பெரியார்கள் என்றழைக்கப்படும் 100 ஆண்களும் பெண்களும் மேபிளவர் என்ற கப்பலில் மசெற்சூசெட்ஸ் என்ற இடத்தில் குடியேறினர். 1634 இல் மேரிலாந்திலும் 1684 இல் பென்சில்வேனியாவிலும் மக்கள் சென்று குடியேறினர். பிராண்ஸியரான சாம்பளேன், குவிபெக் என்ற

நகரை அமைத்தார். இது கனடாவின் பெரும் பகுதியில் பெரும் குடியேற்றமானது. ஒல்லாந்து தேசத்து ஹென்றி கட்சன் நியூ அம்ஸ்ரடாம் நகரை ஸ்தாபித்தார். 1667 இல் ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த சண்டையின் முடிவில் ஒல்லாந்த பிரதேசங்கள் ஆங்கிலேயருக்குரியதாயிற்று. நியூ அம்ஸ்ரடாமிற்கு நியூயோர்க் என்ற பெயர் சூட்டப்பட்டது.

பூர்வீகக் குடிகளுக்குரியனவாயிருந்த அமெரிக்க நிலங்களைப் பலாத்காரமாகப் பறித்த வெள்ளையர் 13 குடியேற்றங்களை நிறுவி அங்கு தமது ஆட்சி முறையையும் ஏற்படுத்தினர். இங்கு பெருமளவில் பருத்தி பயிரிட்டனர். இதனால் பெருலாபமடைந்தனர். அமெரிக்காவிலிருந்து நீக்ரோ இன மக்களை அடிமைகளாகக் கொண்டு சென்று பருத்தித்தோட்டங்களில் வேலை செய்வித்தனர். இக்குடியேற்றங்கள் பிரித்தானிய ஆட்சியையொத்த கவுன்சில் முடி ஆட்சியமைப்பைக் கொண்டிருந்தன. இவ்வேளை பிரித்தானிய அரசாங்கம் ஆள்பதிகள் மூலமும் கோமறைக் கழகங்கள் மூலமும் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்த முயன்றது.

இக் குடியேற்றங்களின் வர்த்தகத்தின் மீது கட்டுப்பாடுகளை பிரித்தானியா விதிக்கத் தொடங்கியது. உற்பத்திப் பொருட்களைக் குடியேற்ற நாடுகள் தாய்நாட்டிற்கு மாத்திரமே ஏற்றுமதி செய்தல் வேண்டும்., இறக்குமதி செய்யும் பொருட்களையும் பிரித்தானியாவிற் கூடாகவே இறக்குமதி செய்ய வேண்டுமெனக் கட்டுப் பாடுகளை விதித்தது. இதேவேளை பிரான்சியர் கிழக்குக் கனடாவில் செயின் லோறன்ஸ் நதிப்பள்ளத்தாக்கில் நிறுவிய பேரரசு காலப் போக்கில் மிசிப்பி நதிப்பள்ளத் தாக்கையும், வடக்கில் குவிபெக் தொடக்கம் தெற்கில் நியூ ஒலியன்சு வரையும் பரவிப் பேரரசை அமைத்துக் கொண்டதுமல்லாமல் ஆங்கிலக் குடியேற்றங்கள் மேற்கு நோக்கிப் பரந்து செல்வதைத் தடைசெய்தது. இதனால் அடிக்கடி பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நடைபெற்றுள்ளது. 1754 இல் இறுதியாக பிரான்சியருக்கும் ஆங்கிலேயருக்கும் போர் மூண்டது. இது 7 ஆண்டுகள் நடைபெற்றது. 1763 இன் பாரிஸ்

உடன்படிக்கையினால், பிரான்சியருக்குச் சொந்தமான வட அமெரிக்காப்பிரதேசம் ஆங்கிலேயருக்குச் சொந்தமாகியது. இங்கு புரட்டஸ்தாந்தினர் மட்டுமன்றி கத்தோலிக்க பிரான்சியரும் செவ்விந்தியரும் வாழ்ந்தனர். 1763 இல் பிரித்தானிய அரசாங்கம் உண்ணாட்டு ஒழுங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்தது. இதனால் இதுவரை சுதந்திரமாக இருந்த அமெரிக்கக் குடியரசுகள் தாய் நாடான பிரித்தானியா மீது அதிருப்தியுற்றன.

பிரித்தானியப் பிரதமர் ஜோர்ஜ் கிரென்வில் (1764) அமெரிக்கநாட்டின் பாதுகாப்பிற்கு பிரித்தானியா செலவு செய்யும் பணத்தைக் கொடுக்கவேண்டுமென வற்புறுத்தினர். குடியேற்றங்கள் மறுக்கவே முத்திரை வரியை நிறைவேற்றினர். சட்ட சம்பந்தமான சகல சாதனங்கள், துண்டுப் பத்திரங்கள், பத்திரிகைகளெல்லாம் இம்முத்திரையைப் பதிக்கவேண்டுமென வற்புறுத்தியது. இதன் மூலம் பாதுகாப்புச் செலவில் 1/3 பங்குப் பணத்தை பிரித்தானியா அறவிட்டது. இதனால் மாகாணங்களிடையே கலகங்கள் ஏற்பட்டன. ஆனால் தேயிலை, கண்ணாடி, ஈயம், காகிதம், வர்ணம் என்பனவற்றின் மீது வரி விதிக்கப்பட்டது. மசெசூசெட்ஸ், வேர்ஜினியா, வடகரோலினா ஆகிய மாகாணங்கள் வரி செலுத்த மறுத்தன. மீண்டும் கலகங்கள் தோன்றின. 1770 இல் நோத்பிரபு இவ்வரிகளை நீக்கி தேயிலையின் மீது மட்டும் வரிவிதித்தான் இவ்வரி பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு அமெரிக்கர் மீதுள்ள உரிமையையுறுதிப் படுத்துவதற்காகவேயெனக் கூறப்பட்டது எனவே அமெரிக்கர், பிரித்தானியப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவமின்றி வரிவிதிக்கும் உரிமையில்லையென்று வாதாடினர். 1770 இல் பொஸ்தனில் கலகம் ஏற்பட்டது. பிரித்தானியர் அதனை இராணுவ பலத்தால் அடக்கினர். பலர் படுகொலை செய்யப் பட்டார்கள். 'பொஸ்தன் படுகொலை' என இது வர்ணிக்கப் படுகிறது.

அமெரிக்காவில் இறக்குமதியாகும் ஒரு இறுத்தல் தேயிலைக்கு 3 பென்ஸ் வரியைப் பிரித்தானியர் அறவிட்டனர். படுகொலைகளால் கோபமுற்றிருந்த அமெரிக்கர், பொஸ்தன்

துறைமுகத்தை வந்தடைந்த கப்பலில் இருந்த தேயிலைப் பெட்டிகளைக் கடலில்வீசினர் இது 'பொஸ்தன் தேநீர்விருந்து' என அழைக்கப்பட்டது. இதனால் கோபமுற்ற பிரித்தானியா துறைமுகத்தை மூடியதுமல்லாமல் மசெசூசெட்ஸ் பாராளு மன்றத்தை இரத்து செய்ததுடன் அமெரிக்கா குடியேற்ற நாட்டைப் போல் ஆளப்பட வேண்டுமெனக் கட்டளைபிட்ட துடன் ஆள்பதிக்கும் விசேட அதிகாரங்களை வழங்கியது, மசெசூசெட்சின் ஆள்பதியாக தோமஸ்கேஜ் நியமிக்கப்பட் டார்.

இதனால் ஏனைய குடியேற்றங்கள் அதிருப்தியுற்றதுடன் மசெசூசெட்ஸ் நிலை தமக்கும் ஏற்படலாமெனப் பயந்து ஒவ் வொரு மாகாணங்களில் பிரதிநிதிகள் கொண்ட காங்கிரஸ எனப்பட்டசபை பிலடெல்பியாவில் கூடியது. ஆங்கிலேய ருக்கும் அமெரிக்கருக்கும் ஏற்பட்ட தகராறைச் சுமுகமாகத் தீர்க்கும்படி விண்ணப்பம் ஒன்றை அனுப்பியது ஆனால் ஜோர்ஜ் மன்னன் குடியேற்ற மாகாணங்கள் ஒன்றில் அடி பணிய வேண்டும் அல்லது வெற்றி பெறவேண்டும் எனத் திட்டவட்டமாகக் கூறினர். 1775 இல் இலெக்சிங்ரன் என்ற இடத்தில் பிரித்தானியருக்கும் அமெரிக்கருக்கும் கைகலப்பு ஏற்பட்டு அமெரிக்க சுதந்திரத்தின் முதல் இரத்தம் சிந்தப் பட்டது. இதனால் 13 குடியேற்ற மாநிலங்கள் மேலும் ஒற்றுமைப்பட்டன.

1775 ஆம் ஆண்டு மே 10 ஆம் நாள் பிலடெல்பியா வில் காங்கிரஸ்சபை கூடி யுத்தத்திற்கான ஆயத்தங்களைச் செய்ததுடன் ஜோர்ஜ் வாஷிங்டனைப் பிரதம தளபதியாக நியமித்தது. அடுத்து அரசனுக்கு சமரசவிண்ணப்பம் ஒன்றை அனுப்பியது ஆனால் அரசன் ஏற்கவில்லை. எனவே அமெ ரிக்கா தடையின்றி எல்லா நாடுகளுடனும் வர்த்தகம் செய் யலாமென காங்கிரஸ்சபை சட்டத்தைப் பிறப்பித்தது. 1776 ஆம் ஆண்டு யூலை 4 ஆம் திகதி சுதந்திரப் பிரகடனத்தை காங்கிரச்சபை வெளியிட்டது : ''எல்லா மனிதர்களும் சம மாகவே சிருஷ்டிக்கப் படுகின்றனர். பறிக்கவே முடியாத சில உரிமைகளை அவர்களைப் படைத்த ஆண்டவன் அவர்களுக்கு அளித்திருக்கிறார். இவற்றில் வாழ்வு, சுதந்திரம், சுகவாழ்

வைத் தேடுவது ஆகியனவ முக்கியமானவை. இந்த உரிமை களைப் பெறவே அரசாங்கங்கள் நிறுவப்படுகின்றன இதனை அரசாங்கங்கள் மாற்றினால் அதனை மாற்றவோ அகற்றவோ மக்களுக்கு அதிகாரம் உண்டு'' எனது அப்பிரகடனத்தில் கூறப்பட்டது.

போர் ஆரம்பித்து, 8 ஆண்டுகள் நடைபெற்றது. 1778 இல் அமெரிக்கருக்கு பிரான்ஸ் உதவியது. 1779 இல் ஸ்பெயினும் உதவியது. 1781 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 இல் சுதந்திரப்போர் முடிவுற்றது. 1782 சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு, 1783 இல் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. இதன்படி 13 இராட்சியங்களின் சுதந்திரமும் ஆதிபத்திய அதிகாரமும் பிரித்தானியாவினால் அங்கிகரிக்கப்பட்டன. 1783 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதயமாயிற்று.

அமெரிக்க சுதந்திரப்போர் பழைய குடியேற்ற ஆட்சி முறைமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, : ''எல்லா மக்களும் சுதந்திரமாகவும், சமமாகவும் படைக்கப் பட்டுள்ளார்கள்'' என்ற புதுக் கருத்தை உலகம் முழுவதும் ஏற்கச் செய்தது உலக வரலாற்றின் திருப்பு முனையாக இச் சம்பவம் அமைந்தது, : ''புரட்சி புரியும் உரிமை மிகப் புனிதமானது. இந்த உரிமை மூலம் உலகத்தையே விடுவிக்கலாம் என்று நாம் நம்புகிறோம் – எதிர்பார்க்கிறோம்'' என்ற வாசகம் செயல் படத்தொடங்கியது, : - 14 ஆண்டுகளின் பின் இது பிரான்சிலும் பின்பற்றப்பட்டது, : ''உலகெங்கும் அடிமைகளாக வாழ்பவர்கள் விடுதலை பெறுவதற்காகவே இந்த மகத்தான காட்சியை ஆண்டவர் சிருட்டித்ததாகக் கருதுகிறேன்'' என்று ஜனாதிபதி ஜோன் அடம்ஸ் கூறியது குறிப்பிடத்தக்கது,.

அமெரிக்க சுதந்திரப் போரினால் பெற்ற உரிமைகள் வெள்ளையருக் குரியனவாகவே முதலில் இருந்தன. காலப் போக்கில் அவ்வுரிமைகள் மனித ஜர்க்கம் முழுவதற்கும் உரிமையாயிற்று. இவ்வாறு கிடைத்த உரிமைகள் யாதெனில்:-

அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் அந்திய ஆட்சிக்குட்படாது வாழும் உரிமை, மக்கள் தம் விருப்பிற்

கமைய அரசாங்கத்தை அமைக்கும் உரிமை, அதிகாரத்தி லுள்ள அரசாங்கத்தைக் கண்டனஞ் செய்யும் உரிமை. எதேச்சாதிகார அரசாங்கத்தைக் ஆட்சியிலிருந்து நீக்கும் உரிமை.

ஆயினும் நீக்ரோமக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக வாழ்ந்தனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பின்னர் அடிமை வியாபாரத்திற்கெதிரான இயக்கமொன்று உருவா னது. அமெரிக்காவின் ஜனாதிபதி ஏபிரகாம் லிங்கன் அடிமை விடுதலை இயக்க முன்னோடிகளுள் ஒருவர்.

தென்மாநிலங்களுக்கும் வடமாநிலங்களுக்கு மிடையே 1860-ம் ஆண்டு அடிமை வியாபாரம் பற்றிய பிரச்சினையால் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது. தென்மாநிலங்கள் தோல்வியுற்றன. போர் முடியுமுன் ஏபிரகாம் லிங்கன் படுகொலை செய்யப்பட்டார். மனிதத் தன்மைக்கு மிக உயர்ந்த இடம் கொடுத்தவராக இவர் இன்றும் கருதப் படுகிறார்.

2. 3. பிரான்சியப் புரட்சி - 1789

18 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் நடைபெற்ற புரட்சி பிரான்சின் உள்நாட்டு அரசியல் மாற்றங்களுக்காக நிகழ்ந்தது; எனினும் ஐரோப்பிய வரலாற்றையே மாற்றியமைத்தது, எனலாம். 1815 இல் 15 ஆம் லூயி பிரான்சின் அரசனாக ஆட்சி செய்தான். அக்காலத்தில் பாரிஸ் நகரில் பிரான்சியமொழி, இலக்கியம், பண்பாடு, என்பன மிகவும் முற்போக்கான நிலையிலிருந்தன. ஆனால் உள்நாட்டில் தெளிவில்லாத சிக்கல்கள் நிறைந்த சட்டங்களால் மக்கள் சுதந்திரமின்றி வாழ்ந்தனர். அக்காலச் சமுதாயம் இரு பெரும் பிரிவுகளாகக் காணப்பட்டது. உரிமையுடையோர், உரிமையற்றோர் என்ற இரு பிரிவுகள் காணப்பட்டன. மன்னர்கள், பிரபுக்கள், திருச்சபையினர் ஆகியோர் ஆட்சி யாளர்களாகவும், சமூகத்தின் குடிமக்கள் அடிமைகளாகவும் வாழ்ந்தனர்.

பிரபுக்கள் தமது சுகபோக வாழ்விற்கான பணத்தைக் குடிமக்களிடம் வரியாக அறவிட்டனர். விவசாய நிலத்தின் ஐந்திலொரு பங்கு திருச்சபைக்கே சொந்தமாக இருந்தது.

இதிலிருந்து பெரும் வருமானத்தைப் பெற்று குருமார் அனுபவித்தனர் இவர்களின் கீழ் மூன்றும் குடித்தினை என்ற தொழிலாளரும், விவசாயிகளும் விவசாயத்தை மேற் கொண்டனர். நாட்டு மக்களில் இவர்களின் தொகை ஐந்தில் நான்கு பங்கு ஆகும். இவர்கள் பெருமளவு நில வரியால் துன்பமடைந்தனர். இவர்கள் அரசாங்கத்திற்கும், பிரபுக்களுக்கும், குருவாயத்திற்கும் வரியிறுக்க நேர்ந்தது, காணிவரி, தலைவரி, வருமானவரி, உப்புவரி, சுங்கவரி, போக்குவரத்துவரி அறவிடப்பட்டதுமல்லாமல், தேவாலயத் திற்கு விவசாயிகள் வருமானத்தில் 1/20 தொடக்கம் 10/20 வரைவரி செலுத்த வேண்டும். இவை மட்டுமன்றி பிரபுக்கள் விவசாயிகளின் நிலத்தில் வேட்டையாடினர்: குதிரைச் சவாரி செய்தனர். அவர்களது மிருகங்கள், பறவைகள் என்பன பயிர்களை நாசம் செய்தன. இவை காரணமாக விவசாயிகளின் பயிர்கள் அழிந்தன.

நியாயவாதிகள், நீதிபதிகள், வைத்தியர்கள், அரசாங்க சேவையாளர்கள் ஆகியோர் பிரான்சில் நடுத்தர வகுப்பினர் களாக விளங்கினர். இவர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை. 1789ஆம் ஆண்டளவில் இராணுவத்தினரும் மிகவும்கீழ்மட்ட நிலையிலிருந்தனர். பிரான்சியப் புரட்சியின் உடனடிக்காரணங் கள் யாவையெனின் பிரான்சிய மக்களைக் கொதிப்படைய வைத்தன. யாவையெனில் சீர்கெட்ட அரசியல்முறை, சம னற்ற வரிவிதிதங்கள், மூன்று வகுப்பினரிடையே காணப் பட்ட விரோதங்கள், ஒழுங்கற்ற நீதி பரிபாலனம் என்பன வாம் அரசர்கள் போர்களிலும் ஆடம்பரவாழ்விலும் நாட்டின் வருவாயை வீணடித்தனர்; 16 ஆம் லூயி அரசனபோது பிரான்சின் நிறை சேரி வருமானமற்று வெறுமையாகக் காணப்பட்டது. இதனால் அரசன் பல வழிகளாலும் புதுப் புது வரிகளை அறவிட்டான். இவ்வரி சுமையாக விவசாயிகளை அழுத்தியது. அரசன் சர்வாதிகாரியாக விளங்கினான். தனது விருப்பம் போல் வரிவிதிக்கவும், போர்ப்பிரகடனம் செய்ய வும், வழக்குகளை விசாரிக்கவும் உரிமையுடையவனாகத் திகழ்ந்தான். இதனால் தன் இஷ்டம் போல் நீதிவழங்கி ஆட்சி செய்தமையால் குடிமக்கள் அல்லலுற்றனர். அரசாங்க அதி

காரத்தை கட்டுப்படுத்தவல்ல எவ்வித மான சக்தியும் பிரான்சில் இருக்கவில்லை. அரசனின் அதிகாரம் வல்லாட்சியாக மாறியது.

இத்தகைய நிலையில் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள் மக்களை ஊக்குவித்து சமுதாயத்தின் பரம்பரை வழக்கங்களை மாற்றியமைக்கச் சிர்திருத்த இயக்கங்களுக்குத் தலைமை தாங்கினர். (1694 - 1778) வொல்டேயர், ''ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கி விடுமானால் அதன் வேகத்தை நிறுத்த ஒருவராலும் முடியாது'' என்று கூறினார். (1684 - 1755) மொன்டெஸ்யூ என்ற எழுத்தாளர் ''சட்டங்களின் சாரம்'' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் பல நாடுகளின் அரசியலை ஒப்பிட்டு வலுவேருக்கம் என்ற புதுக் கொள்கையை வெளியிட்டார். வோல்டெயார் அரசாங்கத்தின் தனி ஆட்சியையும், கத்தோலிக்க திருச்சபையின் ஆதிக்கத்தையும் வன்மையாகக் கண்டித்தார். உருசோ (1712 - 1778) ''சமுதாய ஒப்பந்தம்'' என்ற நூலை எழுதினர். இந்நூல் பிரான்சை மட்டுமன்றி ஐரோப்பா முழுவதையும் சிந்திக்க வைத்தது. இவர் அடிமைகளின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர். ''மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கிறான், ஆனால் எங்கும் அடிமைச் சங்கிலிகளினால் கட்டுண்டு கிடக்கிறான்'' என்றார். அரசர் குடிகளின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டியவன் என்றார். இவ்வாறு மான் டெஸ்கியூ, வோல்டெயர், உருசோ ஆகியோரின் கருத்துக்கள் மக்களை விழிப்படையச் செய்து புரட்சிக்கு வழிவகுத்தன.

16ஆம் லூயி அரசனபோது பிரான்சில் புரட்சிக் கோலமும் சீர்திருத்தங்கள் கோரும் இயக்கங்களும் காணப்பட்டன. நிதிமந்திரி டேர்கோ குடிமக்களைத் திருப்திப் படுத்துவதற்காக சீர வரியை நீக்கி சகலரும் நிலவரி செலுத்த வேண்டுமெனச் சட்டமியற்றினர். இதனால் அதிருப்தியுற்ற பிரபுக்கள் இவரைப் பதவியிலிருந்து அரசன் மூலம் நீக்கினர். அடுத்து நெக்கர் என்பவர் நிதிமந்திரியானபோது அரசரின் நிலங்களில் இருந்த அடிமைகளை விடுதலை செய்து, அரசனின் மானிய உரிமைகளை இல்லா

தொழித்து புரட்டஸ்தாந்தினருக்கு பூரண உரிமை கொடுத்தார். இவரையும் பதவி நீக்கம் செய்தனர். அதன்பின் நிதிமந்திரியான கலோனின் மிகையான செலவால், புதிய வரிகளை விதிக்க முற்பட்டார். இதனை பாராளுமன்றம் நிராகரித்தது. இந்நிலையில் 175 ஆண்டுகள் கூட்டப்படாதிருந்த பொதுநாட்டுச்சபை உறுப்பினரைத் தெரிவு செய்ய தேர்தல் நடைபெற்றது.

1789 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி பொதுச் சபை கூடியது. இதில் 308 குருமார், 285 பிரபுக்கள், 621 மூன்றும் வகுப்பினர் இடம்பெற்றனர். வேர்சை என்ற இடத்தில் கூடினர். பாராளுமன்றம் ஒரே நாட்டுமன்றமாக ஒரு இடத்தில் கூடவேண்டுமென மூன்றும் வகுப்பினர் கிளர்ச்சி செய்தனர். மிருபோ என்ற பிரபு தலைமை வகித்தார். ரூசோவின் கோட்பாட்டின் அரச அதிகாரம் பொது மக்களுக்கேயுரியது என்பதை மக்கள் உறுதியாகக் கடைப்பிடிக்க முயன்றனர். கோபங்கொண்ட அரசனும் குருமாரும் பிரபுக்களும் சேர்ந்து நாட்டுமன்றத்தின் கதவுகளை மூடினர். இதனால் மக்கள் டெனிஸ் பந்தாட்ட மைதானத்தில் ஒன்று கூடி புதிய அரசியல் யாப்பு உருவாகுமுன் தாங்கள் அவ்விடத்தைவிட்டு அகல்வதில்லையென்று சத்தியம் செய்தனர். சில குருமாரும் மூன்றும் வகுப்பினருடன் சேர்ந்து கொண்டனர். பொதுநாட்டுச் சபை 'நாட்டுமன்றம்' என்ற பெயரில் ஒரேயிடத்தில் கூடியது. இது ஆட்சிமுறையை மாற்றியமைக்கும் கிளர்ச்சிக்கு வழிகோலியது.

பிரபுத்துவக் கட்சியின் நடவடிக்கையால், மக்கள் கோபங்கொண்டு கலகம் செய்ய ஆரம்பித்தனர். நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம் என்பவற்றால் துன்புற்ற மக்கள் பாரிஸ் நகரை முற்றுகையிட்டனர். இவர்களுடன் இராணுவத்தினரும் சேர்ந்து கலகம் செய்தனர். வேர்சை அரண்மனையை மக்கள் முற்றுகையிட்டனர். நெக்கரைப் பதவியிலிருந்து நீக்கியமையை சாட்டாகக் கொண்டு ஆயுதங்களைக் கைப்பற்றி நகரில் அட்டகாசம் செய்தனர். பஸ்திலின் சிறைச்சாலையைக் கைப்பற்றினர். இதன் வீழ்ச்சி ஒரு யுகத்தின் மாற்றத்தைக் குறித்தது. பிரான்சின் ஏனைய இடங்களிலும் கலகங்கள் தோன்றின.

பழைய அரசின் முறையை மக்கள் அழித்தொழிக்க கோட்டைகளையும் மாளிகைகளையும் அழித்து தரைமட்ட மாக்கினர். பாரிஸில் நாட்டுமன்றம் அமைக்கப்பட்டது போன்று உள்ளூர் ஆட்சி மன்றங்கள் மத்திய அரசிற்குக் கட்டுப்படாது பொதுமக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மைக்கப்பட்டன.

பிரபுக்கள் நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளிற் சென்று குடியேறினர். பிரபுக்கள் தாமாகவே மானிய முறையை உரிமைகள், வருவாய்கள், சலுகைகளை இரத்துச் செய்தனர். இதற்கென 30 சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. எல்லோரும் சம வரியிறுக்க வேண்டும். அடிமை கள் சுதந்திரம் பெறவேண்டும். எல்லோருக்கும் சமஉரிமை யும் நீதியும் அளிக்க வேண்டும். எனச் சட்டங்கள் நிறை வேற்றப்பட்டு ஒரே இரவில் பிரான்ஸின் சமுதாயப் புரட்சி நிறைவெய்தியது.

நாட்டுமன்றம் அரசமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. மனித உரிமைப் பிரகடனம் வெளியிடப்பட் பட்டது. மொன்டொங்கியூ, வொல்டெயர், ரூசோ ஆகி யோரின் கொள்கைகளில் கட்டுண்ட மக்களுக்கு எது சிறந்த அரசியல் எனப் பிரித்தறிய முடியாது. திண்டாடி முடிவில் மென்டேஸ்கியூவின் 'வலுவேருக்கல்' கொள்கையில் புது அரசாங்கம் உருவாக்கப்பட்டது. 1791 இல் புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது.

பிரான்ஸ் 1792 இல் ஆஸ்திரியாவிற்கும் பிரஷ்ஷியா விற்கும் எதிராகச் செய்த யுத்தத்தில் தோல்வியடைந்தமை யால் மக்கள் கொதித்தெழுந்து அரசனின் மாளிகையைத் தாக்கினர். அரச குடும்பம் சட்டமன்றத்தில் அடைக்கலம் புகுந்தது. முறைமன்று அரசியல்வாதிகளையும் தேசத் துரோகிகளெனத் தூக்கிலிட்டது. அரச பதவி நீக்கப்பட்டு பிரான்ஸ் குடியரசாக்கப்பட்டது. வால்மி என்ற இடத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கெதிரான போரில் வெற்றி பெற்ற தால் மக்கள் உணர்ச்சிவசப்பட்டு அரசனைத் தேசத்துரோகி எனக் குற்றம்சாட்டி 1793 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்

21 ஆம் நாள் அரசன் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு 'கில்ற்றீன்' என்ற தலைகொய் தறியில் கொலை செய்யப்பட்டான்.

அரசன் கொலை செய்யப்பட்டதும் நாட்டின் பலபாகங்களிலும் கலகங்கள் தோன்றின. 1793 யூன் தொடக்கம் 94 யூலை மாதங்களுக்கிடையில் பலர் பிரச்சேதம் செய்யப்பட்டார்கள். பிரான்ஸ், ஆஸ்திரியாவை 1794 இல் தோற்கடித்தது. 1795 பெல்ஜியம் கைப்பற்றப்பட்டது. பிரஷ்ஷியாவும் ஸ்பெயினும் சமாதானம் செய்து கொண்டன. சமவாயத்தின் அதிகாரங்கள் வலுப்பெற்றன.

பிரான்சியப் புரட்சியால் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது. குருமார் பிரபுக்களின் விசேட சலுகைகள் நீக்கப்பட்டன. பொதுமக்களது வரிகள் நீக்கப்பட்டன. குடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. பிரபுக்களின் நிலங்கள் பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. பேச்சு சுதந்திரம், சமய சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் எனபவற்றின் சமநீதி அனைவருக்கும் கிடைத்தது. இவை பிரான்ஸில் மட்டுமன்றி ஐரோப்பா எங்கும் பரவியது.

2. 4. இரசியப் புரட்சி - 1917

இரசியாவில் 1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற இரசியப் புரட்சியைப் கற்குமுன் அப்புரட்சியின் முன் இரசியாவின் சமூதாய நிலையையும் அந்நிலை புரட்சிக்கு எவ்வாறு வழி வகுத்தது என்பதுபற்றியும் ஆராய்வோம்.

முதலாம் நிக்கலஸ் மன்னன் (சார்) 1825 - 55 வரை ஆட்சிசெய்த காலத்தில் இரசிய மக்கள் அடக்கி ஒடுக்கப் பட்டனர். உள்நாட்டில் மக்களது சுதந்திர உணர்வுகள் அடக்கப்பட்டன. அரசியல் தத்துவஞானம் சம்பந்தப்பட்ட இலக்கியங்கள் நாட்டினுள் புகவிடாது தடுத்தான். நாட்டுப் பிரஜைகள் வெளிநாடுகளுக்குச் செல்வது தடுக்கப்பட்டது மல்லாமல் உள்நாட்டுப் பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டன. இராணுவப் பயிற்சி, பாடசாலைகளில் கட்டாயமாக்

கப்பட்டது. அரசிற்கெதிரான பிரஜைகள் விசாரணையின்றி சிறைப்பிடிக்கப்பட்டார்கள். அன்றேல் நாடுகடத்தப்பட்டார்கள் இவ்வாறு மக்களை அடக்கி இறுமாப்புக் கொண்டிருந்த மன்னன் நெறமியப் போரில் மேற்கு நாட்டு தாராண்மை வாதிகளால் தோற்கடிக்கப்பட்டான். இத் நிகழ்ச்சி உள்நாட்டு வரலாற்றுப் போக்கை மாற்றியமைத்தது. தாராண்மைக் கொள்கைகள் மறைமுகமாகப் பரப்பப்பட்டு மக்கள் அரசுக்கெதிராக இளைந்தெழச் செய்தது.

இந்நிலையில் மன்னன் இறக்க இரண்டாம் அலெக்சாண்டர் அரசனானான் (1855 - 81) இவன் தந்தையின் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுனவன். முதலில் கைது செய்யப்பட்டிருந்த வீரர்களை சைபீரியாவிலிருந்து விடுதலை செய்தான், அத்துடன் இயற்கைச் செல்வங்களை அபிவிருத்தி செய்தான், புகையிரத வீதிகள் அமைத்தான். அடித்து அடிமை முறையை ஒழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டான். இரசிய சனத்தொகையில் அரைவாசிப் பேர் தொழிலாளர், இவர்கள் முடிக்கும் திருச்சபைக்கும் சொந்தமான நிலங்களில் கட்டாய சேவை செய்தார்கள், கடுமையான வரி செலுத்தினர்கள். அடிமைகள் சட்டாய ஊழியம் செய்வதுடன் இராணுவத்தில் சேர்க்கப்பட்டார்கள். வெளி நாடுகளுக்கும் விற்கப்பட்டார்கள். இந்நிலையை மாற்றியமைக்க 1861 இல் ஊழியர் முறை நிராகரிப்புச் சட்டத்தை நிறைவேற்றினான். இதன்மூலம் பெருமளவு ஊழியர் சுதந்திரம் பெற்றனர். இச்சட்டமூலம் சுதந்திரம் பெற்ற ஊழியர் நிலவுரிமை பெற்றனர், அடித்து பிரபுக்களின் நிலங்கள் கிராமச் சங்கங்கள் பொறுப்பில் விடப்பட்டன ஆயினும் வரிகள் குறைக்கப்படவில்லை. பிரபுக்கள் முன்னைய வரி அறவிடப்பட்டது போன்று இதன்மூலம் கிராமச் சங்கங்கள் வரி அறவிட்டன. மக்கள் அதிருப்தியுற்றனர்.

மன்னனின் ஏனைய சீர்திருத்தங்கள் சிறப்பு மிக்கதாகக் காணப்பட்டன. பொதுசன அபிப்பிராயத்திற்கு சுதந்திரமளித்து, பத்திரிகைக் கட்டுப்பாடு நீக்கப்பட்டது. நீதி முறையில் ஆங்கில பிரெஞ்சுமுறை புகுத்தப்பட்டு நடுவர் முன் தீர்ப்பளிக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. செமித்

வேக்கள் என்ற புதிய தல ஆட்சி சபையில் பிரபுக்கள்' மத்தியதர வகுப்பினர், விவசாயிகள் அங்கம்வகித்தார்கள். மாவட்ட மாகாணசபை முறை ஏற்படுத்தப்பட்டது. இவனது இச்சீர்திருத்தங்கள் மகா பீற்றர் மன்னனது சீர்திருத்தங்களை நினைவூட்டுவதாக அமைந்தன.

இவ்வாறு செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் 1863 இல் நடைபெற்ற போலிஸ் புரட்சியால் மறைந்தது. (Polish) இருபிரிவினர் நாட்டில் தோன்றினர் அவர்கள் சூனிய வாதிகளும் எதிர்ச்சாதிகாரிகளுமாவர். சூனிய வாதிகளின் கொள்கை பழைய சமுதாய முறைகள் முற்றிலும் கலைந்து அழிக்கப்பட்டு நவசமுதாயம் அமைக்கப்படல் வேண்டுமென்பதாகும் இவர்கள் புரட்சிக்கு வழிவகுத்ததுடன் மன்னனைக் கொல்லவும் சதி செய்தார்கள். 1870 இல் இரசியாவில் இரு பிரதான கருத்துக்கள் தோன்றின. ஒன்று சமூகவுடமை வாதிகள் சாத்வீகமுறையில் விவசாயிகளுக்கு அறிவு புகட்ட முயன்றனர். இவர்களின் தலைவர் இலவ்ரோப் என்பவராவர். ஆட்சியறு வாதிகள் விவசாயிகளைப் புரட்சியில் ஈடுபடுமாறு தூண்டினார்கள். இவர்களைப் பொலிசுப்படை கைது செய்து பலரை சைபீரியாவிற்குக் நாடுகடத்தியது. இப்புரட்சி அடக்கியொடுக்கப் பட்டது.

சூனியவாதிகளும் புரட்சியில் ஈடுபட்டார்கள். 1876 – 78 ஆம் ஆண்டிற்கிடையில் பல வீதிப் புரட்சிகள் நடைபெற்றன இராணுவம் மிக மோசமாக இதனை அடக்கியதால் மன்னனைக் கொல்ல நான்கு முறை சதி செய்யப்பட்டது. அரச அதிகாரிகள் பலர் கொலை செய்யப்பட்டார்கள். மன்னன் இராணுவ நடவடிக்கைகளை விடுத்து சமாதானம் செய்ய முற்பட்டான், ஆனால் 1881 ஆண்டு மார்ச் 13 ஆம் திகதி அலெக்சாந்தர் போலிசுப் புரட்சியாளனின் குண்டிற்கு இலக்கிகாகி மரணமானான்.

இவரின் பின் மூன்றும் அலெக்சாந்தர் அரசனானான். (1881 - 94) இவரது ஆலோசகர்களும் சர்வாதிகாரிகள். எனவே பிற்போக்குவாதத்தையும் வல்லாட்சியையும் மீண்டும் ஸ்திரப்படுத்தினர். சூனியவாதிகள் கொலை செய்யப்பட்டார்கள், நாடுகடத்தப்பட்டார்கள். கல்வியும் பத்திரி

கையும் கட்டுப் படுத்தப்பட்டன. பழைய மாளிய முறை யமைப்பு புகுத்தப்பட்டது. செமித்வோக்களின் அதிகாரங் கள் குறைக்கப்பட்டது. மக்கள் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இரசியாவிற்கும் பிரான்சிற்கும் ஏற்பட்ட இருவர் நட் புறவு உடன்படிக்கையால் பிரான்ஸ் நிதி உதவியளித்தது. கைத்தொழிற் புரட்சி இரசியாவிலும் ஏற்பட்டது. கைத் தொழிற்சாலைகள் தோன்றின. போக்குவரத்து வசதிகள் விருத்தியாகின, தொழிலாளர் வகுப்பு தோன்றியது, தொழிற் சங்கங்கள் தோன்றின. அதன் மூலம் பொதுவு டமைக் கருத்துக்கள் நாடெங்கும் பரவின.

இரசியாவின் கடைசிமன்னனான இரண்டாம் நிக்லஸ் 1894 இல் அரசனானான். 1904 ஆம் ஆண்டு இரஷியாவுக்கும் யப்பானிற்கும் நடந்த போரில் இரசியாவிற்கு கிடைத்த தோல்வியால் தொழிலாளர் புரட்சி செய்யத் தொடங்கினர். செயின்ட் பீற்றஸ்பேக்சிஸ் தொழிலாளர் கேப்பன் அடிகளின் தலைமையில் 1905 இல் வேலை நிறுத்தம் செய்தனர். ஊர் வலமாக மன்னனின் மாளிகையை நோக்கி தொழிலாளர் சென்ற போது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலகம் அடக் கப்பட்டது. தொடர்ந்து பல அரச அதிகாரிகளை தொழி லாளர் கொன்று குவித்தார்கள். இந் நாள் 'செஞ்ஞாயிறு' எனப்பெயரிட்டழைக்கப்பட்டது.

இரசிய மக்கள் சர்வாதிகார ஆட்சியாலும், சமூக அமைப்பாலும் மிகவும் கீழ் நிலையில் வாழ்ந்தனர். பிரான் சைப் போன்று பிரபுக்கள், குருவாயம், ஊழியர் என்ற மூன்று பிரிவினர் காணப்பட்டனர். சனத் தொகையில் பெரும் பான்மையினரான ஊழியர் மாற்றம் வேண்டிக் கிளர்ச்சி செய்தனர். இவர்களுக்கு தூண்டுதல் அளித்தவர் களில் அறிவுப் புரட்சியாளர்களும் அடங்குவர். தொல்சுத் தோய், தேர்கனேவ், தொசுத்தேவ்சிக்கி ஆகியோர் இவ்வுரிமைத் தம்பக்கம் இழுத்து கல்வி அறிவையும் தாராள சிந்தனையையும் ஊட்டினர். சமூகவுடைமைவா திகளும் சீர்திருத்தம் கோரினர் மார்க்சிம் கோர்க்கி என்பவர் மார்க்சினுடைய தத்துவங்களைத் தொழிலாளரிடையே

பரப்பினர். இதனால் புரட்சிவாத சமூகவுடமை வாதம் வளர்ந்தது சமூகக் குடியாட்சிக் கட்சி பிளவு பட்டு லெனின் தலைமையில் ஒரு பகுதியும் (பொல்ஸ்விக்கர்) துருஸ்கி தலைமையில் ஒருபகுதியும் பிரிந்து நின்றது (மென்சுவிக்கர்) பொல்ஸ்விக்கர் பலாத்கார முனையில் புரட்சியை வழி நடத்தினர். மென்சுவிக்கர் சாத்வீகமுறையில் புரட்சி செய்தனர். பொதுமக்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாராளு மன்றம், சமத்துவம், பத்திரிகை, பேச்சு மதச் சுதந்திரம் என்பனவற்றை தருமாறு மன்னனிடம் கோரிக்கை விடுத்தனர் மன்னர் செவிசாய்க்கவில்லை. வெளிநாட்டு யுத்தங்களும் மன்னனுக்குத் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டேயிருந்தன. ஜெர்மனுடன் இரசியா நடத்திய போரைச் சமாதான மூலம் நிறுத்த மன்னன் விரும்பிய போது அதிகாரிகள் தடுத்தனர். அரசனே ஆட்டிப் படைத்த அதிகாரி இரசபுட்டீன் சுட்டுக் கொல்லப்பட்டான். விவசாயிகள் கிளர்ச்சி செய்தார்கள். இராணுவம் யுத்தம் செய்ய மறுத்தது. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். 1917 மார்ச் 8 ஆம் திகதி பெற்ரோ கிராட்டின 'பாண்' கலகங்களைத் தொடர்ந்து தொழிலாளர் தாமாகவே புரட்சியை வழி நடத்தினர். இராணுவமும் புரட்சியாளருடன் சேர்ந்து கொண்டது. டூமா சபையின் வற்புறுத்தலால் மார்ச் 15 ஆம் திகதி மன்னன் பதவி துறந்தான்.

இரசியாவில் தற்காலிக அரசாங்கம் அமைக்கப் பட்டது. கெரென்சிக்கி அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். இவருக்கும் சாத்வீக போராட்டக் காரருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டதால் இலெனினும் துருஸ்க்கியும் 1917 நவம்பர் 7 ஆம் திகதி அரசாங்கத்தைக் கைப்பற்றினர் இலெனின் அரசின் தலைவர் ருஸ்க்கி வெளிநாட்டமைச்சரானார். இது ஒக்டோபர் புரட்சி என அழைக்கப்பட்டது.

வெளிநாட்டு யுத்தங்களாலும் உள்நாட்டு கலகங்களாலும் இலெனின் கஷ்டப்பட்டார். பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டு, மக்கள் கலகம் செய்தனர். இலெனின் பலாத்கார முறையில் கலகங்களை அடக்கினர். 1918 யூலை இரண்டாம் நிக்கலஸ் சுட்டுக்கொல்லப்பட்டார். 1919 இல்

இரசியாவுடன் போர் செய்த ஐரோப்பிய நாடுகள் பின் வாங்கின. 1918 யூலை 10 ஆம் திகதி நடைபெற்ற மகா நாட்டில் தொழிலாளர்க்கு விசேட சலுகையும் வாக்குரிமையும் அளிக்கப்பட்டு இலெனின் இரசியாவின் முடிசூடா மன்னனாக ஆட்சி செய்தார்.

அத்தியாயம்: 3

கைத்தொழிற் புரட்சி

17 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பியாவெங்கும் பொருளாதார, சமூக அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. கல்வி மறுமலர்ச்சியாலும் நாடு காண்பயணங்களாலும் 'கவரப்பட்ட நாடுகளுள் இங்கிலாந்தும் ஒன்றாகும். இவற்றின் உந்தலால் பல குடியேற்றங்களை ஐரோப்பியாவில் மட்டுமன்றி ஆசிய நாடுகளிலும் இங்கிலாந்து அமைத்திருந்தது. 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் தொடக்கம் குடியேற்ற நாடுகளின் மூலதனம் இங்கிலாந்தில் வந்து குவியலாயது. வர்த்தகக் கொம்பனிகள் உலகின் பல பாகங்களுடனும் வியாபாரம் செய்தன. இங்கிலாந்தின் அரசியல் நிலையும் பொருள் உற்பத்திக்குச் சாதகமாக அமைந்தது இவ்வாறு பொருள் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும் கைத்தொழிற் புரட்சிக்கு வழி வகுத்தது. கைத்தொழிலிலும் விவசாயத்திலும் இப் புரட்சி பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இது இங்கிலாந்தில் மட்டுமன்றி உலகின் பொருளாதாரம், சமூகம் கலாசாரம் ஆகிய துறைகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது முதல் முதலாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடு இங்கிலாந்து. இதனைத் தொடர்ந்து பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகளிலும் பின்னர் படிப்படியாக ஏனைய நாடுகளிலும் கைத்தொழில் மயமாக்கப்பட்டன. இன்று கைத்தொழில் மயமாக்கலில் முன்னணி வகிக்கும் நாடுகள் ஐக்கிய அமெரிக்காவும் யப்பானுமாகும், அதேவேளை ஆசியா, ஆபிரிக்காவிலுள்ள சில நாடுகளில் இன்னமும் கைத்தொழில் மயமாக்கப்படவில்லையென்றே கூறலாம். அவைபெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றங்களாக விருந்து அண்மைக் காலங்களில் சுதந்திரமடைந்தவையாகும்.

கைத்தொழிற் புரட்சி விவசாயத் துறையில் ஏற்படுத்திய தாக்கங்கள்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டின் கைத் தொழிலினதும் விவசாயத்தினதும் வளர்ச்சியில் தங்கியுள் ளது ஒன்றில் ஏற்படும் வளர்ச்சி மற்றையதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் இங்கிலாந்தில் திறந்த வயல்கள் எல்லாம் வேலியடைத்து பெருநிலப் பரப்பாக்கப்பட்டது அத்துடன் சிறு நிலத்துண்டுகள் வைத்திருந்த விவசாயிகள் அவற்றை நிலப்பிரபுக்களுக்கு விற்று விட்டு நகர்ப்புறங்களை நோக்கிச் சென்றனர். பருத்தி புடவை உற்பத்தியால் தம்பளி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஆடுகள் வளர்ந்த வயல்வெளிகள் மீண்டும் கோதுமை பயிரிடப்பட்டது. திறந்த வயல்கள் அடைக்கப்பட்டதால் புதுக்கருவிகளையும் புதுமுறைகளையும் தோட்ட முதலாளிகள் பயன் படுத்தினர். புது விஞ்ஞான முறைகளை விவசாயத்தில் புகுத்தினர் பெத்ரோல் என்பவராவர். இவர் எழுதிய நூலில் விதைகளைக் குளைத்தல், மாற்றுப் பயிரிடல் என்பனபற்றி விளக்கினர். இதனை 1730 தவுன் சென்ட் என்பவர், மாற்றுப் பயிர் செய்கை முறையில் வெற்றி கண்டமையால், இங்கிலாந்தில் இம்முறை பல தோட்டங்களில் கடைப்பிடிக்கப்பட்டது இதனால் பெருகி வரும் சனத்தொகையின் தேவைக்கேற்ப உற்பத்தி பெருகியது.

பேக்வல் என்பவர் விலங்கு வளர்ப்பில் பெருமாற்றம் ஏற்படுத்தினர். முன்னர் எருதுகள் வேலைக்கும் ஆடுகள் உரோமத்திற்கும் வளர்க்கப் பட்டன. இம்முறையை மாற்றி ஆடு மாடுகளை உணவிற்காக வளர்க்கும் முறையை அறிமுகம் செய்தார். ஆர்தர் யங் இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாட்டு விவசாய முறைகளை ஆராய்ந்து புதிய முறைகள் பற்றி நூல்களை எழுதினர் இம்முறைகளைக் கடைப்பிடித்து ஒல்க்கம் கோக் கோதுமை பயிரிடுவதில் வெற்றி கண்டார் பசளையிடுதல், மாற்றுப் பயிர்ச்செய்கை என்பன, இங்கிலாந்து முழுவதும் பரவியது. 1793 இல் விவசாய இலாகா ஆரம்பிக்கப்பட்டது. 1810 வரை

ஆர்தர்யங் செயலாளராக கடமையாற்றினர். விவசாய சஞ்சிகைகள் வெளியிடப்பட்டு விவசாய அறிவுக்களிடையே பரப்பப்பட்டு நவின கருவிகளும் தொழிநுட்ப முறைகளும் பயன்படுத்தப்பட்டது.

கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் நெசவுக் கைத்தொழில்

இங்கிலாந்தில் மூலப்பொருட்கள் பெருமளவில் வந்து குவிந்தமையாலும் வியாபாரம் பெருகியமையாலும் பொருட்களின் உற்பத்தி அதிகரிக்க வேண்டியது அத்தியாவசியமாயிற்று. அத்துடன் தொழில்வசதிகள், மூலதனம், மூலப்பொருட்கள் என்பன ஒருங்கே கிடைத்தமையும் கைத்தொழிற் புரட்சிக்கு வழிகோலியது. நீராவி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதும் அதன் உபயோகத்துடன் உலோகத் தொழிலும் அபிவிருத்தியடைந்ததும் இதனுடன் தொடர்பாக விவசாயம், போக்குவரத்து, வாணிபம் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று மாற்றமும் வளர்ச்சியும் பெற்றன.

புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கருவிகள் பருத்திப் புடவைத் தொழிலில் முதலில் உபயோகிக்கப்பட்டன. 1733 இல் ஜோன் கே, பறக்கும் நூழியை கண்டு பிடித்தமையால் நான்குபேர் ஒரு புடவையை நெய்த நிலை மாறி ஒருவர் பிறர்உதவியின்றி ஒரு தறியில் நெசவு செய்ய முடிந்தது. இதனால் உற்பத்தி பெருக நூலின் தேவை அதிகரித்தது. இதனைப் பூர்த்தி செய்ய 1764 இல் ஜேம்ஸ் ஆகிறிஸ் என்பவர் நூற்கும் சென்னியைக் கண்டுபிடித்தார். இதனால் புடவைக் கைத்தொழிலின் உற்பத்தி அதிகரித்தது.

நீர்ச்சட்டகம் என்ற நூற்கும் இயந்திரத்தை இறிச்சார்ட் ஆக்ரைட்டு (1767 - 70) கண்டு பிடித்தார் இந்த இயந்திரம் நீர்ச் சக்தியினால் இயங்கியது இது ஆலைகளிலேயே இயக்க வல்லது. 1776 ஆம் ஆண்டு மியூல் என்ற புதுக் கருவி கண்டு பிடிக்கப்பட்டது. இதன் மூலம் நெசவாளரின் தேவைக்கு மிஞ்சியநூல் நூற்கப்பட்டது. 1782 இல் ஜேம்ஸ்

வாட் நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தமையால் இதன் மூலம் இயக்கும் வலுத் தறிமை 1785 இல் எட்மண்டு காட்ரைற் கண்டு பிடித்தார் ஏராளமான துணி உற்பத்தி செய்ய இது உதவியது. 15 ஆண்டுகளுள் இவ் இயந்திரம் இரும்பினால் செய்யப்பட்டது. இது மட்டுமன்றி ஒருபுடவையை வெண்மையாக்க, நிறமூட்ட பல மாதங்கள் பிடித்தது. இம் முறையை 1774 இல் சீல என்பவர் குளோறினைக் கண்டு பிடித்தமையால் இரண்டு நாட்களில் செய்யப்பட்டது. 1785 இல் சிலிண்டர் அச்சிடுமுறை கண்டுபிடிக்கப்பட்டதால் அச்சிடும் வேலை மிகவிரைவாக நடைபெற்றது. 1830 இல் நெசவுத் தொழிலில் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட ஆலைத் தொழிலாக இயங்கியது.

இரும்புக் கைத்தொழில்

நெசவுத் தொழிலில் ஏற்பட்ட மாற்றங்கள் இரும்புக் கைத் தொழிலின் வளர்ச்சிக்குதவின. இரும்பை உருக்குவதற்கு மரக்கரி பாவிக்கப்பட்டது. இம் முறை சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டதால் இரும்பை உருக்குவதற்கு எரி பொருளைக் கண்டு பிடிக்க வேண்டிய தேவையேற்பட்டது. 1709 இல் ஆபிரகாம்டாபி மரக்கரிக்குப் பதிலாக சுட்ட கரியைக் கண்டு பிடித்தார். 1783 இல் நீராவி இயந்திரம் இரும்புத் தொழிலில் அதிகளவு பயன் படுத்தப்பட்டு வண்டிகள் இழுக்கவும் இயந்திரங்களை இயக்கவும் பயன்படுத்தப்பட்டன. 1790 - 1850 இடைப்பட்ட காலத்தில் இரும்பை உரிக்குவதற்கு நிலக்கரி பயன் படுத்தப்பட்டது. யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களும் புகையிரதமும் இரும்பினால் செய்யப்பட்டன. புகையிரதப் பாதையமைக்கவும் பெருமளவு இரும்பு பயன்பட்டது. முதலாவது இரும்புக்கப்பல் 1812 இல் செய்யப்பட்டது. 1856 இல் என்றி பெசிமர் கண்டு பிடித்த பெசிமர் முறையால் உருக்கின் உபயோகமும் பெருமளவு அதிகரித்தது.

நிலக்கரித் கைத்தொழில்

18 நூற்றாண்டின் தொடக்கத்தில் வீட்டுத் தேவைகளுக்காகப் நிலக்கரி பயன்படுத்தப்பட்டது... மேற்பட்டை மட்டுமே அகழ்ந் தெடுக்கப்பட்டது. ஆழமான

படைகளை, அகழ்ந்தெடுப்பதற்கு நியூகமன் என்பவர் நீரி றைக்கும் முறையைக் கண்டுபிடித்தார் இதனால் அதிகளவு நிலக்கரி அகழ்ந்தெடுக்கப்பட்டு உபயோகமும் அதிகரித்தது. 1815 இல் சேர் அம்பிறிடேவி காப்பு விளக்கை கண்டு பிடித்தபின் ஆழமான சுரங்கங்களில் தீப்பிடிக்கும் பயமின்றி வேலை செய்யக் கூடியதாகவிருந்ததுடன் நிலக்கரியை ஏற்றிச் செல்வதற்கு புகையிரதமும் பாவனைக்கு வந்தது. இவ்வாறு நிலக்கரி கூடுதலாக அகழ்ந்தெடுக்கப்பட்டமையால் இறம்பை உருக்குவதற்கும் எரிபொருளாகவும், பயன் படுத்தப்பட்டது. நவீன கைத் தொழில் ஆலைகள் தோன்றுவதற்கு நிலக்கரி வளமும் காரணமாக அமைந்தது.

கைத்தொழிற் புரட்சியில்
போக்குவரத்தும் தொடர்பாடலும்

18 நூற்றாண்டில் கால்வாய்ப் போக்குவரத்து குறைந்த செலவில் நடைபெற்றது. இதனால் பெருமளவு கால்வாய்கள் வெட்டப்பட்டு போக்கு வரத்து நடைபெற்றது. இவை பிரித்தானியாவின் அபிவிருத்திக்குப் பெரும் தொண்டு செய்த போதிலும் அவைகளைப் போக்கில் புகையிரதங்களின் போக்கு வரத்திற்குப் பயன்படுத்த பட்டமையால் இவை கைவிடப்பட்டது.

இங்கிலாந்தில் 19 ஆம் நூற்றாண்டில் தெருப் போக்கு வரத்து சூதிரைகள் மூலம் நடைபெற்றது. தெருக்கள் நவீன முறையில் அமைக்கப்படவில்லை இதில் நவீனமுறையைப் புகுத்தியவர்கள் தெல்பட்டு, மக்கடம் இருவருமாவர் 1811 இல் மக்கடம் இன்றைய தெருக்கள் அமைக்கும் முறையை அறிமுகப் படுத்தியமையால் கைத்தொழில் துறையில் பின் தங்கிய இடங்கள் நகரங்களுடன் இணைக்கப்பட்டன.

அடுத்துப் புகையிரதப் போக்கு வரத்தில் பெருமாற் றத்தைப் புகுத்தியவர் ஜோர்ஜ் ஸ்டீபன்சன் என்பவராவர். 1814 இல் நீராவிச் சக்தியினால் இயங்கும் புகையிரதத்தைக் கரியிழுப்பதற்குப் பயன் படுத்தினர். இதனால் இலிவப்பூல் மான்செஸ்டர் புகையிரத வீதியமைக்கப்பட்டது. 1839 இல்

இவர் ரெக்கட் என்ற பெயர் பெற்ற புகையிரதத்தைக் கண்டு பிடித்ததுடன் புகையிரதப் போக்குவரத்தின் எழுச்சி ஆரம்பமாயிற்று.

உள்நாட்டு போக்கு வரத்து மட்டுமன்றி .வெளிநாட்டுப் போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட்டது ஆரம்பத்தில் மரத்தினால் செய்யப்பட்ட கப்பல்கள் இரும்பினாலும் பின்னர் உருக்கினாலும் செய்யப்பட்டன 1787 இல் இரும்பினால் செய்யப்பட்ட படகுகளும் போக்கு வரத்திற்குப் பயன்பட்டன.

கைத்தொழிற் புரட்சியின் சாதக பாதகங்கள்

கைத்தொழிற் புரட்சியினால் மக்களின் வாழ்க்கை முறையும் பொருளாதார அமைப்பும் மாறியது. 19 நூற்றாண்டு பிரித்தானியா உலகத்தின் தொழிற்சாலையென வர்ணிக்கப்பட்டது மக்கள் கைத்தொழிலைப் பிரதான தொழிலாகக் கொண்டு நகரங்களில் குடியேறினர் விவசாயம் இரண்டாம் இடத்தை வகித்தது பிரித்தானியாவின் ஏகாதிபத்தியப் போட்டி சந்தை வாய்ப்புக்களைப் பெறும் போட்டியாக மாறியது குடிசை தொழில்கள் கைத்தொழில்கள் என்பன பெரும் தொழிற்சாலைத் தொழிலாக மாறியமையால் குடிமக்களில் பெரும்பாலோர் தொழிலாளிகளாக மாறி நகர்ப்புறங்களில் குடியேறினர் முதலாளிகள் என்ற வகுப்பினர் தோன்றி தொழிலாளிகளின் உழியத்தைச் சுரண்டினர். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் நீண்ட நேரம் அபாயகரமான வேலைகளைக் குறைந்த கூலிக்குச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். வசிப்பிடங்களும் சூழலும் சுகாதார மற்றவையாகக் காணப்பட்டன. நீராவியும், நிலக்கரியும் இயக்கும் சக்திகளாகப் பயன் படுத்தப்பட்டமையால் நகரங்கள் திட்டமிடப்படாமல் உருப் பெற்றன. இதனால் தொழிலாளர் நோய், வறுமை, கூடிய வேலை நேரம் ஆகிய இரண்டாலும் துன்புற்றனர். ஒஸ்டின், ஜோன் ஸ்டுவட்மில் போன்றோர் பிரபுத்துவ ஆட்சியைக் கண்டித்து நூல்களை எழுதினர்.

தொழிலாளரின் நலனுக்காகப் பாடுபட்டவர்கள் ரொபட்ஓவன், அசினிபிரபு ஆகியோராவர். அசினிபிரபு

தொழிற்சாலை விதிகளின் தந்தையென அழைக்கப்பட்டுள்ளார். 1833 இல் பாராளுமன்றத்தில் தொழிற்சாலை விதி இவர் முயற்சியால் நிறைவேற்றப்பட்டது. 9 வயதினர் வேலை செய்யக் கூடாது 13 வயதிற்குட்பட்டவரின் வேலை நேரம் 9 மணித்தியாலம் 13-18 வயதினருக்கு வேலை நேரம் 12 மணித்தியாலயம் ஆக்கப்பட்டது. 1847 இல் நிறைவேறிய சட்டப்படி வேலைநேரம் 10 மணியாக்கப்பட்டது. 1824 இன் பின் தொழிலாளர் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை உலகெங்கும் பரவி இன்று தொழிலாளர் நலன் பேணும் சங்கங்களாகத் திகழ்கின்றன.

இவ்வாறு பிரித்தானியாவில் தோன்றிய முகத் தொழிற்புரட்சி ஐரோப்பா வெங்கும் பரவி பிற்காலத்தில் விமானம், ரொக்கட், கணனி, அணுசக்தி வலு, தன்னியக்கப் பொறிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு பிரித்தானியா முன்னோடியாகத் திகழ்ந்தது.

அத்தியாயம்: 4

குடியேற்ற வாதத்தின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி

15 ஆம் நூற்றாண்டில் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய நகர்ப்புறச் சமுதாயம் ஒன்று, ஐரோப்பாவில் உருவாகியது. இக்காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கல்வியின் மறுமலர்ச்சியும், நாடுகாண் பயணங்களும் இப்புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்குக் காரணிகளாயின.

கல்வியின் மறுமலர்ச்சி: ஐரோப்பிய வர்த்தகக் குழுவினர், தரைமார்க்கமாக ஆசிய நாடுகளுடன் வர்த்தகஞ் செய்தனர். தரை மார்க்கமான பாதை, கொன்ஸ்தாந்திநோபிள் ஊடாக நிகழ்ந்து வந்தது. 1453 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிளை துருக்கியர் கைப்பற்றினர். அதனால் ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்கும் இடையிலானவர்த்தகப் பாதை மூடப்பட்டது. கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்த அறிஞர்கள், அங்கு

பேணிப் பாதுகாத்து வைத்திருந்த அறிவு நூல்களோடு ஐரோப்பாவிற்கு இடம் பெயர்ந்தனர். அதன்காரணமாக ஐரோப்பாவில் கல்வியின் மறுமலர்ச்சி ஏற்பட்டது. நவின சிந்தனையார் தோன்றினர்.

கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்து புலம் பெயர்ந்துவந்த அறிஞர்கள், ஐரோப்பிய நகர வர்த்தகங்களால் ஆதரிக்கப் பட்டனர். ஜேர்மனி நாட்டவரான யோன் குற்றன் பேர்க் அச்சுக் கலையைத் தொடங்கிவைத்தார். அச்சிடும் முறை ஏற் பட்டதால், கல்வியின் மறுமலர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. பல நூல்கள் அச்சுவாகனமேறின.

இக்காலகட்டத்தில் தோன்றிய விஞ்ஞானிகள், பூமி பற் றிய புதிய கருத்துக்களை வெளியிட்டனர். நிக்கலஸ் கொபர் நிகஸ் (1473 - 1543), கலிலியோ கலிலி (1565 – 1642), கெப்ளர் (1574-1630), லியனாடோ டாவின்சி (1452-1519) ஆகியோர் இக்காலகட்ட அறிஞர்களாவர். வியனாடோட வின்சி, மைக்கல் ஆஞ்யலோ என்போர் சித்திரக்கலைக்குத்பெருந் தொண்டாற்றினர். லியனாடோடாவின்சி, தான் செய்ய விரும்பிய எந்திரங்களைப் படங்களாக வரைந்து வைத்தார் கொபர்நிகஸ், கெப்ளர் என்போர் வானசாஸ்திரத்தில் பெரு உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டனர். கலிலியோ என் பவர் தொலைநோக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்தார். ஹார்வி என்பவர் குருதிச் சுற்றோட்டத்தையும், சேர் ஐசக் நியூற்றன் புவியீர்ப்பு இயக்க விசையையும் முதன்முதல் அறிந்து கூறினர். இவ்வாறு புதிய எண்ணக்கருக்கள் கல் வியின் மறுமலர்ச்சியால் உருவாகின.

நாடுகாண் பயணங்கள்; கல்வியின் மறுமலர்ச்சிக்கு ஊக்கம ளித்த ஐரோப்பிய வர்த்தகக் குழுவினர், கிழைத்தேசங்க ளுக்குச் செல்வதற்கான கடல்வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு மாலுமிகளுக்கு உற்சாகம் தந்தனர். திசையறிகருவி, புதிய தேசப்படங்கள் என்பன நாடுகாண் பயணங்களுக்கு ஊக்கந் தந்தன. அவ்வகையில் பிறிஸ்தோபர் கொலம்பஸ் (1451–1506) வாஸ்கொடகாமா (1460 - 1542), பேர்டினந்து மகெலன் (1480 - 1521) ஆகியோர் குறிப்பிடத்தக்கவரா வர். கொலம்பஸ் அந்திலாந்திக் சமுததிரத்தில் மேற்காகப்

பயணம் செய்து, அமெரிக்காவுக்கு கடற்பாதை கண்டார். வாஸ்கொடகாமா ஆபிரிக்காவை நன்னம்பிக்கை முனையாகச் சுற்றி, இந்தியாவை அடைந்து புதிய வழி கண்டறிந்தார் மகெலன், உலகினைச் சுற்றி வந்து, பூமி கோள வடிவமானது என நிருபித்தார். இந்த நாடுகாண் பயணங்கள் உலகின் பரப்பைச் சுருக்கச் செய்ததோடு, சர்வதேசப் பிணக்குகள் தோன்றுவதற்கும் வழிபமைத்தன.

ஏகாதிபத்தியங்கள்: குடியேற்றவாதத்தின் விளைவாக உலகில் ஏகாதிபத்தியங்கள் தோன்றின. ஒரு நாடு மற்றொரு நாட்டின்மீது செலுத்தும் ஆதிக்கம் இதுவாகும், ஏகாதிபத்தியங்கள் தோன்றுவதற்கு மூன்று முக்கிய காரணிகள் ஏதுக்களாயின. அவை:

1. வர்த்தகத் தரைமாற்றம் தடைப்பட்டமை
2. கல்வியின் மறுமலர்ச்சி
3. புதியகடற்பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டமை

எனவே இம்மூன்று பிரதான காரணங்களே குடியேற்றவாதத்திற்கு அடிப்படையாக அமைந்தன இதற்கு காரணிகளாக ஐரோப்பியா நாடுகளில் புதிதாக உருவாக்கப்பட்ட பிரங்கி, பிஸ்டல், மஸ்கெட் போன்ற வெடிமருந்துப்போர் ஆயுதங்களும், கடற்பயணத்திற்குரிய கப்பல்கட்டும் கலையும் காந்த திசையறி கருவியும் விளங்கின. ஆனால் ஐரோப்பியருக்கு முன்பதாகவே கிழக்காசியாவில் அச்சு, வெடிமருந்து, காந்தக்கருவி என்பன உபயோகத்திலிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

குடியேற்றவாத வளர்ச்சிப்போக்கில் பதினைந்தாம், பதினாறும் நூற்றாண்டுகளில் முதன் முதலாக போர்த்துக்கல், ஸ்பெயின், ரஷியா, இங்கிலாந்து, பிரான்ஸ் என்பனவும், பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்து, ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம் எனபனவும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் டென்மார்க், நோர்வே என்பனவும் முக்கிய இடம் வகிக்கின்றன.

பதினாறும் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் பிரேசில், இந்தியாவின் மேற்குக்கரை, ஆபிரிக்க மேற்குக்கரை, கிழக்கிந்திய தீவுகளையும், ஸ்பானியர் மத்திய அமெரிக்கா, தென்

அமெரிக்கா, கியூபா, கிஸ்பானியோலா நாடுகளும் ஒல்லாந்தர் வடஅமெரிக்கா மேற்கிந்திய தீவுகளையும், ஆபிரிக்காவின் சில பாகங்களையும் கைப்பற்றியிருந்தனர். அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள் என்று இன்று அழைக்கப்படும் நாடுகளையும் ஆபிரிக்காவின் கொங்கோ, இந்தியா, சீனா போன்ற நாடுகளையும் ஆங்கிலேயர் தம் வசமாக்கினர்.

ஐரோப்பிய குடியேற்ற நாடுகள்

உலகத்தின் பல பாகங்களில் இன்று மேற்கு நாடுகளின் நாகரீகம் நிலைபெற்றிருப்பதற்குக் காரணம், ஐரோப்பியர் அப்பாகங்களில் குடியேறியதும் அப்பாகங்களைத் தமது குடியேற்றநாடுகளாக வைத்திருந்ததும் ஆகும். 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் கிழைத் தேசங்களுடன் வியாபாரத் தொடர்பினைக் கொள்ள விரும்பி, ஐரோப்பியநாட்டு மாலுமிகள் மேற்கொண்ட கடற் பிரயாணங்கள் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்க உதவின. திசையறிகருவியின் கண்டுபிடிப்பும், கப்பல் கட்டுந் தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியும் பெருங்கடற் பயணங்களைத் துணிச்சலுடன் மேற்கொள்ள உதவின. இக்கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகளை ஐரோப்பிய நாடுகள் தத்தமது குடியேற்ற நாடுகளாக உரிமை கொண்டாடின. அவரவர் கண்டுபிடித்த இடங்களில் குடியேற்றங்களை அமைக்க ஐரோப்பியர் முற்பட்டனர். வட அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஆபிரிக்கா, கிழைத்தேசங்கள் என்பனவற்றில் ஐரோப்பிய குடியேற்றங்கள் ஏற்பட்டதோடு, அவர்களின் ஆதிக்கத்துக்கும் உட்பட்டன.

குடியேற்ற நாடுகளை உருவாக்கும் முயற்சியில் முதன் முதல் ஈடுபட்ட நாடுகள் போத்துக்கல்லும், ஸ்பெயினுமாகும். இந்நாடுகளைத் தொடர்ந்து ஒல்லாந்து, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி முதலான நாடுகள் குடியேற்ற நாடுகளை உருவாக்கும் முயற்சியில் போட்டியிட்டு இறங்கின. இந்நாடுகள் யாவற்றிலும் மன்னராட்சியே நடைபெற்று வந்தது. நாட்டில் அமைதி நிலவ முடியாட்சியே சிறந்ததென மக்கள் நம்பினர். இந்நாடுகள் தமது ஆதிக்கத்தை மேலும் விரிவுபடுத்த விரும்பி, அயல் நாடுகளுடனும், ஒன்

றுடன் ஒன்றும் போர்களில் ஈடுபட்டன. பிரான்ஸ், ரஷியா ஆஸ்திரியா, பிரித்தானியா, ஜேர்மனி என்பன காலத்துக் குக்காலம் ஏகாதிபதிய வல்லரசுகளாக விளங்கின.

அமெரிக்காக்களில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள்

பதினேந்தாம் நூற்றாண்டின் முடிவுரை ஆசியா, ஐரோப் பாக் கண்டங்களே அடுத்து அமெரிக்காக் கண்டங்கள் அமைந் துள்ளன என்றஉண்மை ஐரோ - ஆசிய நாடுகளுக்குத் தெரிந் திருக்கவில்லை. அமெரிக்காவில் முதன்முதல் கால்பதித்த ஐரோப்பியன் கொலம்பஸ் ஆவான். கொலம்பஸ் தான்கண்டு பிடித்த பிரதேசம் அமெரிக்காக்கண்டம் என்ற உண்மையை உணராமலேயே மத்திய அமெரிக்கா, வெனெசுவெலா, மேற்கிந்திய தீவுகள் என்பனவற்றைக் கண்டுபிடித்தான். இவனைத் தொடர்ந்து 1497 - இல் ஜோன்கபோட் என்பவன் வட அமெரிக்கக் கரையோரங்களைக் கண்டுபிடித்தான். 1500 - இல் கேப்ரோல் என்ற போத்துக்கேயன், தென்னமெரிக் காவிலுள்ள பிறேசில் நாட்டைக் கண்டுபிடித்தான். அதே ஆண்டு அமெரிக்கோ வெஸ்புச்சி என்ற இத்தாலியன் அமெ ரிக்காக் கண்டத்திற்கு ஆய்வுப் பயணம்ஒன்றை மேற்கொண் டதோடு, 'புதிய உலகம்' என்றொரு நூலையும் வெளியிட் டான். இதன் பயனாக, 16 - ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகள் பலவும் அமெரிக்காக் கண்டங்களில் தமது ஆதிக் கத்தை நிலைநாட்ட முயன்றன. ஸ்பானியர், ஆங்கிலேயர், பிரான்சியர் போத்துக்கேயர் ஆகியோர், அமெரிக்காக் கண் டங்களின் பிரதேசங்களைக் கைப்பற்ற முயன்றனர்.

புளோரிடா, மெக்சிக்கோ, பேரு, சிலி, ஆசெந்தீனா, கொலம்பியா முதலான அமெரிக்க நாடுகள் ஸ்பானியருடைய குடியேற்ற நாடுகளாக மாறின. பிறேசில் போத்துக்கேயரின் குடியேற்ற நாடானது. ஐக்கிய அமெரிக்காவின் மத்திய பகுதி (லூசியானா பகுதி)யும், கனடாவின் தென் பகுதியும் பிரான்சியரின் குடியேற்ற நாடுகளாக மாறின. ஆங்கிலக் குடியேற்றங்கள் ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குக் கரை யோர நாடுகளிலும், கட்சன் வளைகுடாப் பகுதிகளிலும்

உருவாகின. பிரான்சும், இங்கிலாந்தும் அமெரிக்காக் கண்டங்களில் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கியதும், ஸ்பெயினதும் போர்த்துக்கல்லினதும் ஏகபோக ஆதிக்கம் குன்றியது.

புதிய கண்டங்களில் கிடைத்த பொன், வைரம் முதலான இயற்கை வளங்கள் ஐரோப்பிய நாடுகளை, இக்கண்டங்களில் குடியேற்றங்களை அமைக்கத் தூண்டின. போர்த்துக்கேயர் பிறேசிலிலிருந்து தங்கம், வைரம் என்பவற்றைப் பெருமளவில் போர்த்துக்கல்லிற்கு எடுத்துச் சென்றனர். ஆங்கிலேயர் வட அமெரிக்காவில் முதலமைத்த குடியேற்றம் வேர்ஜீனியாவாகும். இங்கு புகையிலைத் தோட்டங்களை, ஆபிரிக்க அடிமைகளின் உதவியுடன் ஆரம்பித்தனர். 17 ம் நூற்றாண்டிற்குப் பின் புதிய கண்டங்களில் ஆங்கிலேயரின் குடியேற்ற நாடுகளே அதிகளவில் உருவாகின. நியூபவுண்லாந்து, ரோட்தீவு, நியூ இங்கிலாந்து, பகாமாத் தீவுகள், மேரிலாந்து, யமேக்கா, கரோலினா, கயானா என்பன ஆங்கிலக் குடியேற்றங்களாகின.

புதிய கண்டங்களில் ஆங்கிலேயக் குடியேற்றங்களே சிறப்பாக அமைந்தன. ஏனைய நாடுகளின் குடியேற்றங்கள், குடியேற்ற நாடுகளிலுள்ள வளத்தைச் சூறையாடித் தாய் நாட்டிற்கு எடுத்துச் செல்வதாகவும், ஆங்கிலேயரின் குடியேற்றங்கள், உண்மையாகவே குடியேறி, குடியேற்ற நாடுகளின் வளத்தைப் பெருக்குவதாகவும் அமைந்தது. ஆங்கிலேயர் குடியேறிய நாடுகளில் பயிர்ச் செய்கையிலீடுபட்டார்கள். தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அடிமைகளை அமர்த்திக் கொண்டனர். இதனால் அடிமை வியாபாரம் பெருகியது.

அமெரிக்காக் கண்டங்களில் ஆதிக்கம்பெற ஒல்லாந்தர் முயன்றனர் 17-ம் நூற்றாண்டில், மேற்கிந்திய தீவுகள், சட்சன் நதிப்பள்ளத்தாக்கு, கயானா என்பன ஒல்லாந்தர் வசமிருந்தன. ஆனால், இந்நாடுகளைத் தமது குடியேற்ற நாடுகளாகக் கருதாது, வியாபாரத் தலங்களாகத் கருதிய தாலேயே, இவற்றை ஆங்கிலேயரிடம் இழக்க நேர்ந்தது.

ஆபிரிக்காவில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்ற நாடுகள்

ஆபிரிக்காவை 'இருண்ட கண்டம்' என்று கூறுவர். 19 ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதிவரை அக்கண்டத்தின் பெரும்பகுதி பற்றி வெளியுலகம் அறிந்திருக்கவில்லை. 15-ம் நூற்றாண்டில் ஆபிரிக்காக் கண்டத்தில் ஐரோப்பியர்கள் பலர் ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டனர். மத்தியதரைக்கடலைச் சார்ந்த வட ஆபிரிக்கப்பகுதியில் முஸ்லீம்கள் குடியேறியிருந்தனர். இந்தியாவிற்குக் கடல்வழி காணும் முயற்சியில் ஈடுபட்ட போர்த்துக்கேயர், ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகக் கடற்பிரயாணம் செய்தனர். 1488-ஆம் ஆண்டு பார்த்தலோமியோ டயஸ் என்ற போர்த்துக்கேயக் கடற்பிரயாணி ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரமாகப் பிரயாணம் செய்து நன்னம்பிக்கை முனையை அடைந்தான். வாஸ்கொடகாமா என்பவன் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, இந்தியாவை வந்தடைந்தான். இதன் பின் போர்த்துக்கேயர் இனி, அங்கோலா, மொசாம்பிக் முதலிய கரையோரப் பகுதிகளில் வியாபாரத்தலங்களை அமைத்துக் கொண்டனர். அத்தோடு ஆபிரிக்கா முழுவதற்கும் தானே உரிமை எனப் போர்த்துக்கல் உரிமை கொண்டாடியது. எனினும், ஆபிரிக்கா முழுவதையும் கட்டிக்காக்கின்ற பலம் போர்த்துக்கல்லிற்கில்லை. அதனால், ஏனைய ஐரோப்பிய நாடுகள் தமது வியாபாரத்தலங்களை ஆபிரிக்காவில் அமைக்க முற்பட்டனர். ஆபிரிக்காவில் பிரான்ஸ், ஸ்பெயின், போர்த்துக்கல், ஜேர்மனி, பிரித்தானியா, இத்தாலி, பெல்ஜியம் முதலான ஐரோப்பிய நாடுகள் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டன.

19-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நில ஆராய்ச்சியாளர்கள் பலர், ஆபிரிக்கக் கண்டத்தின் உட்பகுதிகளுக்குப் பயணங்களை மேற்கொண்டு, வெளியுலகிற்கு உண்மைகளைத் தெளிவுபடுத்தினர். புரூஸ், மங்கோபார்க், பார்த், லிவிங்ஸ்டன், ஸ்ரான்லி போன்றோர் இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். அதனால் ஐரோப்பிய நாடுகள் ஆபிரிக்

காலைப் பிடித்துப் பிரித்துக் கொள்ளப் பலத்த போட்டியிட்டன. பிரான்சும், பிரித்தானியாவுமே முதலில் ஆபிரிக்காவில் நாடுகளைப் பிடிக்கமுயன்றன. அவற்றைத்தொடர்ந்து ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஸ்பெயின் என்பனவும் முயன்றன.

சகாராப் பாலைநிலத்தில் மேற்கு ஆபிரிக்காவின் பெரும் பகுதி பிரான்சியரின் வசமானது. மடகஸ்கார், மொரோக்கோ, அல்ஜீரியா, நைகர், சாட், சோமாலிலாந்து என்பன பிரான்சியக் குடியேற்றங்களாக அமைந்தன. ஸ்பானியர் தமது குடியேற்றங்களை ஆபிரிக்காவின் மேற்குக் கரையோரத்தில் ஸ்பானிய சகாரா (ரியோடி ஒரோ) விலும் ஸ்பானியகினியிலும் அமைத்துக் கொண்டனர். ஆபிரிக்காவில் கமரூன், தென்மேற்கு ஆபிரிக்கா, கிழக்கு ஆபிரிக்கா, ரோகோலாந்து என்பன ஜேர்மனியக் குடியேற்ற நாடுகளாக உருவாகின. கம்பியா, சிராலியோன், கோல்ட் கோஸ்ற், நைஜீரியா, பொர்ஸ்வானா, றொடீசியா, தென்னபிரிக்கா, உகண்டா, கெனியா, எகிப்து, சூடான், எரிட்ரியா, பிரித்தானிய சோமாலிலாந்து என்பன இத்தாலியக் குடியேற்ற நாடுகளாகவும், பெல்ஜியன் கொங்கோ பெல்ஜியத்தின் குடியேற்ற நாடாகவும் உருவாகின. 1914-ஆம் ஆண்டு அபிசீனியாவும் லைபீரியாவும் மட்டுமே சுதேசி நாடுகளாக விளங்கின.

ஆசியாவில் ஐரோப்பிய ஆதிக்கம்

கீழைத்தேச நாடுகளில் இந்தியா, இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள், பிலிப்பைன் தீவுகள் என்பன ஐரோப்பியக் குடியேற்ற நாடுகளாக இருந்துள்ளன. மேலைநாடுகளுக்கும் கீழைநாடுகளுக்குமிடையே வெகுகாலமாக வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வாஸ்கொடகாமாவின் இந்திய வருகையின் பின் கீழைநாடுகளில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர், ஸ்பானியர் என்போர் இடைவிடாது முயன்றனர்.

இந்தியா, இலங்கை, கிழக்கிந்தியத் தீவுகள் என்பவற்றைப் பொறுத்தளவில் வியாபாரத் தலங்களை ஏற்ப

டுத்தியவர்கள் போர்த்துக்கேயராவர். கோவா, பம்பாய், சான்தோம், கூக்ளி, கொழும்பு என்பன போர்த்துக்கேயரின் வியாபாரத்தலங்களாக விளங்கின. பதினேழாம் நூற்றாண்டில் ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர் என்போர் கீழைத்தேசங்களில் வியாபாரத் தலங்களை நிறுவமுயன்றனர். அதனால் அவர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன ஒல்லாந்தர் 1639 - இல் யாகர்த்தாவைக் (யாவா) கைப்பற்றினர்கள். 1658 - இல் இலங்கையும் அவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டது. கிழக்கிந்திய தீவுகள், இலங்கை, இந்தியாவில் சில பாகங்கள் (பழவேற்காடு, சூரத்து, நாகபட்டினம், கொச்சி) என்பன ஒல்லாந்தர் வசமாயின. இதே காலத்தில் ஆங்கிலேயர் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். ஆங்கிலேயர் இந்தியாவிலும் ஒல்லாந்தர் கிழக்கிந்திய தீவுகளிலும் தமது வியாபாரத்தை நடத்தினர்.

பிரான்சியர் 1668 - இல் சூரத்தில் ஒரு வியாபாரப் பண்டகசாலையை அமைத்துக்கொண்டனர். பின்னர் பாண்டிச்சேரி, மசூலிப்பட்டினம் என்பனவும் பிரான்சியர் வசமாயின. ஆனால் 58 -ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவற்றைப் பாதுகாக்கப் பலமின்றி இழந்தனர். இந்நூற்றாண்டில் பிலிப்பைன் தீவுகளில் ஸ்பானியர் ஆதிக்கம் செலுத்தினர். எனினும், கீழைத்தேய நாடுகளைத் தொடர்ந்தும் தமது குடியேற்றநாடுகளாக வைத்திருக்க மேற் குறிப்பிட்ட ஐரோப்பிய நாடுகளால் இயலவில்லை.

ஏகாதிபத்தியப் போர்கள்

18 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் குடியேற்ற நாடுகளில் சுதந்திரப் போர்கள் தோன்றின. அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயருக்கும், பிரித்தானிய ஆங்கிலேயருக்கும் இடையில் அமெரிக்கச் சுதந்திரப் போர் செய்து, சுதந்திரம் பெற்றனர். பிறேசில் போர்த்துக்கல் ஆட்சியிலிருந்து 1882 இல் சுதந்திரம் பெற்றது.

இருபதாம் நூற்றாண்டில் ஆபிரிக்காவில் தேசிய உணர்ச்சி தோன்றியது. ஐரோப்பியரின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த

ஆபிரிக்க நாடுகள் சுதந்திரவெறி அடைந்தன. ஐரோப்பிய நாடுகள் தமக்கு இழைத்த கொடுமைகளையும், அவர்களால் தமது நாட்டின் செல்வங்கள் சுரண்டப்பட்டதையும் இந் நாடுகள் உணர்ந்தன. அதனால், சுதந்திர இயக்கங்கள் ஆபி ரிக்கநாடுகளில் உருவாகின.

முதலில் இத்தாலியின் ஆபிரிக்க ஆதிக்கம் ஒழிக்கப்பட் டது. 1948 – இல் எதியோப்பியா சுதந்திரநாடாக அமைக் கப்பட்டது. எரிட்ரியா இந்நாட்டுடன் சேர்க்கப்பட்டது. 1949 - இல் லிபியா (திரிப்போலி) சுதந்திரநாடானது. 1953 – இல் எகிப்து ஐக்கிய அரபுக் குடியரசானது 1956 - இல் சூடான் சுதந்திரமடைந்தது. பிரான்ஸ் அல்ஜீரியாவை வெற்றிகண்டு, சுதந்திரம் பெற்றது. இதனைத் தொடர்ந்து கானா (கோல்ட் கோஸ்ற்), கொங்கோ, நைஜீரியா முதலான நாடுகள் சுதந்திர நாடுகளாக மாறின.

இந்தியாவில் கிளர்ந்தெழுந்த சுதந்திர உணர்ச்சியின் பயனாக, ஆங்கிலேயர் இந்தியாவிற்கு 1947 - ம் ஆண்டு சுதந் திரம் வழங்கினர். 1948 - ம் ஆண்டு கிழக்கிந்திய தீவுகள் சுதந்திரம் பெற்றன. இந்தோனேசியக் குடியரசு ஏற்படுத் தப்பட்டது. ஸ்பானியர் வசமிருந்த பிலிப்பைன் தீவுகள் 1898 - ல் ஸ்பெயினுக்கும் அமெரிக்காவிற்கும் ஏற்பட்ட போரின் பயனாக, அமெரிக்கா வசமாயின. 1946 – ஆம் ஆண்டு இத்தீவுகள் சுதந்திரம் பெற்றன. 1948 - இல் இலங்கை ஆங் கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

4. 2. முதலாம் உலகமகாயுத்தம்

முதலாம் உலகப் போர் ஐரோப்பிய நாடுகளிடையே சுமார் 5 ஆண்டுகளாக நடைபெற்றது. ஐரோப்பிய நாடு கள் உலகில் பல பாகங்களிலும் குடியேற்றங்களை ஸ்தா பித்திருந்தமையினால் இப் போர் உலகம் முழுவதும் பரவி யது எனலாம். இப்போரில் ஐரோப்பிய வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷியா, ஆஸ்திரியா, துருக்கி, இத்தாலி என்பனவும் ஜப்பான், அமெரிக்கா என் பனவும் ஈடுபட்டன.

இப்போரின் தீயவிளைவுகளால் உலகநாடுகள் பலவும் பாதிப்புற்றதாலும் இப்போரை உலகப்போர் என்பது பொருத்தமானதே.

உலகப் போர் தொடங்கியதற்கு உண்மையான காரணம் பெரிய வல்லரசுகள் ஒவ்வொன்றும் ஏனையவற்றுடன் கொண்டிருந்த ஆத்திரம். ஒவ்வொரு நாட்டுத் தலைவரும் தாம் சமாதானத்தை விரும்புவதாகவும் ஏனையோர் ஏற்றுக்கொள்ள வில்லை என்று தப்பான எண்ணம் கொண்டிருந்தமையும், ஒவ்வொரு நாடும் ஏனைய நாடு எந்நேரமும் தன்னுடன் போர்புரியுமென எண்ணிப் பயந்திருந்தமையும், இரும்புருக்குத் தொழிற்சாலைகள் பெருகினமையால் பெருமளவு படைக்கலங்கள் செய்து குவிக்கப்பட்டமையும், இந்த உற்பத்தியாளர்கள் போரை வரவேற்றமையும், உலகமக்கள் தமது அரசியல் விவகாரங்கள் முழுவதையும் அரசியற் தலைவர்களிடமும் இராஜதந்திரிகளிடமும் ஒப்படைத்து தாம் ஒதுங்கி வாழ்ந்தமையால் இவர்கள் தமது விருப்பத்தின்படி நாட்டை வழி நடத்தியமையும் போர்மூள அடிப்படைக் காரணமாக அமைந்தன.

ஆஸ்திரியா - ஹங்கேரிய இளவரசனுகவிருந்த பிரான்சு பெர்டினந்து அந்நாட்டு விஷயங்களில் ஓரளவு அதிகாரத்தை, சிலாவியருக்கு அளிக்க விரும்பியவன். இவன் தமது மனைவியுடன் போஸ்னியாவிற் பயணம் செய்தபோது, சேர்பியா நாட்டில் பற்று மிகுந்த போஸ்னிய இளைஞனுல் செரஜேவோ என்ற நகரத்தில் கொலை செய்யப்பட்டான். சேர்பிய அரசாங்கம் இக் கொலைக்கு உடந்தையாக இருந்ததினுல் குற்றம் சுமத்தி இக் கொலையைத் தமக்குச் சாதகமாக்க ஆஸ்திரிய அரசியல் நிபுணர் எண்ணம் கொண்டு ஜெர்மனியின் அங்கீகாரத்துடன் சேர்பியாவை போரிடுமாறு அழைத்தனர். ஆஸ்திரியா பல நிபந்தனைகளை சேர்பியா மீது விதித்தது. இதற்கு சேர்பியா இணங்க மறுத்தது சேர்பியாவிற்கு ருஷியா உதவ முன் வந்தது. 1914 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28 ஆம் திகதி சேர்பியா மீது ஆஸ்திரியா ஹங்கேரி போர் தொடக்கியது. ஜெர்மனி ருஷியாவுடன் போர் தொடுத்தது, பிரித்தானியா பெல்ஜிய நாட்டின் நடுநிலைமையைக்

சாக்குப்படி பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய இரு நாடுகளையும் கேட்டது. ஆயினும் ஜெர்மனி இதனை மறுத்து பெல்ஜியத் தினூடாகப் படைகளை அனுப்பியது. பிரான்சின் கடற்கரை யை ஜெர்மனியின் கடற்படையினின்றும் காக்க பிரித்தானி யா முன்பே உடன்படிக்கை மூலம் உறுதிப்படுத்திருந்தது. பெல்ஜியம் பிரித்தானியரை உதவும்படி கோரிக்கை விடுத்தது எனவே ஆகஸ்ட் 4-ம் திகதி பிரித்தானியா ஜெர்மனியுடன் போர் தொடங்கியது.

இவ்வாறு வல்லரசுகளுக்கிடையே போர் தொடங்கியதும் விடுதலை வேண்டி நின்ற ஏனைய இராச்சியங்களும், போரின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டலாமென நம்பிய ஏனைய வல்லரசு நாடுகளும் திடீரென போரைத் தொடங்கின. இப் போர் உலகம் முழுவதும் பரவலாக நடைபெறத் தொடங்கியது.

இப்போரினால் பெருந்தொகையான மக்கள் இறந்தார் கள். பல நாடுகளும் நகரங்களும் அழிக்கப்பட்டன போருக் குப் பயன்படுத்தப்பட்ட வெடி மருந்துகளாலும் அணுக் குண்டுகளாலும் மக்களது ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. விஷவாயுக்களினால் பல தொற்று நோய்கள் பரவின இந் நோய் பரவ பசி, பட்டினியும் காரணமாய் அமைந்தது. கடலிலும், தரையிலும் போர் நடைபெற்றமையால் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியும் இறக்குமதியும் தடைப்பட்டது இதனால் உலக நாடுகள் பலவற்றில் மக்களுக்கு உணவு அளிப்பதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனால் மக்கள் நோய், பசி, பட்டினி என்பனவற்றால் கஷ்டப்பட்டார்கள்

உலகின் பல நாடுகளில் போர் நடைபெற்றமையாலும் மக்கள் விவசாயத்தைக் கைவிட்டுப் போரில் ஈடுபட்டமை யாலும் உணவுப் பொருட்களின் விளைச்சல் குறைந்து உண வுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல கைத்தொழில் தொழிற் சாலைகள் போரினால் அழிக்கப்பட்டதால் மக்கள் வேலையில் லாமல் திண்டாடினார்கள். இதனால்நாடுகளின் வர்த்தகமும் பாதிக்கப்பட்டது.

அடுத்ததாக இப்போரினால் வல்லரசு நாடுகளிடையே சமாதான உடன்படிக்கைகள் செய்யப்பட்டன.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக வேர்செயில்ஸ் என்ற இடத்தில் உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது இதனை வேர் செயில்ஸ் உடன்படிக்கை என்பர். இந்த உடன் படிக்கைப்படி 'ஜேர்மனியர்' அல்சேசு - லோறன், றைன் நதியின் இடதுகரை என்னும் இடங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஜேர்மனியர் வசம் இருந்த போர்க்கப்பல்களையும், ஆயுதங்களையும், கைதிகளையும் நேசவல்லரசுகளிடம் ஒப் படைக்க வேண்டும். ஆனால் ஜேர்மனியக் கைதிகள் உடன டியாக விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்பனவும் முக்கியமான நிபந்தனைகளாகும். இவ்வுடன்படிக்கையை 1819 ஆம் ஆண்டு ஜேர்மனியுடன் செய்தார்கள் இதற்கு முதலில் ஜேர்மனி மறுத்தாலும் பின்னர் சம்மதித்தது.

4.3. இரண்டாம் உலக மகாயுத்தம்

முதலாம் உலகப்போரின்பின் ஜேர்மனியின் பொருளா தாரம் மிகுமந்த நிலையில் இருந்தது. வேர்செயில்ஸ் உடன் படிக்கையின்படி ஜேர்மனி பெருந்தொகைப் பணத்தை நஷ்டஈடாகப் பிற நாடுகளுக்குக் கொடுக்க வேண்டியிருந் தது. வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்டபோது இவர் களால் இத்தொகையைச் செலுத்த முடியவில்லை எனவே, ஜேர்மனி அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு நஷ்டஈடு கொடுக்க மறுத்தது. ஜேர்மனிய மக்கள் பொருளாதார மந்தத்தினால் பல கஷ்டங்களை எதிர்நோக்கினர் அத்தோடு வேலையில்லாப் பிரச்சினையும் நாட்டில் நிலவியதால் மக்கள் அரசியல் தலைவர்கள் மீது வெறுப்புற்றனர். இந்நிலையில் தேசிய சோஷலிஸ்டுகள் என்ற கட்சி நாட்டில் தோன்றியது. கொதிப் புற்ற நிலையிலிருந்த இளைஞர்கள் இக்கட்சியைப் பெருமளவு ஆதரித்த இக்கட்சியில் சேர்ந்தனர். ஜேர்மனியில் இளைஞர் கள் நஷ்டஈடு கொடுப்பது நாட்டு மக்களுக்கும் அவமான மென கிளர்ச்சி மனப்பான்மை கொண்டிருந்தார்கள். இக் கட்சியின் தலைவனாக அடோல்ப் ஹிட்லர் பதவி வகித்தான். இக்கட்சி அரசாங்கத் தலைவர்களை நீக்கியதுடன் மக்களிடை யே பிரசாரஞ்செய்து பெருமளவு ஆதரவைப் பெற்றது. இக் கட்சியின் தலைவன் ஹிட்லர் முதலாம் உலகப்போரில் சாதா

ரண உத்தியோகத்தருக்குப் பங்குபற்றியதால் அவனுக்குத் தோல்வியால் கிடைத்த அவமானத்தால் ஏனைய நாடுகளைப் பழிவாங்க வேண்டுமென்ற மனப்பான்மை கொண்ட தலைவனாக இருந்ததுடன், தனது நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் படைத்தவனாகவும் திகழ்ந்தான்.

இவனது திட்டங்களையும், கொள்கைகளையும் ஜேர்மனிய மக்கள் மட்டுமன்றி ஜெர்மனிய இராணுவ வகுப்பினரும் ஆதரித்தனர். ஜேர்மனிய இளைஞர்களும் கூடுதலாக ஆதரித்தமையால் 1933 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஹிட்லர் வெற்றி பெற்று அரசாங்கத்தைக் கைப்பற்றி சர்வாதிகாரியானான். இவன் சர்வாதிகாரனாக ஆட்சி செய்தமையும், இவன் பிரதம மந்திரியானமையும் இரண்டாம் உலகப்போருக்குக் காரணமாக அமைந்த கொடுஞ் செயல்களுக்கு வித்திட்டது எனலாம்.

ஜேர்மனியின் முழு அதிகாரத்தைக் கைப்பற்றிய ஹிட்லர் போர் தொடங்குவதற்கு ஆயத்தமானான்.

இப்போர் 1939 ஆம் ஆண்டு தொடக்கம் 1945 ஆம் ஆண்டு வரை நடைபெற்றது. சில நாடுகள் போரில் ஈடுபடாது நடுநிலைமை வகித்தன. போலாந்தை ஜேர்மனி கைப்பற்றியது இந்நாட்டின் தலைநகர் வார்சோவும் பல இடங்களும் குண்டுகளால் அழிக்கப்பட்டன. சோவியத் ஐக்கியநாடு போலாந்தின் கீழ்ப்பாகங்களைக் கைப்பற்றியது. ரான்சிபப் பகுதி மகினோமதில் என்ற அரணுக்குப் பக்கத்தில் அணிவகுத்து நின்றது. தென்னுபிரிக்காவில் பிரித்தானிய பொதுநல நாடுகள் தாய் நாட்டிற்காகப் போர் செய்ய முன் வந்தன. தென் அயர்லாந்து ஒரு பக்கமும் சாரவில்லை இத்தாலியும் ஜப்பானும் முதலில் போரில் ஈடுபடவில்லை.

ஜேர்மனியப் படைகள் பிரான்சில் வெற்றி பெற்றன. பிரித்தானிய படைகள் முதலில் தோல்வி கண்டன.

பிரித்தானியப் படைகளைத் தோல்வியுறச் செய்தாலும் பிரித்தானியாவை வெல்வது ஜேர்மனிக்குச் சிரமமாகவே யிருந்தது. காரணம் பிரித்தானியாவிடம் சிறந்த கடற்படை இருந்தது அத்துடன் ஒடுங்கிய ஆங்கிலேயக் காலுவாயை

ஜேர்மனி சடப்பதும் சிரமமாக இருந்தது. ஜேர்மனியர் பிரித்தானியரது படைகளுக்குப் பெருமளவு சேதம் விளைவித்தார்கள் ஆகாயப்படை மூலம் குண்டுகளைப் பொழிந்து பிரித்தானியத் துறைமுகங்களையும், ஆகாய விமான நிலையங்களையும், தாக்கினர்கள். இவர்களைப் பிரித்தானியா எதிர்த்து வென்றது. ஜேர்மனியரால் பிரித்தானியாவை வெல்லமுடியவில்லை.

பிரித்தானியாவை ஜேர்மனி கைப்பற்ற போரிடவேண்டிய நேரத்தில் இத்தாலி வடஆபிரிக்காவிலும், கிழக்கு பிரிக்காவிலும் போர்செய்தது. 1941 ஆம் ஆண்டில் ஜேர்மனியர் பால்க்கன் குடா நாட்டுத் தேசங்களைக் கைப்பற்றினர் ஆனல் கொன்ஸ்தாந்திநோப்பிளைச் சுற்றித் துருக்கியுத்தம் முடியுப்வரை நடுநிலைமை வகித்தது. கிரேக்க தேசத்துக்கு உதவ பிரித்தானியர் படையனுப்பியும் அப்படை கிரேக்க தேசத்துக்கு ஜேர்மனியரின் படையெடுப்பால் செல்லமுடியாது திருப்பியது. ஜேர்மனியர் கிரேக்கரின் கிறீற் தீவைக் கைப்பற்றினர்.

அடுத்ததாக சோவியத் ஐக்கிய நாடுகளும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் போரில் ஈடுபட்டன. ஜேர்மன் படைகள் சோவியத் ஐக்கியநாட்டுக்குள் புகுந்திருந்தாலும் ரூஷியாவை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

1945 ஆய் ஆண்டில் ஜேர்மனி கிழக்குப் பக்கத்தாலும் மேற்குப் பக்கத்தாலும் தாக்கப்பட்டது. நேசநாட்டுப் படைகள் வட இத்தாலிக்குள் புகுந்தன. இவ்வாறு நடைபெற்ற சண்டையின் போது முசோலினி தனது தோழமக்களால் சிறைப்பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான் சோவியத் படை பெர்லின் நகரைச் கைப்பற்றியது ஹிட்லரும், பல நாட்டுத் தலைவர்களும் தற்கொலை செய்து மாண்டார்கள். 1945 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஜேர்மனிய இராணுவம் சரணடைந்தது. இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகளாலும், சோவியத் ரூஷியாவினதும் ஒத்துழைப்பினலும் இரண்டாம் உலகமகாயுத்தம் முடிவடைந்தது.

இப்போரினல் உலக நாடுகளிடையே பெருமளவு அழிவு ஏற்பட்டது. முதலாம் உலகப்போரில் பயன்படுத்திய ஆயு

தங்களை விடக்கொடிய அணுகுண்டுகளை வல்லரசுகள் பாவித்தமையால் நகரங்கள், தொழிற்சாலைகள் பெருமளவு அழிந்ததுடன் பெருந்தொகையான மக்கள் உயிரிழந்தார்கள். ஒவ்வொரு நாடும் தனது நாட்டு மக்களது நல்வாழ்விற்காகப் பெருந் தொகைப்பணம் செலவழிக்க வேண்டிய நிலையிலிருந்தது. அதேவேளை நாடுகள் ஒவ்வொன்றும் பொருளாதார நெருக்கடிக்கும் ஆளாகின.

ஜேர்மனியின் ஆட்சியின் கீழிருந்த நாடுகளைக் கைப்பற்றிய நாடுகள் ஜேர்மனியை பிரிவினை செய்தார்கள். இரண்டாம் உலகப்போரைத் தொடக்கிவைத்து ஜேர்மனியை கூறுபோட்டு அதன் பலத்தைக் குறைக்க வேண்டுமென பல நாடுகள் விரும்பின. ஜேர்மனி, கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி எனப்பிரிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

யப்பானில் அமெரிக்கப் படைவீரர்கள் நிறுத்தப்பட்டு யப்பான் அமெரிக்கர் வசம் விடப்பட்டது.

4. 4. ஐக்கிய நாடுகள் அமைப்பு

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைவதைக் கண்ட உலக மக்கள் நிரந்தரமான அமைதி நாடுகளில் நிலவச் செய்ய வேண்டுமென்பதற்காக சர்வதேச சங்கம் போன்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவ வேண்டுமென 1944 ஆம் 1945 ஆம் ஆண்டுகளிலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'பெரு மூவர்' எனப் பெயர் பெற்ற ஜனாதிபதி பிறங்லின் றூஸ்வெல்ற், மாஷல் ஸ்டாலின், பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் ஆகியோர் இந்த ஸ்தாபனத்தை நிறுவ அயராது உழைத்தவர்களாவர். இவர்கள் போர்கள் எழாது தடுக்கவும், தேசங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் ஏற்றதாக இத்தாபனத்தை அமைக்கும் அதேவேளை எல்லா நாடுகளையும் இதில் அங்கத்துவ நாடுகளாக்க முற்பட்டார்கள். தூரகிழக்கில் போர் முடிவடையு முன்னரே ஐக்கிய நாட்டுச் சாசன நிபந்தனைச் சாசனம் எழுதப்பட்டு 51 அங்கத்துவ தேசங்களின் கையொப்பத்தையும் பெற்று விட்டனர். 51 அங்கத்துவ நாடுகளுடன் 1945 ஆம் ஆண்டு 24

ஆம் திகதியில் இத்தாபனம் அமைக்கப்பட்டது. இன்று 159 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அதன் தலைமை அலுவலகம் நியூயோர்க் இல் அமைந்துள்ளது.

நோக்கங்கள்:

சர்வதேச சங்கத்தின் நோக்கங்களிலும் பார்க்கக் கூடிய ளவு பரந்த நோக்கம் கொண்ட ஒரு புதிய சர்வதேச அமைப்பாகும். சமாதானத்தை உலக நாடுகளிடையே பாதுகாப்பது மட்டுமன்றி வறுமையை உலகிலிருந்து அகற்றுவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டது. போர்கள் நாடுகளிடையே எழுவதைத் தடுக்கும் அதேவேளை போரினால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து மக்களைக் காப்பதும், சமாதானமும், பாதுகாப்பும் உலக நாடுகளிடையே நிலையாக இடம்பெற வழி வகுப்பதும், இதன் அரசியல் சம்பந்தப்பட்ட கொள்கைகளாகும்.

பொருளாதார முன்னேற்றம் காண்பதும் இதன் மற்றொரு நோக்கமாகும். உலக நாடுகளின் சமூக முன்னேற்றத்திற்கும், உலகமக்களது வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு வேண்டிய உதவிகளைப் பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகள் மூலம் ஆவன செய்தலும் நோக்கங்களாகும்.

அடுத்ததாக மனித அடிப்படை உரிமைகளை வரையறுத்து அவற்றை பிரகடனப்படுத்தி உலக நாடுகளைக் கடைப்பிடிக்கச் செய்து ஒவ்வொரு பிரஜையினதும் உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிக்க வேண்டுமென்பதும், உலகநாடுகளிடையே நீதியை நிலைநாட்டுவதும் இதன் நோக்கமாகும்.

அமைப்பு:- 51 அங்கத்துவ நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் சபையில் இன்று 159 அங்கத்துவ நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இது பொதுச்சபை, பாதுகாப்புச்சபை, பொருளாதார சமூக நலக்கழகம், தர்மகர்த்தா சபை, சர்வதேச நீதிமன்றம் என்ற பிரிவுகளைக் கொண்ட அமைப்பாகும்.

பொதுச்சபை:- இச்சபை அங்கத்துவ நாடுகளைக் கொண்டது இச்சபை வருடத்திற்கு ஒரு முறை கூட்டப்பட வேண்டும் ஒரு அங்கத்துவ நாடு பொதுச்சபைக் கூட்டத்திற்கு ஐந்து

பிரதிநிதிகளை அனுப்பி வைக்கலாம். பாதுகாப்புச் சபையின் தேவைகளுக்காக விசேட கூட்டங்களையும் இச்சபை கூட்டலாம். சமாதானத்தைப் பாதுகாத்தல், சர்வதேசப் பொருளாதாரம், கலாசாரம், சமூகம் கல்வி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பித்தல் இதன் முக்கிய கடமையாகும்.

பாதுகாப்புச் சபை:- நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம், பிரான்ஸ், மக்கள்சீனா ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் நிரந்தர அங்கத்துவமில்லாத 10 பிரதிநிதிகளையும் இச் சபை கொண்டது. மொத்தம் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந் நிரந்தர அங்கத்துவ மற்ற நாடுகளைப் பொதுச்சபை தெரிவு செய்யும் இவர்கள் இருவருடத்திற்கொருமுறை தெரிவு செய்யப்படுவர்.

உலக நாடுகளின் சமாதானத்தைப் பேணும் முக்கிய பொறுப்பு இச்சபைக்குரியது. நிரந்தர அங்கத்துவ நாடுகளும் ஏனைய 9 நாடுகளும் சாதகமாக வாக்களித்தால் தான் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படும்.

பொருளாதார சமூக நலக்கழகம்:- உலகமக்களுக்கு ஏற்படக் கூடிய பொருளாதார, சமூக, அரசியற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இதன் முக்கிய நோக்கம். இதற்கென 15 விஷேச நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சர்வதேசங்களும் இதன் திட்டங்களைச் செயல்படுத்த, இந்நிறுவனம் ஊக்குவிக்கிறது. உலக சுகாதாரத்தாபனம், உணவு விவசாய தாபனம், சர்வதேச தொழில் தாபனம். கல்வி விஞ்ஞானம் கலாச்சார தாபனம் என்பனவும். உலக வங்கி, சர்வதேச நாணய நிதி என்பனவும் பொருளாதார நடவடிக்கைகளில் செயல்படும் நிறுவனங்களாகும்.

சர்வதேச நீதி மன்றம்:- ஹேக் நகரில் இம்மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இந் நீதிமன்றத்தையும் இதன் கொள்கைகளையும் சில அங்கத்துவ நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை இம்மன்றம் தீர்த்து வைக்கும், ஆனால் சட்டத்தை மீறியவர்களை விசாரணைக்கு அழைப்பதற்கு இம் மன்றத்திற்கு அதிகாரம் இல்லை இரு தரப்பினரும் விரும்பித் தமது பிரச்சினைகளைச் சமர்ப்பித்தால் மட்டுமே இம் மன்றம் விசாரித்துத் தீர்ப்பு வழங்கமுடியும்.

தர்மகர்த்தா சபை:- சுய உரிமையற்ற நாடுகளை ஆட்சி செய்யும் நாடுகளின் அறிக்கைகளைப் பார்வையிடுவது-ன் அவை சுதந்திரம் பெறவும். மனிதாபிமானத்துடன் நடாத்தப் படவும் வழி வகைகளைக் கைக்கொள்வது இதன் நோக்கம்.

செயலகம்:- ஐக்கிய அமெரிக்காவில் நியூயோர்க் என்ற நகரத்தில் அமைத்துள்ளது. கட்டிடமும் நிறுவப்பட்டிருக்கும் இடமும் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் உரிய பொது இடம். இத்தாபனத்தை செயல்படுத்துவதற்கு சகல அங்கத்துவ நாடுகளும் நிதியுதவியளிக்க வேண்டும் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் பிரதிநிதியும் இத்தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்ற நிரந்தரமாக நியமிக்கப்படுபவர். பொதுச் செயலாளரே பிரதான உத்தியோகஸ்தர் ஏனைய நிறுவனங்களுக்கு அதன் நடவடிக்கைகளைச் செயல்படுத்த இக்காரியாலயம் அவ்வப்போது கட்டளைகளைப் பிறப்பிக்கும்.

சமாதானத்தைப் பேணுவதற்காக இத்தாபனம் நிறை வேற்றும் தீர்மானங்களை செயல்படுத்துவதற்கெனப் பாதுகாப்புப்படையொன்று அமைக்கப்பட்டுள்ளது அங்கத்துவ நாடுகளால் அனுப்பப்படும் படைகள் இத்தாபனத்தின் ஆணைப்படி சமாதானத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

ஆய்வுக்குரிய நூல்கள்:

1. இலங்கையின சுருக்க வரலாறு —
எச். டபிள்யு கொடிறிங்டன், இலங்கை அரசகரும மொழி வெளியீடு - 1960.

2 புது உலக சரித்திரம்
வி. சி நிக்கலஸ், ஆசிர்வாதம் வெளியீடு - 1968.

3. உலக வரலாறு
டி. ஆர். இராமச்சந்திரன், தமிழ் வெளியீட்டுக் கழகம் சென்னை -1968.

4. புதுமுறைச் சரித்திரம்
ஆ. சபாரத்தினம், கலைவாணி புத்தக நிலையம் யாழ்ப்பாணம - 1968.

5. இந்தியாவின வரலாறு
கொ அ. கன்தோனவா - சி. ம. போன் காரத்லேவின் முன்னேற்றப் பதிப்பகம மாஸ்கோ. - 1987.

6. இலங்கைச் சரித்தரம - மு. இளையதம்பி - 1959.

7. உலகச் சரித்தரம - மு இளையதம்பி - 1959.

8. History of Ceylon 1505 - 1796
Father S. G Perera 1949

9 History of Ceylon 1796 - 1948
Father S. G Perera - 1949

10. நம முன்னோரளித்த அருஞ்செல்வம்
இரண்டாமபாகம் ஜீ. ஸி. மெண்டிஸ் - 1968.

11 இலங்கை வரலாறு
சி எஸ். கதிர்காமநாதன், வாதர் வெளியீடு -1967

12 சமூகக்கல்வி நூலகள்
கல்வித்தீணைக்கள வெளியீடுகள்

13 சமூகக்கலவி நூலகள்
கமலா குணரான, ஸ்ரீலங்கா வெளியீடுகள்

14 கலைக்களஞ்சியம்
1 - 10 தமிழநாடு வெளியீடுகள்.

சமூகக்கல்வி / வரலாறு
பாட நூல்கள் பயிற்சிகள்

சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 6 விலை.	18	50
சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 7 விலை.	25	00
சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 8 விலை.	25	00
சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 9 விலை.	28	00
சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 10 விலை.	30	00
சமூகக்கல்விப் பயிற்சி ஆண்டு: 11 விலை.	28	00
சமூகக்கல்விப் குறிப்புகள் ஆண்டு: 7 விலை.	16	00
சமூகக்கல்விப் குறிப்புகள் ஆண்டு: 8 விலை	20	00
சமூகக்கல்வித் தேசப்படவேலை ஆண்டு: 10 விலை	22	00

வரலாறு - ஆண்டு: 6, 7, 8, 9, 10,
என்பன அச்சில்

வரலாறு - ஆண்டு: 11 விலை.	25	00
தேசப்படத்தொகுதி (அற்லஸ்) விலை.	30	00
Latest Map of World விலை.	5	00
Latest Map of Sri Lanka விலை	5	00
இடவிளக்கவியற் புதிய வழக்கக்குறியீடுகள் விலை.	5	00

விற்பனையாளர்கள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.

கமலம் பதிப்பகம், 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

சமூகக்கல்வி / வரலாறு
நூல்கள் – பயிற்சிகள்

சமூகக்கல்வி வரலாறு 6ம் ஆண்டு

வரலாறு 7ம் ஆண்டு

வரலாறு 8ம் ஆண்டு

வரலாறு 9ம் ஆண்டு

வரலாறு 10ம் ஆண்டு

வரலாறு 11ம் ஆண்டு

விபரங்களுக்கு:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்

அபிராமி அச்சகம், 225 ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்.